ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம் — ரூ. 3—0
6-மாத சந்தா ,, — ,, 1—12
வேளி நாட்டிற்கு ,, — ,, 5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 ச்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி-வரு பங்குனி-மீ 29-உ (10—4—1932) | மலர் 50

பலமுள்ளவீரபுருடனுக

குமரனுக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண்மன மோத்துவாழ, இல்லற இன்பம் அனுபவிக்க, பத்திர பாக்கியம் பெற வழியில்லையென வருந்துபவர்கள்

தங்கபஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபாரதாது புஷ்டியும், பலமும், பசியும், சுத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதியற்புத சுகந்தரும்.

18-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 21-நாளுக்கு ரூ. 10.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி S. I

மாதர்களுக்கு

இதுதான்வேண்டியது

கொர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கொர்ப்பாசயம் சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கொர்ப்பம் உண்டாகும் மிக்க அதுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்.

உலகப்பிரசித்திபெற்ற

மஹா சந்தனுதித் தைலம்.

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்திலால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டைக்குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம்செய்யும். வெட்டைச்சூடு, திரேககாங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும். 24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்புவலி, நரம்பு தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பிரமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள் நாவறோசிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பலகாரணங்கள் இருந்தாலும் மலசிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலசிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலசிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர் யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இலவசமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)

பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.

புதுவைமுரசு

ஆசிரியர்:-
அ. பொன்னம்
பலனர்,
அவர்கள்.

24 பக்கங்களோடு அழகிய முறையில் திங்கட்கிழமைதோறும் வெளிவரும் சுயமரியாதைச் செந்தமிழ் வாரப் பத்திரிகை. வருட சந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 5.
மாதிரிபிரதி இலவம்!

மானேஜர்,
"புதுவை முரசு"
புதுச்சேரி (F. இந்தியா)

"சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, நுகிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.
கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

சோமதேவ இருஷியின் வரப்பிரசாத ஔஷதம்.

குஷ்டம்

தீராதகர்மரோயென்றெண்ணி கஷ்டப்படுவதேன்?

எக்காரணத்தினாலுமுண்டாகின்ற எவ்வித குஷ்ட நோய்க்கும் அனேக தொத்துவியாதிகளுக்கும சீரான சிகிச்சை முறைகளையும் சிறந்த ஔஷதங்களையும் சாத்மீகத்தோதுக்கிணங்கி அனுபவித்தானந்தப்படுங்கள்.
கோபினல் அவஸ்தைப்படுவோர் ஸ்டாம்புடன் எழுதுங்கள்

பி. ஒ. கேசவவைத்தியர்

Bhaskara Vilasam (S. K. R.) Pharmacy
Cameron Road, Pallithottam, Quilon S I.

Read.

The 'Citizen'

and become a
True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—

The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விரும்பியோக்க விரும்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் பார்சல் போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

"போர் முரசு"

வாரப்பதிப்பு.
ஆசிரியர் ச. ம. சி- பரமசிவம்
தனிப்பிரதி காலணு.
வருட சந்தா ரூ. 1—8—0.
"போர் முரசு"
19, பெரிய செட்டி தெரு,
உறையூர்—திருச்சி.

சென்னை லோக்கல் போர்டு ஆக்ட்.

(1330 வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

தாது புஷ்டிக்கு

"கெய்ரோடைன்"

சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இலவமாக அனுப்புகிறோம். விலாசம்:
ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

கூட்டு.

சனாதாயகத்துவம் நமது கடவுளிடத்திலில்லை.

[கைவல்யம்]

3-ம் பாகம்.

என் பிரியமான தம்பி! உங்கள் குடி-அரசுப் பத்திரிகையில் கடவுளைப் பற்றி பலகுறை பாடுகளை எழுதிக் கொண்டு வருகிறீர்கள். எப்பொழுதோ நமது கடவுளுக்கு இப்பொழுது வேண்டிய ஜனநாயகத்துவம் தெரியாதென்றும் விளங்காதென்றும், இல்லை என்றும் கைவல்யத்தால் உங்களது பத்திரிகையில் எழுதப் பட்டிருக்கிறது. கடவுளுக்கு விளங்காததும், தெரியாததும், இல்லாததும் ஏதாவதுண்டா? சர்வ சக்தியும், சர்வ வல்லமையும் உடையவரல்லவா கடவுள். அப்படி ஜனநாயகத்துவம் கடவுளுக்குத் தெரியாதென்று சொல்லுவது ஒத்துக்கொள்ளக் கூடியதாக வில்லையே?

என்னருமை அண்ணே! உள்ளவாரு உள்ளபடிப் பேசி, சந்தேகங்களை விவகரித்து, சந்தேகம் தீர்ந்து, உண்மை தெரிந்து அதன் வழி நிற்றலே அறிவால் அடையும் பயன். கடவுளைப்பற்றி பல குறைபாடுகள் குடி அரசு சொல்லி வந்ததும் உண்மை. நமது கடவுளுக்கு ஜனநாயகத்துவம் விளங்கா தென்று கைவல்யம் எழுதினது உண்மையேயாகும். அது எப்படி என்பதை சிறிது விளக்கமாகச் சொல்லுகிறேன்.

நமது நாட்டிற் கென்று ஒரு தனி கடவுளை ஏற்படுத்தி வைத்துக் கொண்டிருக்கிறோம். அது நம்மை உலகப் பொதுவாகிய கடவுளின் ராஜியத்திற்குள் புகவொட்டாமல் தடுக்கின்றன. அறிவு மனிதருக்கெல்லாம் பொது வென்பதை உலக முழுவதும் ஒப்புக் கொள்ளுகிறது நமது நாட்டில் மாத்திரம் அக்கொள்கை அங்கீகாரம் பெறவில்லை அது ஏன்? அதற்குத் தடையான ஆதாரங்களென்ன? என்பதை ஆலோசித்துப் பார்த்தீர்களேயானால் நமது கடவுளின் விதிகளும், குறிகியமனமுமே காரணங்களென உணர்வீர்கள். இன்னிலையிலிருக்கும் கடவுளுக்கு விரிந்த உலகத்தின் அறிவின் தன்மை விளங்கா தென்று சொல்லுகிறோம்

சிலருடைய தன் லாபத்தாலும், பாதகச் செயலாலும் விரிந்த அறிவின் தன்மையை சன சமூகத்தினிடைப் பரப்பப்படாமையால், விரிந்த அறிவின் தன்மையாலுண்டாகும் வீர மானுஷீகப் பயிர்ச்சிகளின் லாபமும், ஆபத்திற்குப் பின் வாங்காத விஸ்வாசமும், மானக் கடமைகளில் ஒருமனப் பட்ட பக்தியும் சரணாகதியிலே நிறைவும் மரணத்தையும் விபத்தையும் பயமின்றி அங்கீகாரம் செய்யும் திறனும் நம்மிடையே மறைந்து போய் விட்டன. இதற் கெல்லாம் காரணம் வருணாசிரமக் கொடுமை என்பதை அறிஞர்களும், அனுபோகஸ்தர்களும் ஒத்துக்கொண்டாய் விட்டது. வருணாசிரமக் கொடுமைக்குக் காரணம் நமது தனிக் கடவுள் அல்லவா? அந்தத் தனிக் கடவுளுக்கு ஜாதியில், சமூகத்தில், சமயத்தில், சாஸ்திரத்தில் கொடுமையில்லாத உலகப் பொதுக் கடவுளின் சனாயகத்துவம் தெரியா தென்று சொன்னால் அதை எந்த நியாயத்தால் தடுக்க முடியும்.

வியாபாரம் பிரதான மென்றும் யோக்கியதை கேவலம் ஒரு சிறந்த தந்திர மென்றும், அன்னிய தேசத்தார் அனேகர் வைத்துக் கொண்டிருப்பது போலவே மதம் பிரதான மென்றும் அதன் உண்மை, சத்தியம் நீதிகளெல்லாம் கேவலமென்று தள்ளப்பட்டும், கட்டுப்பாடே கடவுள்கட்டளை என்றும் சொல்லி வந்து அனுபோகப்பட்டிருக்கும் நமக்கு ஜனநாயகத்துவம் வருமா? அந்த நமது கடவுளுக்குத் தான் அது விளங்குமா?

உண்ணல், களித்தல், கல்வி, பயிற்சி, அரசு, சுயராஜ்யம் இவைகளில் எல்லாரும் பங்குபெற்று சமமாய் வாழ்வதே பொதுக் கடவுளின் நாகரீக உலகத்தில் வழக்கமாக விருக்கிறது அதைத்தான் ஜனநாயகத்துவமென்கிறார்கள். நமது சனாதன தருமக்கடவுளுக்கு அவையனைத்தும் விரோதமாக விருக்கின்றன. எப்படியெனில்.

(உண்ணல்) இன்னின்னவை தான் உண்ண வேணடுமென்கிற விதிகளின் மத்தியில், காட்டுப் புறங்களில் தாழ்த்தப் பட்டவர்களுக்கு பால், தயிர் மோர் விற்பது கூடவில்லை, அவர்களுக்கு சோறு போட ஏற்படும் விசேட சமயங்களில் நெய், மோர் ஊற்றுவதுமில்லை. சில உயர்ந்த சாதியார்களின் வீட்டில் சோறுபோடுவது பாவமென்று சோறு போடுவதேயில்லை. சோற்றுக் கடைகளில் பஞ்சமர்களுக்கு சோறு போடப்படாதென்று பலகையில் எழுதியும் ஒட்டப் பட்டிருக்கிறது. மலையாளத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் அப்பளம் பொறிக்கப்படாதென்றும் பால் பாயாசம் காய்ச்சக்கூடாதென்றும்உயர்ந்த ஜாதிக்காரர்களால் நிர்ப்பந்தம் செய்யப் பட்டே வந்திருக்கிறது.

(களித்தல்) கதை, கச்சேரி, நாடகம் முதலியவைகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தடையேற்படுத்தி இருக்கிறார்கள். தேர், திருநாள் முதலியவைகளில் பல வகுப்புகள் தள்ளப் பட்டிருக்கின்றன.

(கல்வி) கல்விஎல்லோரும்படிக்கப் படாதென்று கடவுளால் சொல்லப் பட்ட வேத சாஸ்திரத்தில் விதிகளிருக்கின்றன. அவ்விதமே நடந்தும் வந்திருக்கிறது. வேத பாடசாலைகளில் பார்ப்பார் தவிர மற்றவர்களைச் சேர்த்துவதில்லை, தேவாரப் பாடசாலையில் சைவர்கள் தவிர மற்றவர்களைச் சேர்த்துவதுமில்லை. சர். அண்ணாமலைப் பள்ளியில்ஆங்கிலேய யூனிவர்சிட்டியாக விருந்தாலும் தத்துவசாஸ்திர வகுப்பில் பார்ப்பார் தவிர மற்றவர்களைச் சேர்த்துவதில்லை. பொதுப்பள்ளியான போர்டு பாடசாலையிலும் தாழ்த்தப் பட்டவர்களைத் தள்ளியே விடுகிறார்கள்.

(பயிற்சி) கல்வியிலும், உத்தியோகத்திலும் பயிற்சியடைவதற்கில்லாமல் நம்மவர்களை மேமே இகழ்ந்து நமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் அவர்களால் நன்மை பிறப்பதைத் தடுத்து அவர்களை உலகம் இகழ்வதுமல்லாமல் நம்மைப் பிறர் கண்டுஇகழவும் அவமதிக்கவும் செய்து கொண்டு வருகிறோம். தாழ்த்தப் பட்டவர்களை தாழ்த்தப்படாதவர்கள் கூடத்தில் சேர்த்துஇருக்கல்லவா பயிற்சியுண்டாகும். மனிதனை மனிதன்கூடத்தில் சேர்த்துக் கொள்ளுவதற்கே கடவுள் சொன்ன சாஸ்திரங்கள் தடையாக விருக்கிறதென்று நினைக்கும் நமக்குப் பயிற்சியின் பலன் எப்படிக் கிடைக்கும்.

(அரசு) ராஜா மகன் ராஜா. பூசாரி மகன் பூசாரி, ஆசாரிமகன் ஆசாரி குருக்கள் மகன் குருக்கள், வைத்தியன் மகன் வைத்தியன், வாத்தியார் மகன் வாத்தியார் என்கிற ஏற்பாடே நமக்குள் அரசு செய்து வருகின்றன நமக்கு இனிமையாகத் தோன்றிய சுதந்திரங்களை பிறர் அனுபவியாமல் தடுக்கவும் சர்வ சாதாரணமாக வழங்கத் தக்க உரிமைகளுக்கு சிறப்புரிமைகளென்றும், பிறப்புரிமைகளென்றும் பெயர் சூட்டிமானுஷீகத்தை அரசால் அவமானம்படுத்தினோம். நமக்குப் பல மென்று கருதிய அவையனைத்தும் நமக்குத் திற்பலமாக மூண்டதும் கண்டோம். அதனால் நம்மை நாமே புண்படுத்திக் கொண்டு பல நூற்றாண்டுகளாக அடியும் உதையும் பட்டு அவமதிப்பிற்கு ஆளுமானோம்.

(சுயராஜ்யம்) சுயராஜ்ய மென்கிற வார்த்தையே நமக்குப் புதிது. ஒரு பிரதேசத்தில் மகத்தானப் பிரிட்டிஷ் ஜாதி யென்று நியாயப் பெயர் பூண்ட ஜாதியொன்று வாசம் செய்கிறது. அந்த ஜாதி யெல்லா விஷயங்களிலும் உண்மையான அனேக மனிதர்களை யுடையது. அவர்கள் வாள் வலியாலும், பணத்தைக் குவிப்பதாலும் மகிமையுண்டாயிற்றென்று நினைப்பதோடு நிற்காமல். தரும மகிமையாலே தான் தங்கள் ஜாதிக்கு மகிமை உண்டாயிற்றென்று நினைப்பதால் அந்த பிரிட்டிஷ்காரர்கள் நியாயம் உண்மை, விடுதலை என்ற ஆதர்சங்களை எதார்த்தமாக நம்புகிறார்கள். அவர்களுடைய இலக்கியத்திலும் இதிகாசங்களிலும், பள்ளியிலும் அவைகள் காட்டப்படுகின்றன. அவர்கள் நம்பிக்கை நிற்கவுமில்லை. முன்னேறுகிறார்கள். அவர்களுடையவாழ்க்கைகள் அவர்கள் சரித்திரத்தின் மூலமாக மாறியும் விலாசமாகியும் வருகின்றன! அந்த ஆங்கிலேயன் ஐரோப்பாவின் விடுதலை காற்றின் தன்னலக்குருட்டுத்தனத்தின் மோகங்களில்லாமல் நமது நாட்டை விசால கண்ணோட்டத்துடன் காண்கிறான். அந்த ஆங்கிலேயர்தான் சுயராஜ்யமென்கிறவார்த்தையை நமக்குச் சொல்லிக்கொடுத்தவர்கள். அந்த ஆங்கிலேயர்கள் கடவுளுக்கப்பாலிருந்தாலும் தானும் வளர்ந்து பிறரும் வளரவேண்டுமென்கிற அவர்கள் நல்லெண்ணத்தை இங்கு அதிகாரத்தில் ஜாரிக்கிடக்கும் ஆங்கிலேயர்கள் நமது ஜாதிக் கொடுமை, சமயக் கொடுமை முதலிய அறியாமை என்னும் காரணத்தைக் காட்டி ராஜதந்திரமென்னும் கத்தியால் பலமாதரியாக வெட்டினாலும் சுயராஜ்யப் பாதையிலேயே நம்மை நடத்தவும் விட்டிருக்கிறார்கள். அதில் நமது உயர்ந்த ஜாதிக்காரர்கள் தாழ்த்தப்பட்டவர்களை அந்தப் பாதையில் இனியும் நடக்க விடுவதில்லை. முனிசிபாலிட்டி, தாலூக்கா போர்டு, ஜில்லா போர்டு முதலிய சுயராஜ்ய மண்டபங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு சேவகன் வேலைகூட கொடுக்கப்படவில்லை என்றால் நம்முடைய நீதியும், நியாயமும், மனிதத் தன்மையும், சுயராஜ்யத் தன்மைக்குப் பொருத்தமுடையதா? மானமுடையவர்களுக்கல்லவா மனிதத் தன்மை வரும். மனிதத்தன்மைதானே சுயராஜ்யம்-

மேற்சொன்ன உண்ணல், களித்தல், கல்வி, பயிற்சி, அரசு, சுயராஜ்யம் முதலியவைகளெல்லாம் மேற்சொன்னபடியே நம்மிடையிருந்து வருகிறது. அப்படியிருந்தால் அது ஜனநாயகத்துவமாகுமா? ஆகாது. அப்படி இருப்பதற்குக் காரணமென்ன? சமய சாஸ்திரங்களில் பொய்யும், புரட்டு, ஏமாற்றும், தந்திரங்களும் எழுதி அதில் மதக் குருக்கள் ஆசனமிட்டிருந்துகொண்டு கடவுளைக்காட்டி அந்த சாஸ்திரமனைத்தும் கடவுள் சொன்னதே என்றும் ஜனசமூகங்களை நம்பச் செய்து ஜனநாயகத்துவத்தைத் தடுத்துக்கொண்டல்லவா இருக்கிறார்கள். அதற்குத் தடையாகயிருக்கும் கடவுள் ஒழிய வேண்டுமே அல்லது ஜனநாயகத்துவத்தை நமது கடவுள் அங்கீகரித்துவிடவேண்டும். இரண்டிலொன்றையேனும்

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

மதங்களும் மன்னரும்.

[திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்.,]

IV.

முன்கட்டுரையில் நாம் மதத்திற்கும், ஒரு நாட்டு மன்னனுக்கும் இருக்கவேண்டிய சம்பந்தத்தைப் பற்றிச் சதே என்பவர் கொண்டிருந்த அபிப்பிராயத்தை ஆராய்ந்து அது நாம் ஒப்புக்கொள்ளக்கூடிய நிலைமையில் இல்லை என்னும் முடிவுக்கு வந்தோம். இனி திரு. கிளாட்ஸ்டன் என்னும் பேராசியல் வாதியின் கொள்கையைசசற்று கவனித்து அதிலும் எவ்வளவு உண்மைகள் கிடக்கின்றன என்று பார்ப்போம். அவர்கூறுவதாவது:—"ஒவ்வொரு அரசாங்கத்துக்கும் ஒருமதம் இன்றியமையாதது. ஒவ்வொரு அரசாங்கமும்தான் அனுஷ்டித்துவரும் மதம் சரியானதாயினும், தவறானதாயினும் அதைத்தன் குடிகளிடம் பரப்பமுயலவேண்டும். ஏனெனின் அவ்வாறு மதப்பிரசாரம் செய்வது ஒவ்வொரு அரசின் முக்கிய கடமைகளுள் ஒன்று" நாம் சதேயின் அபிப்பிராயத்தை ஆராயும்போது எவ்வாறு ஒரு அரசுக்கு மதம் அவசியம் இல்லையென்றும், எவ்வாறு ஒரு அரசு ஒரு மதததைப்பரப்ப அருசதையற்றது என்றும், கண்டோம். இப்பொழுது இங்கு காணவேண்டியது என்னவென்றால் ஒரு அரசின் முக்கிய கடன்களுள் மதப்பிரசாரம் செய்வது ஒன்று என்பதும் அவ்வாறு மதப்பிரசாரத்திற்கும் ஒரு அரசின் லௌகீக மேன்மைக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா என்பதுமே.

ஒரு அரசின் கடமை மதம் பரப்புதல் ஒருக்காலும் ஆகாது. நாம் மேலே கூறியபடி ஒரு அரசின் வன்மையும், அஃதின்மையும் அவ்வரசு தன் குடிகளின் உயிர் முதலியவற்றை அமைதியுடன் காக்கவல்ல திறத்தினின்றும்தான் அறியப்படும். ஆக, ஒரு அரசாங்கமானது சீருடனும், செல்வாக்குடனும் நாட்டின் அமைதிசிதை படாமலும் நடந்துவரவேண்டுமானால் அதன் பிரதான கடன்களைப் பற்றியும் அதன் இன்றியமையாத லக்ஷியங்களைப்பற்றியும் அதன் குடிகளிடம் யாதொருவிதமான அபிப்பிராய பேதம் இருத்தலே கூடாது. அவ்வாறு எந்த ஒரு விஷயத்தின்மீது அரசாங்கத்தின் சம்பந்தமாக அபிப்பிராய பேதங்கள் தன் குடிகளிடம் உண்டாக இடம் இருந்தாலும் அல்லது அபிப்பிராய பேதங்கள் இதுவரை இருந்துவந்தாலும் அந்த விஷயம் அவ்வரசின் முக்கியமான பொதுவான கடன்களுள் ஒன்றல்ல என்று திண்ணமாக நாம் கொள்ளலாம். உலகத்தில் நாம கண்கூடாகப்பார்க்கின்றபடி எண்ணிறந்த மதங்கள் இருத்தலாலும் ஒரு மதத்தைப்பற்றியே தூற்றுக்கணக்கான அபிப்பிராய பேதங்கள் இருத்தலாலும், பலமதங்களைப் பற்றி ஆயிரக்கணக்கான பேதங்கள் வதிவதாலும் இவற்றுள் எந்த மதத்தை ஒருதேசமன்னன் அனுஷ்டிக்கவேண்டும் என்ற கேள்வியைப் பிறப்பித்தபோதும் அல்லது அவ்வாறு அவன் அனுஷ்டித்த மதத்தை அவ்வரசு தன் குடிகளிடம் பரப்புதல் அவன் கடமையாவென்னும் கேள்வியைக்கிளப்பியபோதும் எண்ணிறந்த அபிப்பிராய பேதங்கள் எழுவதன்னியில் பல்லாயிர மண்டைகள் உடைய கோடுமாகையாலும், மதப்பிரசாரம் என்பது ஒரு அரசின் கடனல்ல என்பது ஒவ்வொருவருக்கும் நன்கு விளங்கும். ஆனால் ஒரு அரசின் கடமையாவது அவன் தன் குடிகளின் உயிர், மானம், சொத்து முதலிய உரிமைகளையும், பொருள்களையும் பாதுகாப்பதும் அவ்வாறு பாதுகாக்க எதுவான முறைகளைக்கைப் பற்றுவதும் என்று நாம் கூறின் அதை மறுக்கவோ அல்லது அதன்மீது அபிப்பிராய பேதம் கொள்ளவோ, யாவருக்கேனும் இயலுமோவென்று கேட்கின்றோம். ஒருவன் ஹிந்துவானாலும், முகமதியன் ஆனாலும், கிறிஸ்துவன் ஆனாலும், சோரோஸ்திரியன் ஆனாலும், ஆஸ்திகன் ஆனாலும், நாஸ்திகன் ஆனாலும், இது ஒரு அரசின் கடமை என்பதைத்தடுக்கவேமாட்டான். ஆகவே நாம் இதிலிருந்து பெறக்கிடப்பதுதான் என்ன? ஒரு அரசாங்கதின் கடமை உயிரைக்காப்பதேயொழிய மதத்தைப்பரப்புதல் அல்ல என்பதுதான். ஆனால் ஒரு சிலர் கூறலாம் இதுவரைக்கும் இருந்துவந்த பெருமை வாய்ந்த அரசர்களிற்பலர் ஒவ்வொரு மதத்தையும் பரப்பிக்கொண்டு வரவில்லையா? ஆம் அது உண்மையேயெனினும் அவ்வாறு செய்துவந்த மன்னரின் ஆட்சியில் தன் தேசததில் எத்தகைய குழப்பமும், சண்டை சச்சரவுகளும் உயிர்ச்சேதங்களும் இருந்து வந்துள்ளன வென்பதைக்கவனியுங்கள். வெளிப்படையாக இக்குறிகள் சிலதேசங்களிற் காணப்பட்டு வந்தன. சில தேசங்களில் அம்மன்னனின் படைவலிமைக்கும் பகைக்கும் அஞ்சி அதிருப்தியும், கோபமும் உள்ளுக்குள்ளேயே அவன் காலம் தீரும்வரை ஊடுருவிக்கொண்டே இருந்து பின் திடீரென வெடித்து அவ்வம்ச மன்னரையோ அல்லது நாட்டையோ பாழாக்கி வந்துள்ளன. இங்கிலாந்தில் எலிசபெத் மகாராணி பிராடஸ்டண்ட் மதத்தைப்பரப்பித்தான் வந்தார். ஆனால் அப்போது நாட்டில் உள்ளும் புறமும் உண்டாகிய பல கக்ஷிகளும், விரோதங்களும், சதியாலோசனைகளும் அவற்றால் ஏற்பட்ட யுத்தங்களும் எவ்வளவு? நமது நாட்டில் அசோகரைக்காட்டிலும் அக்கரையோடு ஒரு மதம் பரப்பியமன்னன் இருந்ததில்லை. அவர் தம் அரசும் மற்ற விஷயங்களில் தலை சிற தது. ஆனால் அவர்காலததில் உண்டாகிப் பொங்கிக்கொண்டிருந்த வெகுளியும்,குடிகளின் அதிருப்தியும் அவர் மறைந்தவுடனே திடீரென வெளிப்பட்டு அவர்சந்ததியை அறுத்துவிட்டது. அது அமைதியின் ஆட்சிக்கும், சமயப்பிரசாரத்திற்கும் சம்பந்தம்இல்லாமல் இருப்பதன்னியில் அவையொன்றை யொன்று அழிக்கும் நிலைமையிலும் இருக்கின்றன.

ஆனால் சரித்திரத்தில் நாம் காண்பது என்னவென்றால் தலை சிறந்த அரசியல் முறையைக் கையாடியும், மக்களுக்கு ஆதரவளிக்க வந்துள்ள மன்னர்கள் மதத்தைப்பரப்புவதில் முயற்சித்து வந்ததாகவும் இல்லை, அவ்வாறு அவர்கள் முயற்சியில் வெற்றியுற்றதாகவும் இல்லை என்பதே. ஒருமன்னன் தன் தேசத்தை நன்றாக ஆண்டுவரப் பெற்றிருக்கும் சக்தி அவனது மதப்பிரசார வன்மையைக்காட்டுவதாகவும் இல்லை. ஐரோப்பாவை யெடுத்துக்கொண்டால் எந்த மன்னரின் ஆட்சியின் கீழ் குடிகள் நன்றாகக்காப்பாற்றப்பட்டும், போஷிக்கப்பட்டும், நாகரீகமானது வளர்க்கப்பட்டும்வந்துள்ளவோ, அந்த மன்னருள் எவருக்கேனும் மதத்தைத் தாம் அனுஷ்டிக்கவேண்டும் என்னும் உணர்ச்சியேனும் அல்லது பிறரையனுஷ்டிக்கச் செய்யவேண்டும் என்னும் ஆசையேனும் இருந்ததாகத் தெரியவில்லை. பிரான்சு தேசத்தின் தலை சிறந்த மன்னர்களுள் ஒருவராய நான்காவது ஹென்றி (Henry IV) யை எடுத்துக்கொள்வோம்அவர்தான் பட்டத்திற்கு வந்தவுடன்தனது தேசத்தில் எங்கும் அமைதியென்பதை உண்டாக்கி அதுவரைநாட்டில் நிகழ்ந்துவந்த சண்டை சச்சரவுகளையும் அறவே வெட்டிவீழ்த்தியகற்றினர். நாட்டின் பொருளாதார நிலைமையை சீர்படுத்தினர். தனது தேசத்தின் பெயருக்கே உலகமெங்கும் ஒரு பெரும் பெருமையையுண்டாக்கியதன்றித் தன்னையும் தன்குடிகள் அளவுகடந்த அன்போடு போற்றுமாறும் நடந்து கொண்டார். இதைவிடமேம்பட்ட ஆட்சி காணுவது அரிதே. ஆனால் அவரது மதவுணர்ச்சி எந்த நிலைமையில் இருந்துவந்தது? இவர் நான்குமுறை பிராடஸ்டண்ட் மதத்திற்கும் ரோமன் கத்தோலிய மதத்திற்கும் மாறிமாறிச் சென்றுகொண்டே வந்தார். அவ்வளவு உறுதியான மனம் இவருக்கு மதவுண்மையின்பால் இருந்தது! அதோடுமட்டுமல்ல; இவர் யாதொரு மதத்தையுமேதான் கொள்கையளவிலும் செய்கையளவிலும்அனுஷ்டித்து வரவேயில்லையென்பதும் பலரது துணிபு. ஆகவே இத்தகைய மதவுணர்ச்சியற்றிருந்ததால் இம்மன்னனின் அரசாட்சி நல்லதல்ல அல்லது உத்தமமானதன்று என்று யாரேனும் கூறமுடியுமா? ஒரு அரசாங்கம் எவ்வளவு நன்மையும் மேன்மையும் பெற்றதாக இருக்கவேண்டுமோ அவ்வளவையும் இவரது ஆட்சி தன் குடிகளுக்கு அளித்துவந்ததான் இருந்திருக்கின்றது. மற்றும் ருஷ்யாதேசத்தையாண்டு வந்த மகாபீடர் (Peter the Great) என்னும் மன்னன் தனது அரசாட்சியைத் தலைசிறந்தவைகளுள் ஒன்று என்று அனைவரும் ஒப்புக்கொள்ளும் நிலையில் ஆண்டுவரினும், அவனது மதவுணர்ச்சி மிகக்குறைவுதான். பிரஷ்யா (Prussia) தேசத்தையாண்டுவந்த காத்தரீன் (Catherine) என்னும் சக்ரவர்த்தினியும், பிரடரிக் (Fredrick the Great) என்னும் சக்ரவர்த்தியும் இத்தன்மையரே. இவர்கள் தங்கள் தேசத்தை உள்ளும் புறமும் ஒப்பற்ற நிலைமைக்குக்கொண்டுவந்து மேம்படவைத்து ஆளினும் இவர்களுக்கு மதத்தினிடமோ அல்லது மதத்தைப்பரப்பவேண்டுமென்னும் எண்ணத்திலோ சிறிதளவேனும் பிரியமே கிடைடாது என்பதையாவரும்உணர்வர். ஆகையால் இவர்களது அரசாங்கம் தனது முக்கிய கடன்களுள் ஒன்றைச் செய்து விட்டதெனவோ, அதுசிறந்தது அல்லவென்றோ யாராலேனும் கூறமுடியுமா? ஆகவே இப்பொழுது நாம் இதைப்பற்றி என்ன முடிவுக்கு வரவேணடியிருக்கின்றது? உலகச்சரித்திரத்திலே நாம் இதுவரை கண்டுவந்தபடி சிறந்த ஆட்சியென்று யாவரும் ஒப்புக்கொள்ளும் விதமாக மதவுணர்ச்சியும் மதபபிரசாரமோகமும் மிகந்த மன்னரும் ஆண்டு வந்திருக்கின்றார்கள்.மதவுணர்ச்சியற்றும் மதப்பிரசாரவிசாரம் இல்லாதும் இருந்த மன்னர்களும் ஆண்டுவந்திருக்கின்றார்கள். ஆகையால் ஒரு அரசாங்கம் தன் முக்கிய கடன்களை நிறைவேற்றியுள்ளதா இல்லையா என்று கண்டுபிடிக்க அவ்வரசாங்கம் ஒரு மதத்தை யனுஷ்டித்து வந்ததா வென்றும் அம்மதத்தைத்தன் குடிகளிடம் பரப்பிவந்துள்ளதாவென்றும் நாம் விசாரிக்கவேண்டிய அவசியம் இல்லை. அப்படி நாம் செய்வோமாயின் தற்கால பிரான்சு தேசத்தையும் அமெரிக்கா அரசாங்கத்தையும் மேம்பட்டதல்லவென்று கூறவேண்டிய நிலைமைக்கு வந்துவிடுவோம். அப்படி நாம் கூறின் அது உண்மையாகுமா? உலகத்தில் இன்று அமெரிக்கா தேசத்தைக்காட்டினும் தலைசிறந்த அரசியல் முறை வேறென்னுட்டிலும் கிடையவேகிடையாது. அந்நாட்டுக்குடிகளின் சுதந்திரமும் உடல், உயிர், சொத்து முதலியவற்றின் பாதுகாப்பும் அவர்தம் முன்னேற்றத்திற்கு வரவுதவும், வசதிகளும் அன்னிய நாட்டினர்கண்டு பொறுமை

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

(The Work before us) நாம் செய்யவேண்டிய வேலை என்ன?

சமதர்ம விளக்கம்.

[தோழர் M. சிங்காரவேலு B. A., B. L.,]

(XII)

நாம் செய்ய வேண்டிய வேலை என்ன? என்ற கேள்விக்கு, ஒரே விடையுள்ளதென, பலதோரணை மூலமாக இதுகாறும் எடுத்துக் காட்டி வந்தோம். அந்த விடையாதெனில், சமதர்மத்தை நமது தேசத்தில் ஸ்தாபிக்க வேண்டியது ஒன்றே- சமதர்மமாவதென்ன? சமதர்ம மென்றால், சொத்துரிமை, மத வுரிமை, ஜாதிவுரிமைகள் நீங்கிய வாழ்க்கையாதும். இதனை இந்தக் கடைசி அத்தியாயத்தில் விளக்கி வைப்பாம். சமதர்மத்தை சொத்து, மதம். ஜாதி அற்ற வாழ்க்கை என்றால், இந்த அர்த்தம் எதிர்மறை என்று சொல்லக்கூடும். ஆனால் இந்த எதிர்மறை அர்த்தத்தை விளங்க வைக்கவே, மேல் பதிலேரு அத்தியாயங்களில் சுட்டிக் காட்டி வந்தோம். மதங்களும், ஜாதிகளும், உயர்வு தாழ்வும், மனித வர்க்கத்தில் தோன்றுவதற்கு முந்தியே, சொத்து உரிமை தோன்றி இருக்க வேண்டும். "உன் சொத்து, என் சொத்து" என்ற வேற்றுமை, தனித்து வாழும் ஜீவராசிகளிடம் காணலாம். ஒன்றை யொன்று பிடிங்கித் தின்னும் பிராணிகளாகிய(Predatory animals) புலி, சிங்கம், கரடி, கழுகு முதலிய ஜந்துக்களில், தனியுடைமையை அதிகமாகக் காணலாம். இவை தனித்து வாழும் ஜந்துக்களாதலால், அதனதனுக்குக் கிடைக்கும் இறையை அதுவே உண்ண உரிமையைக் கொண்டது, ஆனால் சமூக வாழ்க்கையில் வாழும், சமூக பிராணிகள், (Social animals) அதனதன் கூட்டதோடு உணவை கலந்தே உண்டு வாழ்ந்து வருகின்றன. சிறிய பிராணிகளில், எரும்பையும், பெரிய பிராணிகளில் காக்கையையும் எடுத்துக் கொள்ளலாம். மனிதன், ஆதி கால முதல், தான் சம்பாதித்த பொருளை, தானும் தன் மக்களும் அனுபவிக்கும் பொருட்டே, பற்பல சட்டதிட்டங்களைச் செய்து வந்ததாக ஏற்படுகிறது. சில இடங்களில் மாத்திரம், சில காலங்களில், நிலங்களைப் பொதுவாகப் பயிர் செய்து, பொதுவாக பலனை அனுபவித்து வந்ததாகத் தெரிகிறது. ஆனால், அந்த வாழ்க்கை, ஏகதேசமாக இருந்து வந்தமையால் ஆதி காலம் முதல் மனிதர் தனிவுடமை திட்டத்தையே கையாண்டு வந்தனர். இந்த திட்டத்தால் விளைந்த வினைதான், தற்கால உலகை வறுமையிலும், தரித்திரத்திலும், சண்டையிலும், போரிலும், வழக்கிலும் மூழ்க வைத்து வருகின்றது. இந்தகொடுவினையால் உலகப் பொருள்கள் யாவும், தந்திரசாலியினிடத்தும், பலசாலிகளிடத்தும், வலியோரிடத்திலும் தங்க நேரிட்டது. இவ்விதமாக குவிந்த சொத்தைத் தான், எல்லா அரசுகளும் ஆதரித்து வருகின்றன. இதைத் தான், "சொத்துரிமைப் பாதுகாப்பு என" சாஸ்வதத்திட்ட மொன்றைக் செய்யப் போகின்றார்கள். இந்த தனி சொத்தின் உரிமையை பாதுகாப்பதற்குத் தான், எல்லா சேனை சிப்பந்திகளும், மந்திரி தந்திரிகளும், பட்ட வர்த்தனரும், மகுட வர்த்தினரும் சட்ட திட்டங்களுமென அறிக.

உலகப் பொருள்கள் யாவும், ஒரு பக்கம் குவிய குவிய மற்றொரு பக்கம் இல்லாமையும், வறுமையும், அறிவின்மையும் மற்றொரு பக்கம் அதிகரித்து வந்து கொண்டிருக்கின்றது. சில ஆயிரம் பேரே உலகப் பொருள்களை பங்கு போட்டுக் கொண்டிருக்கின்றனர்- மற்ற உலக மக்கள் யாவரும் அச்சிறுபான்மையோருக்கு உழைத்தும் பிழைக்க உரிமையாதொன்றுமின்றி மடிகின்றனர். இது தான் உலகில் தற்காலம் காணும் காட்சி. இந்த அகோர நிலைமையை நீக்க பற்பல அரசியல் ஸ்தாபனங்களும்,அரசியல் அல்லாத ஸ்தாபனங்களும்அரும்பாடுபட்டு வருகின்றன. எதுவும் பலிக்கவில்லை. இருப்பதைக் கொடுத்து என்னைப் பின் தொடருங்கள் என்றார் ஏசு! "தானதருமங்கள் செய்" என்றார். புத்தர்!! "தருமம் தலை காக்கும்" என்றார் இந்து பார்ப்பனர்!!!

"சிக்கனம் உண்பண்டம் தின்பண்டங்களின் மேல் வரி, அகவிலை உயர்வு போடுங்கள் என்கின்றார்கள் நமது வல்லரசுகள்!!!! எதுவும் பயன்தரவில்லை, உலகில் கிளர்ச்சியும் அதிகரித்தே வருகின்றன. இந்நிலையே சில காலம் நீடிக்குமேயாகில் உலக சமாதானத்திற்கே கெடுதி வரும் போல் காண்கின்றதாக பல பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். உலக நிலைமை இவ்விதம் நிற்க, நமது தேசத்தில் மாத்திரம் சொத்துரிமைப் பாதுகாப்பால், ராம ராஜியம் எவ்விதம் வருமென்பது விளங்கவில்லை? ஆதலின், நமது நாடு சுகப்படும் மார்க்கம் இது வல்ல வென்றே தோன்றுகிறது. நமது அரசியல்வாதிகளை யொன்று கேட்கின்றோம்? நிலம் நீர் படைத்த சிலரே உலக சம்பத்துகளுக்கு உரியவர்களாய் இருக்கையில், பெரும்பான்மை யோருக்கு அந்த சம்பத்தில் பாக உரிமை எப்படி ஏற்படுமென்று கேட்கின்றோம்? உயர்ந்த பிரிட்டிஷ் ராஜ்யத்தில் கிடைக்கமுடியா விட்டால் பின் எந்த ராஜியத்தில் தான் கிடைக்கப் போகின்றது? இன்னும் கடந்த 150 வருஷங்களாக பல பல அரசியல் சீர்திருத்தங்களில் கிடைக்காத சம உரிமையும், ஆதிக்கமும், இனி எந்த அரசியல் திட்டத்தில் பெற முடியும்? காங்கிரஸ் சுயராஜ்யத்தில் பாமர மக்கள் எவர்களுக்கும், மனித வாழ்வுக்குப் போதிய யாதும் உதவப் போகாமையை எடுத்துக் காட்டியுள்ளோம். அது வொழிந்தால், சுயமரியாதையோர்தான் இருக்கின்றார்கள்! இவர்களிடத்திலும் எந்த அரசியல் திட்ட மொன்றையும் காணேம். ஆனால் உழைத்தவனுக்கு தான் பிழைக்க உரிமை என்று வற்புறுத்தி வருகின்றார்கள். மதங்கள் மூலமாக பிழைப்பும், ஜாதி மூலமாக ஏற்படும் பிழைப்பும். சொத்துரிமையால் உண்டாகும் பிழைப்பும், அற்றுப் போகச் செய்வது தான், சுயமரியாதை நோக்கம் என்றார் ஒருமுக்கிய சுயமரியாதை அங்கத்தினர். இதுவரை சரியே(So far good) ஆனால் இந்த சுயமரியாதை நோக்கத்தை, எப்படி நிறைவேற்றப் போகின்றார்கள் என்று தான் தெரியவில்லை. நமது நாடு ஆங்கில அரசியல்கொடியின் கீழ்இருக்கின்றபடியால், அந்த அரசியலோடு ஒத்துழைத்து, சமதர்மத்தை நிலைநாட்ட எண்ணங் கொண்டார்கள் போலும்! இது நிற்க, நேற்று நடந்த மூன்றும் வட்ட மேஜையில், தற்காலிகமாக ஏற்பட்ட திட்டமாகிய சொத்து, மத, ஜாதி உரிமைப் பாதுகாப்புகள் முன்னிலையில் எப்படி சமதர்மம் நிலைக்கு மென்பதும் விளங்க வில்லை. இந்த கஷ்டங்களை முன்னணியில்வைத்து சுயமரியாதையோர் பேசவேண்டுமென்பதுதான், நமது நோக்கம்.

ஆதலின் பொருளாதார சமத்துவம் பெறவேண்டுமானால் அதாவது 35 கோடி மக்களும் பொருளுடைமையில் உயர்வு தாழ்வு இல்லாமல் இருக்கவேண்டுமானால் தனிசொத்துரிமைப்பாதுகாத்தலை யொழித்து சமசொத்துரிமையைப் பாதுகாத்தும் முறையை யாராயினும் காடவேண்டும். நிலமில்லானுக்கு நிலமும், வீடில்லாருக்கு வீடும், வேலையில்லாருக்கு வேலையும், அறிவில்லானுக்கு கல்வியும் பெற அகிலபொருள் உடமை (All Common Ownership) திட்டத்தை ஏற்பாடுசெய்யவேண்டும். நடந்துவரும் முதலாளி திட்டத்தில் (Capitalist System) நமது சுயமரியாதை நோக்கு பலன்படாதென்பது திண்ணம். இந்த திட்டத்தில் அவனவன் எந்த வழியாலும் சம்பாதித்த சொத்தை அவனும் அவன் சந்ததியாருமே அனுபவித்து வரமுடியுமேயொழிய குவிந்துகிடக்கும் தனிச்சொத்துரிமையில் பாமர மக்களுக்கு இம்மி அளவேனும் உதவாது இந்த தனியுடைமைத்திட்டத்தில் பிராமணன் குருத்துவமும் வைதீகம், புரோகிதம் முதலியபயனற்றதொழிலைக்கொண்டு சுகபோகங்களை அனுபவித்து வருவான். ஆனால் பலகோடி பல்லாயிரவர்களாகிய பஞ்சமர்கள் உண்ண உணவும், வசிக்கவீடும், உடுக்க ஆடையுமின்றி 'மிருக' வாழ்க்கையில் இருந்துதான்தீரவேண்டும் இந்தப்பாழும் திட்டம் புராதனதிட்டமென அறியவேண்டும். இந்த திட்டத்தைக்காப்பாற்றத்தான் உலகில் உள்ள ஒன்றைத்தவிர மற்ற வல்லரசுகளும், ஸ்தலஸ்தாபனங்களும், கோயில்களும் தருமங்களும், கோர்ட்டுகளும் கொத்தளங்களும், நீதியும், நெறியும், ஜட்ஜ்களும், லாயர்மார்களும், சட்டதிட்டங்களும், போலீஸ் கச்சேரிகளும், சேனை சிப்பந்திகளும், முதலிய அரசியல் பாதுகாப்புகள்யாவும் அமைக்கப்பட்டிருக்கின்றன வெனவறிக. இந்த பாதுகாப்புகள் யாவும் பொருள், செல்வம் ஆதிக்கம்படைத்துள்ளவர்கள் சார்பாகவே உண்டாக்கிக்கொள்ளப்பட்டவை. இந்த பாதுகாப்புகளையாவும் சமதர்மதிற்கு இடையூறுகவே இருந்துவரும்.

'நானே சம்பாதித்தேன்' என்று சொல்லுவது அதர்மப்பேச்சு. இந்த உலகில் ஒருவனே எந்த சொத்தையும் சம்பாதிக்கமுடியா. மற்றவர்களுடைய உதவி, உபபலம், கூட்டுறவு, உழைப்பு, பாதுகாப்பு இவைகள் இல்லாமல் யாரும் பொருளை உண்டாக்கவாவது, படைப்பதற்காவது, முடியாது. தான் படித்து சேமித்த சொத்தென்றும் உத்தியோகம்செய்து சேர்த்த சொத்தென்றும். எவ்வித சொத்தாயினும் பல்லாயிரவர் உதவி இன்றி சேர்க்கவாவது, சேமிக்கவாவது, முடியாது. படிக்க பள்ளிக்கூடங்கள் வேண்டும், பள்ளிக்கூடங்களில்கூட அனேகர் வேண்டும், பள்ளிக்கூட உபாத்தியாயர், பண்டிதர், பாண்டித்துவம்பெற்றோர் வேண்டும். படிக்கபுஸ்தகம்வேண்டும், அவைகளை எழுத பல நூலாசிரியர்வேண்டும், புத்தகங்களை அச்சிட தொழிலாளர் வேண்டும், ஒருவன் படிப்பதற்கு பல பேருடைய கூட்டுறவு (Cooperation) வேண்டும், இந்த கூட்டுறவு இல்லாமல் எவனும்படிக்கவும் முடியாது அதன்மூலமாக சம்பாதிக்கவும் முடியாது. இவ்விதமாக எத்தொழில் புரிந்து சம்பாத்தியம் செய்தாலும் அந்த சம்பாதனை பலருடைய உதவியால்தான் செய்த

தொடர்ச்சி 16-ம் பக்கம் பாக்க.

மதமும் முன்னேற்றமும்.

II

மனித வர்க்கத்தின் பலவாறான விஷயங்களையும் ஆதி காலம் தொட்டு ஆய்ந்தறியும் நூல் வல்லார் (Anthropologists) பல நாடுகளிலுமிருந்த பழையகாலத்து மனிதருடைய பழக்க வழக்கங்களையும் தொகுத்துத் துருவி ஆராய்ந்து, 'மதம்'-மனித பயத்தினின்றும் அவர் தம் அகம்பாவத்தினின்றும் பிறந்ததாகும் என்ற முடிவிற்கு வருகிறார்கள். மனிதனுக்குப் பயத்தை விளைவித்து விரோதமாகக் காணப்பட்ட இடி, பூகம்பம் போன்ற இயற்கை நிகழ்ச்சிகளைச் சாந்தப்படுத்துவதற்கும், பிரபஞ்சத்தில் பெரிய நிலைக்கு முடியாத மிகச் சாதாரணமான மனிதவாழ்க்கைக்குத் தனித்த மதிப்பைபெருவதற்கும், இன்னும் மனிதனுக்கு எல்லாம்வல்ல பயங்கரமான ஒரு துணைவனைப் பெருவதற்கும் எழுகின்ற விருப்பங்களிலிருந்தே மத உணர்ச்சி தோன்றியது. எனவே மனிதனின் திக்கற்ற மனதில் தோன்றுகிற ஒரு தேவைக்காக மதம் தோற்றுவிக்கப் படுகிறதேயன்றி, அது தன்மட்டில் அவனுக்குப் புறம்பாய் உண்மையான ஒரு விஷயமென்று சொல்வதற்கில்லை. அதாவது மனிதனுக்குக் 'கடவுள் இருக்கிறார்' என்று கொள்ளவேண்டியது. ஒரு தேவையாக இருக்கிறது. இதிலிருந்து கடவுள் இருக்கிறார் என்பது கிடைக்கவில்லை. ஆகவே கடவுளென்பது மனிதன் தனது வெள்ளை மனத்தால் உள்ளமென்னும் சேலையிலெழுப்பிய கள்ளப் பொம்மையேயன்றி வேறல்ல. மதம் என்பது மோசமே. அப்படியானால் அது மனிதர் தம் இதயத்தைக் கொள்ளை கொள்ளுவதேன்? இதை விளக்குவதற்குப் போதுமான காரணங்கள் உண்டு.

முதலாவதாக இந்த அளவிற்கரிய பிரபஞ்சத்திலே மனிதன் தனிமை கொண்டு வாடுகிறான். அவனைத் தேடுவாரில்லை. கவனிப்பவருமில்லை. எப்படி வந்தான். எதற்காகப் பிறந்தான் எங்கு செல்கிறான் என்பன தெரியாமல் உழல்கின்றான். வாழ்க்கையில்லை, புயற்காற்றிலே பறக்கும் பஞ்சுபோல் பரதவிக்கிறான். விதியெனும் அறிவற்கெட்டாத பகைவனின் கூறிய அம்புகளுக்கு இரையாகும் ஒரு குறியாகவிருக்கிறான். இந்தப் பரிதாப நிலை தெரிந்திருந்தும் சகிக்க முடியாத்தாக விருக்கிறது. பிடிப்பதற்கிடமில்லாமல் காற்றிலே துடிக்கும் கொடிபோல் வாடும் இவன் நெஞ்சம் தஞ்சமடைவதற்கொரு நிலையான பொருளைத்தேடித் தயங்குகிறது. அப்பொழுது அவன் சகல சக்தியும் பொருந்திய இறைவனென்ற ஒரு பொருளை இமைப் பொழுதில் சமைத்து; தான் அதனைச் சார்ந்த அதற்கு கந்த ஆத்மா என்று கொல்லிக்கொள்கிறான். இங்ஙனம் தனது வாழ்விற்கு அவசியமும் பெருமையும் தேடிக்கொள்கிறான். கடவுளுக்கு இவன்பால் கரைகடந்த காதல் இவ்வுலகத்திலு ள்ளவற்றையெல்லாம் கடவுள் இவனுக்காகவே படைத்தார். இவ்வாறு மனிதன் தன் மனத்தில் உள்ள பாலவனத்தைப் போன்ற காலியான தனிமைத் தோற்றத்தை நிரம்புவதற்காகக் கடவுள் என்ற ஒரு பொருளை ஏற்படுத்தி, அதற்குத் தன் மனம் போனவாரெல்லாம் உருவமும், தோற்றமும், பொருளும் தந்து தன்னைத் தானே திருப்தி செய்துகொள்கிறான்.

அடுத்தபடியாக மனிதன் சமுதாயத்திலியங்கியிருக்கவேண்டிய கூட்டுறவிற்காகவும் மத அவசியம் வற்புறுத்தப்படுகிறது. மனிதன் சமுதாய உள்ளக்கிடக்கின்றி, இயற்கையில் சுயநல விருப்ப வெறுப்புக்களுடன் விலங்கெனப் பிறக்கிறானும். அவன் தன் மனம் - போனபடியெல்லாம் போய், தான் இச்சையுற்ற மங்கை எவளானாலும் அவளைக்கூடியும், வெறுத்தவர்களை யெல்லாம் ஒறுத்தும் வாழ்வானுயின் சமூகக் கூட்டுறவே னும் நாகரீக வளர்ச்சியேனும் ஏற்படுவதற்கில்லை, இவ்விதமாக இயற்கையில் எதேச்சையாக எழும் இச்சைகளையும் இன்பங்களையும், விட்டுக்கொடுத்து, சமூகத்தில் கட்டுப்பட்டு வாழவேண்டுமானால் அதற்கு யாதேனும் கைம்மாறு வேண்டும். மதம் அவன் தனது குறைகளையும் கட்டுப்பாடுகளையும் சொல்லி மனதை ஆற்றிக் கொள்வதற்கு ஒரு கடவுளைத் தருவதின் மூலம் அவன் எற்றுக்கொண்ட சுமைக்கு வெகுமதியளிக்கிறது. இன்னும் சட்டதிட்டங்கள், நீதிஸ்தலங்கள், தண்டனைகள் மூலமாக ஒருவனை விலகி நடவாதபடி சமூகம் கட்டுப்படுத்துவதுபோல், அவனது மனத்தினுள் எழும் கலக உணர்ச்சிகளைக் காப்பதெப்படி? இதற்கென நமது உள்ளத்தினுள்ளும் சமுதாயத் தொண்டு செய்ய மனச்சாடசியெனும் ஒரு கள்வனிருக்கிறான். வழி நெடுகில் நாம் செய்வதைத் தடுக்க முடியாத ஒரு நாய் குலைப்பதை நாமெப்படி அடக்க முடியாதோ, அது போல இந்தமனச்சாட்சி நாம் செய்ய விருக்கும் செயல்களைத் தடுக்க முடியாவிட்டாலும் நம்மைத் தட்டி எழுப்பிச் சிந்திக்கச் செய்கின்றது. அதனால் இது நமக்குப் பெருந் துன்பத்தையும் சில வேளைகளில் பைத்தியத்தையுமே உண்டாக்கிவிடுகிறது. கலகம் செய்யும் இன்னோரன்ன அகப்பேய்களினின்றும், வெள்ளமெனப் பொங்கிவரும் ஆசைகளின் ஆர்ப்பாட்டங்களினின்றும்; காரியங்களைச் செய்து விட்டதற்காகப்படும் மன அவதிகளினின்றும், ஏற்படும் தொல்லைகளைத் தொலைக்க உதவுவது எது? அதுதான் மதம். நமது பாவங்களை மன்னிப்பவர் யார்? அவர்தான் கடவுள். இன்னும் மதமானது இந்த உலகில் சில சிறிய துன்பங்களை ஏற்று நல்ல பிள்ளைகளாக நடந்தால் அடுத்த உலகில் பல இன்பங்களை அளிப்பதாக விளம்பரம் செய்யும் இன்சூரன்சுக் கம்பெனி போலவும் கருதப்படுகிறது. இவ்வாறு சமூகத்தில் மனிதவாழ்க்கைக்குப் பல விதங்களிலும் மதம் உதவுவதாக இருப்பதால், சமூக வளர்ச்சிக்கும் அவசியத்திற்கு மேற்றவாறு மதக் கோட்பாடுகளும் மாறி வளர்ந்துகொண்டு வருவதைக் காணலாம். மனிதத் துயரத்திற்கு மாற்றான மருந்தாகவிருப்பதால் எல்லோரையும் ஈடுபடச் செய்யும் காந்தமாகவிருக்கிறது.

இன்னுமொரு வகையில் மதம் மனிதனை வசப் படுத்துவதைக் காட்டலாம். கடவுள் முன்பாக எல்லோரும் சமம் என்று சொல்லிக் கொண்டாலுங்கூட, சமூக வாழ்வினிலே இச்சமத்துவம் காணக் கிடைப்பதில்லை. உலகிலே அரசர்களும், குடிகளும் பணக்காரர்களும், ஏழைகளும், முதலாளிகளும், தொழிலாளிகளும், கொடுமை செய்பவர்களும், ஒடுக்கப்பட்டவர்களும் என்ற வகுப்புக்கள் காணப்படுகின்றன. இவை இப்படியே இருந்துதான் தீருமென்று கூடச்சொல்லப்படுகின்றது. சமூகத் தலைவர்கள் சமூகத்தை வலிமையினால் கட்டுப்படுத்தி இவ்விதமான உயர்ச்சி தாழ்ச்சிகளையும், கஷ்ட நிஷ்டூரங்களையும், என்றும் நின்று நிலவச் செய்வதற்கு, பலாத்காரத்தை உபயோகப் படுத்துவதுடன், மதத்தின் உதவியையும் தேடிக்கொள்கிறார்கள் ஏழைகளையும், ஒடுக்கப்பட்டவர்களையும் தங்கள் தாழ்ந்த நிலைமைக்கு காரணமாயிருப்பதைக் களைந் தெரியாமல் சகிப்புடன் பொருத்துக்கொள்ளுமாறு மதம் போதிக்கிறது. எனவே மதம் பணக்காரர்களுக்கொரு சாதனமாகவும் ஏழைகளுகொரு கடிவாளமுமாக இருக்கிறது. பல மதங்களும் அடக்க, ஒடுக்கம், சுயநலமின்மை, பொருமை போன்றனவற்றைப் போதிப்பது வெள்ளிடைமலை. இன்னும் அடிமை நிலைமை அகற்றுவதற்கவசியமான தைரியம், சமத்துவம், எதேச்சை, இவற்றைக் கண்டிக்கவும் செய்கின்றன. ஏழ்மையையும் ஒரு விசேஷமான குணமாக மதங்கள் போற்றி வருகின்றன. இத்தகைய மதக் கொள்கைகளை சமூகத் தலைவர்கள், தங்களுக்குச் சார்பானதாக இருக்கக் கண்டு எங்கும் பரவச் செய்தனர். வயிறு புடைக்கக் கிடைக்கும் பல இனிய உண்டிக்கும், சொல்லற்கரிய பல வின்பங்களும், சில கால மே நிலைக்கக்கூடியன, ஆனால் இதற்குப் பதிலாக இம்மையில் எழியரால், அடிமைகளாய் இருப்பவர்களுக்கு மறுமையில் மாறுவின்பம் கிடைக்குமென்ற போதனைகளும், பிரசங்களும் நடைபெறுவதினால் இவ்வேழைகள் தங்களையே பாக்கியவான்களாய் நினைத்துக் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைவதில் விரோதமொன்றுமில்லை. நம் நாட்டிலும் பெரும்பாலோர் எல்லாம் கர்மம்-தலைவிதி என்ற கொள்கையினால் பீடிக்கப்பட்டு, எந்தக் கேவல நிலையிலும் திருப்தியடைந்து அசையாமலிருப்பதினால் ஏற்பட்டுள்ள 'கர்ம விளைவுகள் நாம் கண்டதெல்லாம் போதாதா? இவ்வேமாற்றத்தை நீக்குவதற்கொரு வழியில்லையா? இவ்வேழை மக்களுக்குத் தங்கள் ஏழ்மையும் கஷ்ட நிஷ்டூரங்களுமே பெரிதாக இருக்கையில் இச் சுயநலத் தலைவர்களின் தீய நோக்கங்களை அறிந்து கொள்வதற்கு அவகாசமெப்படிக் கிடைக்கும்.

ஒரு சமூக ஏற்பாட்டின் (Social Institution) ஒழுக்கப்பாதகா பாதகத்தைக் கண்டறிய வேண்டுமானால் அதனுள் பொதிந்து கிடக்கும் மனச் சுபாவம் இன்னதென்பதையும், அதனை அந்தச் சமூகத்தில் எத்தனை தூரம் பலன் படுமாறு அவ் வேற்பாடு செய்கிறதென்றும் பார்க்கவேண்டும். கற்பவர் சங்கம் கல்வி பயிலும் சுபாவத்தைக் கொண்டிருக்கிறது. காட்சிகளில், வெற்றியை நாடும் சுபாவம் அடங்கியிருக்கிறது. யாவற்றினும் பெரிதான சமூக ஏற்பாடுகளான மதம், அரசு என்பனவற்றில் பொதிந்தியிருக்கும் மன எழுச்சிகளும், தூண்டுதல்களும் பலதிறப்பட்ட கலப்புத்தன்மை (Complex) யுடையதாயிருக்கின்றன. உள்நாட்டுக் குற்றவாளிகளிடமிருந்தும் வெளிநாட்டுப் பகைவர்களிடமிருந்தும் நம்மைக் காப்பதற்காக அரசு ஏற்படுதிறது. இது பயமுறுத்தப்பட்ட குழந்தைகள் ஒன்றையொன்று கட்டிக்கொண்டு தங்கள் பயம் தெளியுமாறு ஒரு முதியவரது உதவியை வேண்டும் சுபாவத்தைப் போன்றது. மதத்திற்கு எல்லாவற்றிலும் பெரியதும் முக்கியமானதுமான காரணம் பயமே. ஜனங்களைக் கலவரமடையச் செய்யும் எந்தச் செய்தியும் ஆவர்களை உடனே கடவுள்பால் திருப்புவதை இன்றும் காணலாம். சண்டை, நோய், பஞ்சம் எல்லாம் மக்களைக்கடவுளை நோக்கிக் கை கூப்பித் தஞ்சமடையச் செய்கின்றன. வேறு விதமாகவும் மதம் நம்மை வசப் படுத்துவதை விளக்கினேம். நம்முடைய சுக துக்கங்களில் பங்கெடுத்துக்கொள்ளும் ஒரு கடவுளால் இப் பிரபஞ்சம் படைக்கப்பட்டு நடத்தப்படுகிறதென்பதை நினைக்க நமக்கு உற்சாகமாகவும், மதிப்பாகவுமிருக்கிறது.

(தொடரும்.)

எனது இலங்கைப் பிரயாணம்.

(தோழர் அ. இராகவன்)

(முன் தொடர்ச்சி)

தென் இந்தியாவிலிருந்து குடியேறியிருக்கும் முஸ்லீம் பெண்கள் பழய கருப்பனே கருப்பன் என்றபடி இன்னும் அலுக்குத்து என்னும் காதணியையும். குன்னிமுத்து சேலையம்பு, தங்கள் கையால்தைத்துப்போடும் பெரியசட்டையையும், நெல்லிக்காய்மணி ஆலங்காய் மணி, கடுகுமணி முதலிய ஆபாசமான நகைகளையும் மாற்றிக் கொண்டதாகவோ கல்வி அபிவிருத்தி அடைந்ததாகவோ காணேம். பொதுவாக இந்தியாவைப்போன்று கொடிய கோஷாமுறை அங்கு அனுஷ்டிக்கப்படுவதாகக்காணேம். யாழ்ப்பாணத்தமிழ்ப்பெண் மக்கள் எல்லா விசயத்திலும் மிகுவிரைவான முன்னேற்றமடைந்து வருகின்றார்கள். இங்குள்ள பெண்மக்களில் சுயமரியாதை இயக்கம் என்றால் என்ன? என்பதைஎவராவது அறிந்திருப்பார்களா என்பது சந்தேகம். அங்குள்ள பெண்களிடையே சுயமரியாதை இயக்கத்தொண்டர்களான பெண்மணிகள் கொஞ்சம் வேலை செய்வார்களால் அதிகமான பலனை கூடிய சீக்கிரம் எதிர்பார்க்கலாம்.

சமூகசீர்திருத்த கழகங்கள்.

ஓராண்டிற்குள் பலப்பல சமூக சீர்திருத்த கழகங்கள்தோன்றி வந்திருக்கின்றது. அக்கழகங்களின் நிர்வாகிகள் கழக முன்னேற்றம் கருதி அதிக ஊக்கத்துடன் உழைத்து வருகின்றார்கள். யான் அங்கு விஜயஞ்செய்திருந்தகாலத்தில் இந்தியர் சுயமரியாதை சங்கம், வாலிப சுயமரியாதை சங்கம், மலையாளி சுயமரியாதை சங்கம், இராமநாதபுரம் ஜில்லா ஆதிதிராவிட சங்கம், மருத்துவர் கல்விச் சங்கம் முதலியவற்றில் சொற்பொழிவாற்றும் பாக்கியம் பெற்றேன். ஆங்குஇவர்களுக்குள்ள சுயமரியாதை உணர்ச்சியும் சமூக சீர்திருத்த வேட்கையும் என் உள்ளத்தைப்பெரிதும் கவர்ந்துவிட்டது. ஆதிதிராவிட தோழர்கள்ஒவ்வொருகூட்டத்திற்கும் ஏராளமாய் விஜயஞ்செய்ததுடன் உடையிலும், ஒழுக்கத்திலும், சுத்தத்திலும், பேச்சிலும் விசேஷ முன்னேற்றம்பெற்றிருக்கிறார்கள். பலர் சொற்பொழிவாற்றும் திறனும் பெற்றிருக்கின்றார்கள். குலாபி விருத்தியில் பிற எந்தஜாதியாருக்குமில்லாத ஊக்கங்கொண்டவர்களாயிருக்கிறார்கள். எக்காலத்திலும் ஆதித்திராவிட தோழர்கள் சுயமரியாதைக்கொள்கையையும் வேட்கையுமுடையவர்களாய் விளங்கி வருகின்றார்கள் என்பதற்கும் சுயமரியாதை இயக்கம் சில ஆண்டுகளுக்கு முன்னர் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களால் உண்டாக்கப்பட்ட ஓர் வேன் இயக்கமென்றென்றும், அது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றி தோழர். ஈ வெ. ரா. அவர்களால் ஏழு ஆண்டிற்கு முன்புத்துயிரளிக்கப்பெற்ற ஓர் பெரும் நல்லியக்கமென்றும் யான் பலமுறை எழுதியும் பேசியும் வந்ததற்கு கொழும்பில் ஓர் ஆதாரம் கண்டுள்ளேன். அதாவது 'குடிஅரசு' தோன்றுவதற்கு நாலு ஐந்து ஆண்டிற்கு முன்னர் "ஆதிதிராவிடன்" என்றொரு மாதப் பத்திரிகை கொழும்பிலிருந்து வெளியாயிற்று. 1921-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியான பத்திரிகையில் தோழர் வீரநாமனூர் என்பவர் சுயமரியாதை என்றொரு கட்டுரை எழுதியிருக்கின்றார். அதை அதிலுள்ள படியே வெளியிடுகின்றேன். அன்பர்கள் ஆராய்ந்து பார்ப்பார்களாக.

சுயமரியாதை
(வீரநாமனூர் வரைகின்றார்)

"ஒருவன் தன்னேத்தானே கௌரவித்துக்கொள்ளுதலேயே சுயமரியாதை என்கிறோம், தன்னேப்பற்றி ஒருவன் கேவலமாய் நினேத்துக்கொண்டு அப்படியே நடந்துவருவானுல் அவனே மற்றவர்கள் மதியார் என்பது நிச்சயம். அதனுல்தான் "மனம்போல்வாழ்வு" என்று சொல்லுகிறார்கள். இவ்விதமே ஒருவகுப்பாரைப்பற்றியும் சொல்லலாம். பிற்போக்கான நிலேமையிலிருக்கும் ஒருவகுப்பார் முன்னேற்றமடைய வேண்டுமானுல் முதல்முதலாக அவ்வகுப்பாருக்குள் சுயமரியாதை உதிக்கவேண்டும். வர்ணுச்சிரமதர்மம் என்கிற மிலேச்சக்கட்டுப்பாட்டினுல் இந்தியா தேசத்தில் சுயமரியாதை குன்றி அடிமைப்புத்தி பெருகிக் கிடக்கிறது. பார்ப்பன வகுப்பார் தவிர மற்ற வகுப்பாரெல்லாம் அதிகமாகவோ, அல்லது சொற்பமாகவோ இந்த அடிமைத் தனத்தில் ஆழ்ந்து தான் கிடக்கின்றனர். அநேகர் இதை உணரவில்லே சிலர் இப்படிப் பட்ட அடிமைத் தனம் தான் எங்களுக்குப் பொருந்து மென்று கொஞ்சமேனும் நாணமில்லாமல் சொல்லிக் கொள்ளுகிறார்கள் காரணமென்ன? அவர்களுக்கு சுயமரியாதை இல்லே அது தான் காரணம். ஆதிதிராவிடர் என்னும் பழங்குடிகள் இந்த மிலேச்சக் கட்டுப்பாட்டினுல் வர்ணுச்சிரம கட்டுப்பாட்டை அநுசரிக்கிறவர்களின் கொடுமையினுல் தங்கள் பண்டைப் பெருமையையும் சுயமரியாதையும் இழந்து மிகவும் கேவல நிலேயில் இருக்கிறார்கள். இவர்கள் தான் தற்சமயம் இந்திய ஜனசமூகத்தின் அடிப்படையாக இருப்பதால் இவர்கள் சீரும் சிறப்பும் பெற்றுலன்றி இந்தியா பெருமையடைவது முடியாத காரியம்.

இதை எல்லா வகுப்பாரும் நன்குணர வேண்டும். சுயராஜ்யம்என்று கூச்சலிட்டுக் கொண்டு போதுஜனங்களே மருட்டித்திரியும் போலிக்கட்சியார் இவ்விதமாய் கவனஞ்செலுத்துவார்களானுல் தேசத்துந்தநன்மைசெய்தவர்களாவீர் தீண்டாமையைஒழித்து விட வேண்டு மென்று பத்திரிகைகளில் எழுதுவதும் பிரசங்க மேடைகளில் சொல்வதும் போதா. செய்கையில் காட்ட வேண்டும். ஆலயங்களில் பிரவேசித்து பூஜை காண ஆதிதிராவிட வகுப்பார்களுக்குஇடங் கொடுக்கப்பட வேண்டும் இல்லேயேல் தீண்டாமை ஒழிய மாட்டாது.

இனி ஆதிதிராவிட சகோதாநுக்கு ஒருவார்த்தை. உங்கள் மீட்சி அல்லது தாழ்ச்சி உங்கள் கையில் இருக்கிறது. உங்கள் மனம் போலவே உங்கள் அந்தஸ்தும்இருக்கும். உயர்ந்த எண்ணமும், பெரிய மனமும், கௌரவ நடத்தையும், வீரகுணமும் உள்ளவர்களாக முயலுவீர்களானுல் அதற்கேற்ப உங்கள் நிலேமையும் மேன்மையடையும், அதற்கு மாருக மனே பயம் தன்னேயே கேவலமாய் நினேத்தல், சொந்த வகுப்பாரை பிறர் முன்னிலேயில் இகழ்தல் அற்ப நினேவு பொருமை, கோழைத்தனம் முதலிய சிறுமைக்குணங்களே வளர்ப்பீர்களாயின் உங்களின் வருங்கால நிலேமை தற்கால நிலேமையிலும் அதிககேவலமாயிருக்கு மென்பதில் சந்தேகமில்லே. சமீபத்தில் அமெரிக்காவிலுள்ள நியூயார்க் பட்டணத்தில் நீக்ரோவர்கள் ஒரு மகாநாடு கூடினுர்கள் அப்பொழுது, அந்த நிக்ரோவரின் தலேவனுன மார்கஸ் கார்வே என்பவர் பின் வருமாறு கூறினர்:— 'இந்நூற்று ஐம்பது வருடங்களாக நாம் அடிமையாக இருந்து வந்திருக்கிறோம் இன்றொரு ஐம்பது வருடகாலம் அடிமைப் பூச்சிகளாகவும் இருந்து வந்திருக்கிறோம் இப்பொழுது இந்த அடிமைத் தனத்தையெல்லாம் ஒழித்து விட நாம் முயற்சிக்கிறோம், இனி நமக்கு பயமே இல்லே நாம் இனிமேல் ஒருங்கிப் பதறுவதில்லே, இச்சகம் கூறி இரப்பதுமில்லே பரிந்து வேண்டிக் கொள்வதுமில்லே. ஆண்மைத் தனத்தில் சுதந்திரங்களுக்காகவும் பூரண சுயாதீனத்துக்காகவும் நிக்ரோவரே! நீங்கள் தீரை தோழ் நிமிர்த்துச் செயல்செயத்தலேவேண்டும். நீங்கள் உங்களுக்காக செயீயுமளவு வேறெவரும் உங்களுக்காக செயீய முடியாது. உங்கள் உரிமைகளுக்காக நீங்கள் பாடுபட முடியாதாயின் நீங்கள் அழிந்துபோவதே மேல் ஏனெனில் நம்பிச்சையற்ற ஓர் ஜாதி, மானம் மறியாதைகளே காப்பாற்றிக் கொள்ள முடியாத ஓர் ஜாதி, தன்னம்பிக்கையற்ற ஓர் ஜாதி இந்த காலத்தில் நிலே நிற்க முடியாது." அவரது வீரமொழிகளே ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டும். எத்தனே நூற்றுண்டுகளாக நீங்கள் அடிமைத்தனத்திலே ஆழ்த்தப்பட்டுக்கிடக்கிறீர்கள். நம் முன்னேர் பூர்ண சுதந்திரர்களாக ஜீவித்திருந்த இம் மகாநாடு இன்று நம் முன்னேருக்கு அடிமைத்தன தேசமாகிவிட்டதே! எத்தனே நூற்றுண்டுகள் கழிந்தன, எத்தனே இராஜியப் புரட்சிகள் நடந்தன, எத்தனே இராஜ்யங்கள் எழுந்தன, எத்தனே வீழ்ந்தன? பழந் தமிழ் மக்களே! உங்களுக்குள் இன்னும் பலத்த உணர்ச்சி தோன்றவில்லேயா? அருணேதயம் ஆகிவிட்டது. விழித்தெழும்புங்கள். சுயமரியாதையை வளருங்கள்."

என வரையப்பட்டிருக்கும். கட்டுரைகளுடன் இந்துமத ஆபாசங்களேயும். காந்தியின் தவறுன கோர்கைகளேயும் விளக்கி வர்ணுச்சிரம அதர்மக் கோடுமைகளேக் கண்டித்தும், வேதப் புரட்டுகளேயும், புராணப் புரட்டுகளேயும் வெளிப்படுத்திய பல கட்டுரைகள் மிளிர்கின்றன. தோழர்களான சனகசங்கரகண்ணப்பர், சாமவேதனுர். தாமஸ்பாலேயா, ஸ்வாமி அத்வைதாநந்தா முதலிய அறிஞர்கள் பலரின் கட்டுரை "ஆதித்திராவிடனில்" இடம்பெற்று விளங்குகிறது. அப் பத்திரிக்கைகளொன்றில் "தமிழ்நாடு" வாரப் பத்திரிக்கையின் விளம்பரமொன்று காணப்படுகிறது. அதில் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுது ஈ. வி. ராமசுவாமி நாயக்கர் அவர்களால் பிரசுரிக்கப்பட்டு வரும் தமிழ் நாடு என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. துரதிஷ்டவசமாய் நம் "குடி அரசு" தோன்றுவதற்கு முன்னரே "ஆதித்திராவிடன்" ஆதரிப்பாரின்றி நிறுத்தப்பட்டுப்போய்விட்டது.

யான் கொழும்பில் பற்பல கழகங்களின் ஆதரவில் பேசினேன். மலேயாளி சுயமரியாதைச் சங்கத்தில் கண்ட காட்சி என்றும் மறக்கத் தக்கனவல்ல. அக்கூட்டம் சனட் ஆண்டர்சன் கலாசாலேயில் நடைபெற்றது. தலேவர் லாரென்ஸ் கலாசாலே ஆசிரியர் தோழர் குஞ்சிராமன் பி. ஏ. என்பவராவர். அவருடைய முன்னுரை ஆங்கிலத்தில் தெள்ளத் தெளிபசுயமரியாதை இயக்கக் கொள்கைகளேவிளக்கிக்கூறியதும், யானும் தோழர்களான குமரன், வேலாயி, தர்மஸ்கந்தபிள்ளை (புத்தமதசந்நியாசி) முதலியோர்களால் சொற்பொழிவாற்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

கலியாணம்! கலியாணம்!!

(மிஸ். ராதா)

'கலியாணம்' என்னும் பிரம்மச்சாரிகளும், கன்னிகை பெண்களும் உள்ளூர உவகை கொண்டு தமக்குள்ளே மன மகிழ்ச்சி கொள்ளும் ஒரு தனிப்பட்ட சாராம்சமான விஷயம். ஆனால் 'கலியாணம்' என்னும் சொல் கேட்ட மாத்திரத்தில் ஆண்கள் நூற்றுக்குச் தொண்ணூற்றொன்பது பேர் அபரிமிதமான களிப்படைகிறார்களென்றால், பெண்கள் நூற்றுக்கு இருபது பேர் சந்தோஷ மடைகிறார்கள் என்று கூறுவதற்கில்லை. கலியாணத்திற்கு முன் நினம் தனிப்பட்ட இடத்தில் உட்கார்ந்து கொண்டு, "ஐயோ, என் மனக் கோட்டை இடிந்ததே! நான்நினைத்த,கோரிய கணவனைப் பெறுமல்; முன்பின் பார்த்தறியாத யாருக்கோ என்னைக் கொண்டு போய்த் தள்ளுகிறார்களாம்! அவர் எப்படிப்பட்டவரோ! என்னென்ன கஷ்டங்களுக்கு அவரிடத்தில் நான் ஆளாக நேருமோ" என நினைத்து உருகி ஊமையன் பல்லவி பாட விரும்புவது போல் அழுது எங்கி உட்கார்ந்திருக்கும் பெண்கள் எத்தனை? "எனக்கு கணவனுய் வாய்க்கப் போகிறவர் குடுகுடு கிழவராயிற்றே! நான் அவருக்கு மூன்றுந்தரமாகவல்லவா வாழ்க்கைப் படப் போகிறேன், தாதாவா என் புருஷன்! அவரோடு ஆயுள் முழுதும் நான் மனைவியாயிருக்க நேரிட்டதே! நான் எதற்காகப் பெண்ணுகப் பிறந்தேன்! என் குறையை நிவர்த்தித்து என்னை உய்விப்பவர் ஒருவரும் இல்லையே, பிள்ளைகள் குறையைபெற்றோர்கள் நிவர்த்திப்பார்கள். ஆனால் என் பெற்றோரோ என் வாழ்நாளைபாழ்படுத்தி, நாசமாக்கி, நான் உருக்குலைந்து அழிவதற்கு முக்கிய காரணபூதர்களாய்அமைந்துள்ளனரே. ஐயோ! எனக்கு விமோசனமில்லையா!" எனக்கதறுவோர் எத்தனை பெண்கள்? கணக்கிலடங்காது.

"சாஸ்திரத்தில் பாண்டித்தியமுடையவர் மாப்பிள்ளை" என்கிறார் தகப்பனர். 'மாப்பிள்ளை பெருத்த பணக்காரர்' என்கிறாள் என் தாய். 'நல்ல குலத்தில் மாப்பிள்ளை உதித்தவர்' என்கிறார்கள் என் பந்துஜனங்கள், ஆனால் மாப்பிள்ளை ஆறரையடி உயரம் நான் கடி சுற்றளவு; ஒரே கருப்பு; பார்க்க பயங்கரமான மீசைகள் வளர்ந்து ஆட்டுக் கொம்புகள் போல் நெருகி முறுக்கி நிற்கின்றன. என்பன போன்ற வசாக்கள் என் கண்களுக்கே தோன்றுகின்றன, நான் 'அழகுள்ளவள்' என்று பலமுறை பிறர் கூறினதைக் காதால் கேட்டிருக்கிறேன். என் கண்களுக்கு மாப்பிள்ளை மதுரை வீரன் வேஷம் போல் தோன்றுகிறார். இந்நிலையில் நான் அவருக்கு மனைவியாவ தென்றால் மனம் இடங் கொடுக்குமா? பெற்றோராலும், மற்றோராலும் வற்புறுத்தப்படும் பலவந்தமாய் அவருக்கே மனைவியாயிருக்க விலங்கிடப் பட்டிருக்கும் நான் என் செய்வது? எனக்கு மாப்பிள்ளையாய்த் தேர்ந் தெடுத்திருக்கும் அவருக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் சமர்பிக்க நான் தயார். ஆனால் அவரோடுசரிசமமாக பயம் விட்டு மகிழ்ச்சியோடு கொஞ்சி விளையாடுவ தென்றால்.....? தற்கொலை செய்து கொள்வது சாலவும் நன்று! எனது இக்குறையை நிவர்த்திப்பது யார்? யாருமற்ற பாவி நான் "என துக்க சாகரத்தில் மூழ்கி கலியாணத்திற்கு முன் தினம் தற்கொலைக்கு ஆய்த்தமாகும் பெண்கள் எத்தனையோ!

"எங்கள் குடும்பமோ ஏழைக் குடும்பம் கடைசியில் எங்கள் குடும்பத்திறகு" எம்னெய்த்தோன்றினேன் நான் கலியாணத்திற்கு இவ்வளவு ரூபாய் என்று முதலில் ஒப்பந்தம் செய்து கொண்டே என்னைக் கலியாணஞ் செய்ய மாப்பிள்ளை வீட்டார் சம்மதித்தனர். மாப்பிள்ளை வீட்டாருக்குப் பணம் கொட்டிக் கொடுத்து வயது வந்த எனக்கு மணவினை முடிக்க என் தகப்பனர் இராப் பகல் அரும் பாடுபடுகிறார். பணம் கிடைக்கக் காணேம்! பணமில்லை என்றால் கலியாணமுமில்லை என்று தான் முடிவு கட்ட வேண்டும். ஏழை வீட்டில் பிறந்த காரணத்தினால் பெண் சம்பூர்ண குணங்கள் பெற்றிருந்தாலும் 'கலியாணம்' கிடையாது. என் கதியும் அக்கதிதான் ஆகும்! "என உள்ளூர வருந்தும் பெண்கள் தொகை எவ்வளவு? "அடி! எனக்கு கலியாணம்செய்யப் போறுளாம்! கலியாணம் இன்ன ரொம்ப பகூஷணம் சாப்பிடறது தாண்டி!" என்று அநுபால்யக் கலியாணப் பெண்கள் கூறுவதை இன்றளவும் நம் நாட்டில் கேட்கலாம்.

இது போலவே கலியாணப் பெண்கள் வகையைக் கூறிக் கொண்டே போகலாம் பூர்ண திருப்தியோடு, மணமகனும்,மணமகளும் ஒருவரை யொருவர் முழு இருதயத்தோடு நேசித்து, சம்பூரணக்கலியாணம் நம் நாட்டில் நடப்பது மிக மிகப் சொற்பம் என்றே தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. பெண் மாப்பிள்ளையை விஷமென வெறுத்து, "சாகவும். தயார் ஆனால் அந்த மாப்பிள்ளையைக் கண்ணெடுத்தும் பாரேன்." எனக்கலியாணப்பெண் கூக்குரலிட்டு கதறி ஊரே கிடுகிடுத்துப் போகும்படி சப்தம் செய்தாலும் அவையாவும் செவிடன் காதில் ஊதியசங்குத்தொனி போல், முடிகிறது. அதேபெண் யாரை அறவே வெறுத்தாளோ அந்த மாப்பிள்ளைக்கே சாமிசன்னிதியின் முன் பலி கொடுக்க இழுத்துச் செல்லும் ஆடு மாடுகளைப் போல, பலவந்தமாக தூக்கி வந்து மாப்பிள்ளைபின் கையில் ஒப்புவிக்கிறார்கள்.

இவ்வளவுவிமரிசையாகக்கலியாணத்தை முடித்துக்கொண்டு இல்லறத்தை நடத்தப் புகும் அப்புருஷனுக்கும் மனைவிக்கும், எதை உவமையாகக் கூறுவது? அவர்கள் கூடி ஒரு குடும்பத்தில் வாழ்வது கீரியும் பாம்பும் ஓரே இடத்தில் சந்திப்பதையே ஒக்கும் என்றுதான் சொல்லவேண்டும். மகத்தான அபிப்பிராய பேதங்களோடு ஒருவர் கொள்கைக்கு ஒருவர் கொள்கை முரண்பட்ட நிலையிலே உள்ள இருவர் புருஷன் மனைவியாவது பெரிய ஆபத்திலும் கொண்டுபோய் விடுகிறது. சண்டை, கத்திக்குத்து, கொலை முதலியன அபிப்பிராயப் பேதப்பட்ட தம்பதிகள் வாழுமிடத்திலிருந்தே உற்பத்தியாகின்றன. அம்மாதிரி இருக்கும் குடும்பத்தில் ஒற்றுமை, குதூகலம் புருஷன் மனைவிக்குள்ள ஒப்பற்ற இன்பம் முதலியவை குதிரைக் கொம்பாகவே இருக்கும்.

கலியாணம் நிர்ணயிப்பதற்கு முன் பெண்ணின் மனக் கருத்து, பெண்ணின் தன்மை, அதற்கேற்ற புருஷனின் யோக்யதை, ஜோடிப் பொருத்தம், புருஷனின் மனப் பான்மை முதலிய வைகளை ஆராய்ந்து பிறகே மணவினைக்கு ஆரம்பிப்பது ஒழுங்கு, ஏற்ற தம்பதிகளது பிற்கால வாழ்க்கை பிரகாசிப்பதற்கும், உலகுக்கு அவர்கள் ஏற்ற அங்கத்தினராவதற்கும் தகுதியான முறையாகும். அதை விட்டு விட்டுக் கதா நாயக நாயகிகளை அலட்சியமாய் மூலையில் உட்கார வைத்துவிட்டு, கலியாணத்தில் பாணிவேடிக்கை எப்படி நடத்துவது? கதா காலட்சேபத்திற்கு யாரைத் தேர்ந்தெடுப்பது? கோலாட்டத்திற்கு எவ்வளவு பெண்கள் தேவை? முதலிய விசாரணையிலிறங்கி பயனற்ற காரியமாய் மணவினையைப்பெற்றோரும் மற்றையோரும் முடிப்பது ஒரு ஆணையும், பெண்ணையும் கொலை செய்வதையே ஒக்கும்.

மேல்நாடுகளில் பெற்றோர்கள் தம் தம் மக்களை உலகிற்குத் தகுதியுடையவர்களாகச் செய்து, தம் குழந்தைகள் வயது வந்ததும், கலியாண விஷயம் அவர்களிடத்திலேயே ஒப்படைக்கப்படுகிறது. தமக் கேற்ற மனைவிகளையோ, அன்றி பெண்கள் தமக்கு மனதிற்குப் பிடித்த புருஷர்களையோ தேர்ந் தெடுத்துக்கொள்ள பூர்ண சுதந்திரமும், சௌகரியமும் அளிக்கம்பட்டிருக்கின்றன. தப்பித் தவறி உலக அனுபவமில்லாப் பெண்கள் முதல் வேஷத்தில் மயங்கி புருஷனைத் தேர்ந்தெடுத்து கலியாணஞ் செய்துகொண்டு பின்பு நாளடைவில் பழகப் பழகப் புருஷனது இயற்கையான மிருகபாவம் வெளிப்பட்டு புருஷன் தம் மனதிற்கு ஒவ்வாதவனுய் இருப்பானுனால், சுலபத்தில் தான் புருஷனை விலக்கிவிட்டு நிம்மதியாய் வாழவும் அத் தேசத்தில் சௌகரியமேற்படுத்தி இருக்கின்றனர். ஆனால் நாமோ அவர்கள் செய்கையைப் பரிகசிக்கிறோம். கற்பு என்பது அத் தேசத்திலே யே இல்லை என்கிறோம். கலியாண விஷயத்தை முதலிலிருந்தே கோணலாயாரம்பித்துக் கடைசிவரையில் அக் கோணல் வழியிலேயே போகிறோம். நேர் வழியிலே விலகி நிற்பதென்றால் அதுவரையில் கடைப் பிடித்துவந்த விவேகமற்ற வழியைவிட மனமிருப்பதில்லை. புதிய கொள்கைகள், நூதன வழக்கங்கள் முதலியவை மகத்தான நன்மை பயப்பவையால் இருப்பினும், பழைய சமாசாரங்களிலே கணக்கற்ற தீமைகள் இருப்பதாக அறிந்தாலும் பழைய பற்று நம்மவரிடையே மறைவதென்றால் அது முடியாக் காரியமாயிருக்கிறது. புதியனவற்றைக் கண்டு அஞ்சி வேர்த்து நிற்கும் மூடத்தனம் நம் நாட்டில் 100-க்குத் 90. பங்கு பழையன

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

Self-Respect University

சுயமரியாதைப்பரீக்ஷை.

பொது அறிவு—1

——:0:——

மார்க் 100] [நேரம் 3-மணி

குறிப்பு:-கீழ்க்கண்ட கேள்விகளில் ஒவ்வொன்றுகூடவோ, சேர்த்தோ, பதில் எழுதத்தெரிந்தவர்கள் "குடி-அரசு" ஆசிரியருக்கு அனுப்பலாம். ஒருவரும் பதில் அனுப்பாவிட்டாலும் கேள்விகள் வாராவாரம் தொடர்ச்சியாய் வந்துகொண்டேஇருக்கும். பரீக்ஷகர் S. G.

(I) காங்கிரஸ் இயக்கத்தில் பார்ப்பனர்கள் மாத்திரம் (பெண்களும் கூட) பெரும்பாலும் முரமான பங்கெடுத்துக் கொள்வதன் காரணங்களை விளக்கி, 5-பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதுக.

(II) திரு. சத்தியமூர்த்தி அய்யர் எப்படித்தன் வயிற்றுப் பிழப்பை நடத்துகிறார் என்பதை சுருக்கி 16-பக்கத்திற்குள் எழுதுக

(III) "எ. ரங்கசாமி அய்யங்கார் தேசீயத்தின் பெயரால் தன் சுற்றத்தாருக்கு உத்தியோகம் தேடிக்கொடுக்கிறார்"—இது உண்மையா இல்லையா என்பதை ஆராய்ச்சியுடனும், தகுந்த காரணங்களுடனும் விளக்குக.

(IV) கீழ்க்கண்டவைகளுக்கு வியாக்கியானம் எழுதுக:—

(a) "சூத்திரன் என்றால் ஆத்திரங்கொண்டடி"

(b) "ஆங்கிலேயர் அன்னியரென்றால் ஆரியப்பார்ப்பனர்கள் யார்?"

(c) "லிங்கம் என்பது ஆண்குறியும், பெண்குறியும் சேர்ந்ததாகும்"

(d) "உலகத்திலுள்ள 155-கோடி ஜனங்களில் பூணூல் போட்டிருப்பவர் எத்தனை பேர்? நெற்றியை விகாரப்படுத்துபவர் எத்தனை பேர்?"

(V) தமிழ்ப்பாஷை விருத்தியடையாமல் இருப்பதற்கு தமிழ்ப்பண்டிதர்களே காரணம் என்பதை விளக்குக.

(VI) "இந்தியாவிலுள்ள கோவில்களில் பார்ப்பான் கட்டிய கோவில் எத்தனை"—இக்கருத்தை விளக்கி ஒரு வியாசம் வரைக.

(VII) கீழ்க்கண்டவைகள் யார், யாருக்கு, எப்போது சொல்லப்பட்டவை என்பதை விளக்குக:—

(1) "என் உயிர் போனாலும் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித்தொகுதி கொடுக்கச்சம்மதிக்கமாட்டேன்"

(2) "சுயமரியாதைக்காரர்கள் உத்சவங்களில் பேசினால் அவர்களை எதும்பும், சதையுமாகக்கிழித்தெரிந்து விடுவார்கள்."

(3) "நமது மதத்தலைவர்களைக்குற்றம் சொல்லுகிறவர்களை உயிருடன் வைத்துக்கொண்டிருக்கிறீர்களே! உங்கள் உடம்பில் சுத்த ரத்தம் ஓடுகிறதா?"

(4) "காந்தி ஒருபெரிய முட்டாள்"

(5) "லா காலேஜை (சட்டக்கல்லூரி) 10-வருஷத்திற்கு அடைத்து வைக்கலாம்"

(6) "என் பெண்ணிற்கு 14-வயதிற்குள் கல்யாணம் செய்து சாரதா சட்டத்தை மீறி ஜெயிலுக்குப்போவேன்"

(7) "கோவில்கள் எல்லாம் விபசார விடுதிகள்"

ஆங்கில டாக்டரின் பெருந்தன்மை.

பிஷாவார் சிவில் சர்ஜன் மேஜர் கோல்டு ஸ்ட்ரீம் என்பவர் ஒரு இந்திய நோயாளியின் சிகிச்சையின் பொருட்டு தன் தேகத்திலிருந்து 40 அவுன்ஸ் இரத்தம் எடுத்து அதை நோயாளியின் உடலில் செலுத்தினார். நோயாளி உயிர் பிழைத்துக் குணமடைந்தார். நோயாளிக்கு வேறு விதமான சிகிச்சை செய்வதற்கு நேரமில்லாதிருந்தபடியாலும் தாமதம் பிராணபத்தை யுண்டாக்கக்கூடுமென கருதப்பட்டதாலும், டாக்டர் உடனே தன் உடலிலிருந்து ரத்தம் பிடித்து ஆதனைக்கொண்டு உடனே சிகிச்சை செய்து உயிரைக்காப்பாற்றினார்.

டாக்டர் அம்பெத்கார் விளக்கம்.

மூஞ்சே—ராஜா ஒப்பந்தப்புரட்டை விளக்கி டாக்டர் அம்பெத்கார் பின்வருமாறு ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

மூஞ்சே—ராஜா ஒப்பந்தத்தைப் பற்றி எனக்கு எந்தவிதமான கவலையும் கிடையாது. அதுபோலவேமற்ற எவருக்கும் அதைப்பற்றிய கவலை எதுவும் இருக்கவேண்டிய அவசியமில்லை யென்று நினைக்கிறேன். அந்த ஒப்பந்தத்தில் விசேஷம் ஒன்றுமில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்குள் தனித்தொகுதி கூட்டுத்தொகுதி முதலிய விஷயங்களில் கட்சிப்பிரதிகட்சி யேற்பட்டிருப்பதைப்போல காட்டிக்கொள்வதற்காகவே அத்தகைய முயற்சி செய்யப்பட்டு வருகிறது என்பது வெளிப்படை. இவ்விஷயத்தில், காங்கிரசும் இந்துமகாசபையும் வழக்கமாகவே ஊக்கங் காட்டி வருகிறது. இந்தியா முழுதிலுமுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் அனைவரும் அதனை ஏற்கனவே எதிர்த்து வருகின்றனர். இதலேயே அந்த ஒப்பந்தத்தின் உண்மையான மதிப்பு நன்குதெரியவரும். ஆகையினாலே அதைப்பற்றிப்பேசிப் பொழுதைப்போக்குவது அனாவசியமான காரியம் ஆயினும் அந்த ஒப்பந்தம் ஏற்பட்ட விருத்தாந்தத்தைப் பற்றி நான் ஏதேனும்சொல்லவேண்டுமென்று நமது சிநேகிதர்களிற்சிலர் விரும்புகின்றனர். அதிலிருந்து பொது ஜனங்களும், குறிப்பாக தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களும் தாங்களே உண்மையைக் கண்டுகொள்ள முடியுமென்று நினைக்கின்றனர். அவர்களுடைய கட்டளைக்கிணங்கி கீழ்கண்டகுறிப்பைவெளியிடுகிறேன்:—

ஒப்பந்தத்திற்கு முன்பு.

டாக்டர் மூஞ்சே திரு. ராஜாவோடு உடன்படிக்கை செய்து கொள்ளுவதற்கு முன்பு டாக்டர் மூஞ்சே என்னோடு முதலில் விவகாரம் ஆரம்பித்தார். புதிய டெல்லியில் மூன்று நாட்களாக நாங்கள் இதைப்பற்றி விவாதித்தோம். பிப்ரவரி மாதம் முதல் தேதி முதல் 3ந் தேதி மட்டும் எங்களுடைய தர்க்க வாதம் நடந்தது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு ஐந்து வருஷ காலத்திற்கு மட்டும் தனித்தொகுதி கொடுக்கலாமென்று டாக்டர் மூஞ்சே கூறினார். நான் அதை ஒத்துக்கொள்ளவில்லை. அதனால் எங்களுடைய விவகாரம் முறிந்தது. அத்த சமயத்தில் டாக்டருக்கு திரு. ராஜாவைப்பற்றிய ஞாபகமே இருந்ததில்லை. திரு. ராஜா தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி யென்று அவர் அந்தக்காலத்தில் நினைத்திருக்கவில்லை.

ஏதோ ஒரு ஸ்தாபனத்தலைவர்.

அகில இந்திய தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கம் சார்பாக உடன் படிக்கை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. திரு. ராஜா இதன் தலைவர் என்று சொல்லப்படுகிறது. திரு. ராஜா இந்த சங்கத்தலைவர் என்ற ஹோதாவில் உடன்படிக்கையில் கையெழுத்திட்டிருக்கிறார். தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுடைய எண்ணிறந்த ஸ்தாபனங்களைத் தெரிந்தவர்களுக்கு மேலே சொல்லப்பட்ட அகில இந்திய ஸ்தாபனம் பேரளவிலும், எட்டளவிலுமே இருப்பதாகத் தோன்றும். அந்த சங்கத்தின்கிளைகள் அல்லாம், வங்காளம், சென்னை, பம்பாய், பீகார், ஒரிசா, பஞ்சாப் முதலிய மாகாணங்களிலே கிடையாது. அதன் கிளைகள் இருப்பதாகச் சொல்லப்படும் இடங்களிலேயும், சங்கத்தின் உத்தியோகஸ்தர்களைத்தவிர வேறு அங்கத்தினர்கள் கிடையாது என்று தெரிகிறது. அத்தகைய ஸ்தாபனம் அகில இந்திய ஸ்தாபனமாகக் கொள்ளப்படுவதற்கில்லை. இன்னும் திரு. ராஜாவின் சங்கம் அகில இந்திய தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அனைவருக்கும் பிரதிநிதியாக இருக்க முடியாதென்பதையும் தவிர, அந்த ஸ்தாபனம் திரு. மூஞ்சேயோடு உடன்படிக்கை செய்து கொள்ளும்படிக்கும், கூட்டுத்தொகுதியை ஒத்துக்கொள்ளும்படிக்கும் திரு. ராஜாவுக்கு எந்தவிதமான அதிகாரமும் கொடுக்கவில்லை.

டெல்லியில் திரு. ராஜா தலைமையில் சென்ற பிப்ரவரி மாதம் 23ந் தேதி ஒரு கூட்டம் நடைபெற்றதாக அசோஷியேட் பிரஸ் தந்தியிலிருந்து தெரிந்தது. அப்போது உடன்படிக்கை விஷயமாக திரு. ராஜாவை பேட்டி கண்ட விஷயத்தைப் பற்றி ஆலோசனை நடைபெறும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இக்கூட்டத்தில் அவ்விஷயமாக எந்தவிதமான முடிவுக்கும் வரமுடியவில்லையென்று ராஜாவே கூறினார். அக்காரணத்தால் வேறொரு கூட்டம் போட வேண்டுமென்றும், அதற்கு இந்தியாவிலுள்ள பல மாகாணங்களிலிருந்தும் தாழ்த்தப்பட்டவர்களுடைய பிரதிநிதிகள் கட்டாயம் வரவேண்டுமென்றும் அப்போது தீர்மானித்தனர். டெல்லிக் கூட்டத்தில் நடந்த விஷயங்கள் அவ்வளவு தான்.

திரு. ராஜாவின் காரியங்களுக்கு அவருடைய வகுப்பினர்களே எந்தவிதமான ஆதரவும் கொடுக்கவில்லையென்று நன்கு தெரிந்தது. ஆகவே டெல்லி கூட்டத்தில் தீர்மானம் செ

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

குடி அரசு.

ஈரோடு 1932 எப்ரல்மீ 10-உ

சட்டசபை நாடகம்.

—:0:—

ஏழை மக்களுடன் பழகி, ஏழை மக்களாகவே, வாழ்கின்ற ஏழைமக்கள்தான் அவர்களுடைய துன்பங்களை நீக்க உண்மையாகப்பாடுபட முடியுமே யொழிய ஏழை மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு பதவிவகித்து வருகிற வேறு எந்தப்பணக்கார முதலாளிகளும் அவர்களின் துன்பத்தைப் போக்கப்பாடுபடமுடியாது என்றுநாம் அடிக்கடி சொல்லிவருகிறோம்.

இதற்கு உதாரணம் வேண்டுமானால் நமது இந்தியா சட்டசபையின் நிகழ்ச்சிகளையும், மாகாணசட்டசபைகளின் நிகழ்ச்சிகளையும் கவனித்துப்பார்த்தால் நன்றாய் விளங்கும். இச்சமயத்தில் சென்ற 4—4—32உ இந்தியசட்டசபையில் இந்திய ராணுவ சம்பந்தமான முக்கிய விஷயம் பற்றி விவாதம் நடக்கும்போது சபையில் பல உறுப்பினர்களின் ஸ்தானங்கள் காலியாக இருந்தனவாம். இதை நிரு. எஸ். சி. மித்ரா அவர்களும், சட்டசபைத்தலைவரும் எடுத்துக்காட்டி கண்டித்தனர். அப்போது தலைவர் கண்டித்துக்கூறியதாவது:—

> சட்டசபைக்கூட்டத்திற்குப் பலர் வரவில்லையென்றும், சிலர் வந்துவிட்டுத் திரும்பிவிட்டார்களென்றும், சபையில் அதிக மெம்பர்கள் இல்லையென்றும், நிரு. எஸ். சி. மித்ரா கூறியதைக்கவனிக்க வேண்டும். ஆகையால் வாக்காளர்களே இதைக்கவனியுங்கள்.
>
> தேர்தல் காலத்தில் ஏராளமாகச்செலவு செய்து படாதபாடுபட்டு சட்டசபைப் பதவி பெறுகிறவர்கள் பிறகு சபைக் கூட்டத்திற்கு வருவதைப்பற்றிக்கவலைகொள்வதில்லை. இத்தகைய மெம்பர்களிடம் அனுதாபம் காட்டமுடியாது.

என்றுமிகவும் அழுத்தமாக உறுப்பினர்களின் செய்கையைத் தலைவர் கண்டித்திருக்கின்றார்.

இவ்வாறு சட்டசபைக்கூட்டங்களுக்கே சரியாகப்போகமுடியாத நமது பிரதிநிதிகள் எவ்வாறு நமது நன்மைக்காகக்கவலையுடன் பாடுபடுவார்கள் என்று யோசித்துப்பாருங்கள்.

இவர்கள் ஏழைகளின் நன்மைக்காகவோ, சீர்திருத்தத்திற்காகவோ, பாடுபடாமல் போனாலும், சட்டசபையில் சிலமெம்பர்களால் கொண்டுவரப்படும் நல்ல தீர்மானங்களுக்கு முட்டுக்கட்டை போடாமலாவது இருக்கிறார்களா என்று பார்த்தால் அப்படியும் இருப்பதில்லை. 'மதம்' 'கடவுள்' 'வேதம்' 'பழமை' 'தெய்வீகம்' 'பழக்கவழக்கம்' என்னும் பெயர்களினால் அவைகளை எதிர்த்துத் தீமை செய்யச்சிறிதும் பின்வாங்குவதில்லை.

இதற்கு உதாரணம் வேண்டுமானால் இந்திய சட்டசபையில் நிரு. சாரதா அவர்களால் விதவைகளுக்குச் சொத்துரிமை வழங்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட மசோதாவைத்தாற்கடித்ததும், நிரு. அரிசிங்கோர் அவர்களால் விவாகவிடுதலை செய்துகொள்ளுவதற்கு உரிமை வழங்கக் கொண்டுவந்த மசோதாவின் விவாதத்தின்போது சபையில் குவாரம் இல்லாமற்போகுமாறு சபைமெம்பர்கள் சபையைவிட்டு வெளியேறியதும் ஆகிய காரியங்களே போதுமானதாகும்.

அல்லாமலும் பால்ய விவாகத்தைத்தடுக்கும் சாரதா சட்டத்தைநிறைவேற்றுவதற்காகவே சட்டசபையில் ஆதி முதல் ஒருகூட்டம் சூழ்ச்சிசெய்துகொண்டு உட்கார்ந்திருப்பதைக்கொண்டும் அறியலாம்.

ஆகவே இந்திய சட்டசபை மெம்பர்களின் நாடகத்தையறிய, அச்சபைத்தலைவர் கூறிய அபிப்பிராயமும், நாம் காட்டிய இரண்டொரு உதாரணங்களுமே இச்சமயத்தில் போதுமானதென்று கருதுகிறோம். சமயம் நேரும்போது மற்றொருமுறை இதுபற்றி எடுத்துக் காட்டுவோம்.

இனி நமது மாகாண சட்டசபையைப்பற்றி மாத்திரம் கொஞ்சம் கவனித்தால் மற்ற மாகாண சட்ட சபைகளின் நாடகங்களும் நன்கு விளங்கும்.

நமது மாகாண சட்டசபையில் சென்ற கூட்டங்களில் நடந்த காரியங்கள் முழுதும் அனேகமாகத்தேர்தலுக்காகச்செய்யப்பட்ட பிரசாரங்களும், பிரசங்கங்களுமாகவே இருந்தனவேயன்றி வேறு யாதொன்றும் நடைபெற்றதாகத் திட்டமாகக்கூறமுடியாது.

ஒரு மாஜிஸ்திரேட், சட்டமறுப்புச செய்து அதன் பொருட்டு அபராதம் விதிக்கப்பட்ட ஒரு பெண், தன்னிடம் அபராதம் கொடுக்கப்பணமில்லை யென்று சொல்லிய போது, அப்பெண் கழுத்திலிருந்த தாலியைக்கொடுவென்று கேட்டதைப்பற்றிய பேச்சு, சட்டசபை ஆரம்பம் முதல் முடிவுவரையிலும் இருந்துகொண்டே வந்தது. இதன் பொருட்டு, அந்த மாஜிஸ்திரேட் வருத்தந்தெரிவித்தும், அரசாங்கத்தாரும் அச்செய்கையைக்கண்டித்துங்கூட, சட்டசபை மெம்பர்கள் அப்பேச்சை விட்டுவிடவேயில்லை.

தாலியைத் தெய்வத்தன்மையாகக் கருதிக் கேள்விகள் கேட்டு ஆர்ப்பாட்டம் பண்ணிய இந்த மெம்பர்கள், கணவனையுடைய பெண்கள், வைதீகர்களின் கொள்கைப்படி, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் பிறவிக்குணங்களை விட்டுவிட்டுச் சட்ட மறுப்புச்செய்ய பகிரங்கமாக வெளிவந்ததனால், அவர்களுடைய "தெய்வீகத்" தன்மை போய் விட்டது என்பதுபற்றி ஏன் அப்பெண்களைக் கண்டிக்கவில்லை என்று கேட்கின்றோம். உண்மையில் இவர்கள் தாலியின் "தெய்வீகத்தன்மையை" அறிந்து, அதற்காக இவ்வாறு ஆர்ப்பாட்டம் செய்தார்களென்றால் அதில் சிறிதும் அர்த்தமேயில்லை யென்பது தான் நமது அபிப்பிராயம்.

அடுத்தபடியாக அடிக்கடி பிரஸ்தாபிக்கப்பட்ட விஷயம்; டாக்டர் பேட்டன் அவர்களைச் சென்னைப் போலீசார் அடித்ததும், அவர்மீது வழக்குத் தொடுத்ததுமாகிய விஷயமாகும். இதுபற்றி இந்தியா மந்திரியுள்பட அரசாங்கத்தார் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்தும் நமது சட்டசபைமெம்பர்கள் சும்மாவிட்டு விடவில்லை கேள்விகளுக்குமேல் கேள்விகள் கேட்டுக்கொண்டுதான் இருந்தார்கள்.

இன்னும் தடியடிகளைப்பற்றியும், பிரம்படிகளைப்பற்றியும் கேட்ட கேள்விகளுக்கு அளவேயில்லை. அரசாங்கத்தாருடைய அடக்கு முறைகளைப்பற்றியும், அவசரச்சட்டங்களைப்பற்றியும், கண்டித்துத் தீர்மானங்கள் கொண்டுவருவதும், சரமாரியாகக் கேள்விகள் கேட்பதும் ஆகிய காரியங்களில் தான் ஏறக்குறைய எல்லா மெம்பர்களும் ஊக்கமெடுத்துக் கொண்டு காலத்தைக்கடத்தினார்களேயன்றி, வேறு, நாட்டுக்கு—மக்களுக்குப் பிரயோசனகரமான காரியங்கள் எதையும் உருப்படியாகச் செய்து முடித்தார்களென்று கூறுவதற்கு இடமில்லை. உண்மையிலேயே நமது சட்டசபைப் பிரதிநிதிகள், நமது தேச மக்களின் நன்மைகளைக் கவனிக்கக்கூடியவர்களாயிருந்தால், ஏழை மக்கள் விவசாயிகள், தொழிலாளர்கள் இவர்களின் நன்மைக்காக ஏதேனும் தெய்திருக்கவேண்டும்.

நமது தேச மக்களில் கோடிக்கணக்கான பேர், உண்ண உணவின்றியும், உடுக்க உடையின்றியும், இருக்க இடமின்றியும், ஒவ்வொரு நாளும், பட்டினியிலும், பசியிலும், நோய்களிலும் மடிந்து வருகின்றனர். இவர்களுடைய துன்பங்களைப்போக்க ஒரு மார்க்கமும் தேடாமலிருக்கின்றனர்.

விவசாயிகளோ, அகவிலைகுறைவிலும், வரிச்சுமையிலும், கடன் சுமை தாங்கமாட்டால் நாளுக்கு நாள் பாப்பராகிக்கொண்டே வருகின்றனர் இவர்கள் துன்பத்தைப்போக்க ஒரு மார்க்கமும் இல்லை. ஆனால், "சிக்கனம்" "சிக்கனம்" என்பதைப்பற்றிய பேச்சு மாத்திரம் பலமாக இருந்து வருகிறது. இந்த சிக்கனப் பேச்சினால், யாருக்கும் நன்மையில்லை. சிக்கனம் என்ற பெயரினால், பத்துப்பன்னிரண்டு, இருபது முப்பது சம்பளம் வாங்கும் கீழ்தர வேலைக்காரர்களுக்குக்கஷ்டமும், ஆபத்தும் ஏற்பட்டதே ஒழிய வேறு ஒருநன்மையுமில்லை. ஆயிரக்கணக்கான சம்பளம் வாங்குபவர்கள், நூற்றுக்குப் பத்து வீதம், பதினைந்து வீதம் குறைத்துக்கொண்டார்கள் என்று பெருமையாகப் பேசப்பட்டது. இதனால், ஆயிரக்கணக்கான சம்பளக்காரர்களுக்கு ஒரு நஷ்டமுமில்லை.

உண்மையிலேயே சிக்கனம் செய்வதனால் நன்மையேற்படவேண்டுமானால், ஆயிரக்கணக்கான சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்களின் தொகையைக் குறைத்து ஏராளமானசம்பளத்தையும்குறைத்து, விவசாயிகளின் வரிச்சுமையைக் குறைத்திருக்கவேண்டும். இதற்கு யாரும் கவலை யெடுத்துக்கொண்டார்களென்று கூறமுடியாது.

அடுத்தபடியாக தொழிலாளர்களின் நிலைமையைப் பற்றியும் யாரும் கவலைப்படவேயில்லை. சிக்கனத்தின் பெயரால், ரயில்வேயிலும், மற்றும் தொழிற்சாலைகளிலும் சொற்ப கூலி பெறும் தொழிலாளர்களைக் குறைத்துக்கொண்டு வருகின்றனர். ஆனால், ஆயிரக்கணக்காக சம்பளம் வாங்கும் உயர்ந்த உத்தியோக பதவிகளில் யாதொரு சிக்கனமும்

நுழைவதில்லை. இந்தப் பரிதாபகரமான நிலையைக் கவனித்து ஏழைத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய நமது சட்ட சபைப் பிரதிநிதிகள் யாதொரு முயற்சியும் எடுத்துக் கொள்ளக் காணோம்.

இவ்வாறு நமக்கு தற்போது தேவையாயுள்ள முக்கியமான காரியங்களின் மேல் கவனமில்லாமல், சுயராஜ்யமென்று ஆர்ப்பாட்டம் பண்ணுவதும், அரசாங்கத்தாரின் தவறுகளையே சதா எடுத்துக் காட்டிக் கொண்டிருப்பதுமாகிய காரியங்களையே எப்பொழுதும் சட்ட சபையில் செய்து கொண்டிருப்பதனால் நமக்கு என்ன நன்மை உண்டாகப் போகின்றது?

தறபோது நமது நாட்டில், வியாபார மந்தமும், பொருளாதார நெருக்கடியும், வேலையில்லாத்திண்டாட்டமும் ஏற்படுவதற்குக் காங்கிரசால் செய்யப்படும் சட்ட மறுப்பும் ஒரு முக்கிய காரணம் என்பதை இந்தச் சட்டசபை மெம்பர்கள் உணராதவர்கள் அல்லர். ஆயினும், அவர்கள் காங்கிரசின் செயலைக் கண்டித்துப்பேச முன் வருவதே இல்லை. காங்கிரஸ் கார்கள் போல் அரசாங்கத்தாரை மாத்திரம் கண்டிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றனர். இது எதற்காக? தேர்தல் பிரசாரம் பண்ணுவதற்காகவா? அல்லவா? என்று நினைத்துப் பாருங்கள்!

சட்ட சபை ஸ்தாபனங்களில் கெட்டியாகஉட்கார்ந்து கொண்டு, உருப்படியான காரியங்கள் ஒன்றும் செய்யாமல் சட்டமறுப்பைப்பற்றியும், தடியடிகளைப்பற்றியும், சிறைத்தண்டனைபற்றியும், அபராதத்தைப்பற்றியும், வீண் ஆர்ப்பாட்டம் பண்ணுகிறவர்கள் அனைவரும் தேர்தல் பிரசாரகர்களே என்றுதான் நாம் கூறுகின்றோம். இவர்கள் உண்மையிலே சட்டமறுப்பிலும், காங்கிரசிலும், பற்றுடையவர்களாயிருந்தால் இவர்களும், காங்கிரசுடன் சேர்ந்துகொண்டு சட்டமறுப்புச் செய்து ஜெயிலுக்குப்போகவேண்டும். அப்படியில்லாமல் சௌகர்யமாகச்சட்டசபை ஸ்தானங்களில் உட்கார்ந்துகொண்டு அரசாங்கத்தாரை மாத்திரம் கண்டித்துப்பேசிவிடுவதில் என்ன அர்த்தமிருக்கிறது?

இவ்வாறு அரசாங்கத்தாரைக்கண்டிப்பதின்மூலம், தங்களைத் தேசிய வீரர்களென்று பாமர மக்கள் நினைக்கும்படி செய்துகொண்டு அதை அடுத்த தேர்தலுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளத்தான் இக்காரியம் செய்கின்றார்கள் என்பதில் என்ன சந்தேகம்?

ஆகையால் இந்திய சட்டசபைத்தலைவர் வாக்காளர்களுக்கு எச்சரிக்கைசெய்ததுபோல நாமும், நமது மாகாண வாக்காளர்களுக்கு எச்சரிக்கை செய்யவிரும்புகின்றோம், சட்டசபையின் வேலையைக்கெடுத்துக்கொண்டு, தேசாபிமானியென்ற பட்டத்திற்காக வீண் ஆர்ப்பாட்டங்கள் புரியும் பிரதிநிதிகளையெல்லாம் கவனித்துக்கொள்ளுமாறு வாக்காளர்களுக்குக்கூறுகின்றோம்.

இத்தகைய கோயில்கள் ஏன்?

தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த வரகூர் என்னும் கிராமத்தில் உள்ள வெங்டேசப் பெருமாள் கோயிலில் பார்ப்பனரல்லாதார் சென்று தெரிசனம் பண்ணக்கூடாது என்பது பற்றி அவ்வூர் பார்ப்பனர்களுக்கும், பார்ப்பனரல்லாதார்களுக்கும் நீண்டகாலமாக வழக்கு நடைபெற்றது. கடைசியில் சென்னை ஹைகோர்ட்டில், ஜஸ்டிஸ் கிருஷ்ணன் பண்டலே முன்பும், ஜஸ்டிஸ் வாலர் முன்பும் விசாரணைக்குவந்தபோது இருவரும் வேறு வேறு அபிப்பிராயம் கொண்டனர்.

ஜஸ்டிஸ் கிருஷ்ணன் பண்டலே பார்ப்பனரல்லாதாருக்கும் தரிசனம் பண்ண உரிமையுண்டுஎன்று அபிப்பிராயப் பட்டார்; ஜஸ்டிஸ் வாலர், பார்ப்பனரல்லாதாருக்குத் தரிசனம் பண்ணும் உரிமையில்லை என்று அபிப்பிராயப்பட்டார். ஆகையால் கடைசியாக ஜஸ்டிஸ் வாலஸ் அவர்கள் அவ்வழக்கை இரண்டாம் முறையாக விசாரித்து, பார்ப்பனரல்லாதார்க்குத் தரிசன உரிமை இல்லைஎன்று தீர்ப்புக் கூறினர்.

இத்தீர்ப்பைப் பற்றி நமக்கு ஒரு கவலையுமில்லை. பார்ப்பனரல்லாதாருடைய தயவோ ஒத்தாசையோ இல்லா விட்டால் எந்தக் கோயில்களும் நிலைத்திருக்க முடியாது. சோற்றை வடித்து பொங்கல் புளியோதரைகள் பண்ணி அவற்றைக் கல்லுப் பொம்மையின் முன்பு கொண்டு போய்காட்டிய பின் பார்ப்பனர்கள் பங்கு போட்டு எடுத்துக் கொண்டு போகிற ஒரு காரியத்தைத் தவிர, மற்ற எல்லாக் காரியங்களையும் பார்ப்பனரல்லாதார்களே செய்து வருகின்றார்கள். இத்தகைய ஒரு கோயிலுக்குள், பார்ப்பனரல்லாதார் போகக்கூடாது என்று தடுத்துக் கோர்ட்டுக்குப் போகும்படி செய்த பார்ப்பனர்களின் சுயநலத்தையும் அகங்காரத்தையும் உணருகின்ற எந்தப் பார்ப்பனரல்லாதாரும், இனி இதுபோன்ற கோயில்கள் விஷயத்தில் எந்த வகையிலும் ஒத்துழைக்க முன்வரமாட்டார்களென்றே நம்புகின்றோம்.

ஆகையால் உண்மையில், பார்ப்பனர்களின் சுயநலத்தையும், அகங்காரத்தையும் ஒழிக்கவேண்டுமானால் முதலில் செய்யவேண்டியது கோயில்களை பகிஷ்கரிக்க வேண்டியதே யாகும். தங்களுக்கு உரிமையில்லாத கோயில் சம்பந்தமான எந்தவேலைகளையும் செய்ய மறுத்து அவைகளைப் பார்ப்பனர்களே செய்துகொள்ளும்படி விட்டு விடவேண்டும்.

இவ்வாறு கோயில்களைப் பகிஷ்கரிக்க ஆரம்பித்தால், கோயில்களே அனேகமாக ஒழிந்துபோய் விடும். நமது மக்களுக்குக் கோயில்களின்மேல் உள்ள மயக்கம் ஒழிந்தால் முக்கால்வாசி மூடநம்பிக்கைகள் ஒழிந்துபோகுமென்பதில் ஐயமில்லை.

ஆகையால் இனியேனும், கோயில் பிரவேசத்திற்காகப் பாடுபடுகின்றவர்கள், கோயில்களை ஒழிக்கப்பாடுபடுவார்களானால், அதனால் அதிக நலனுண்டாகுமென்பதில் ஐயமில்லை.

யோகியின் ஆசை.

ஹடயோகி என்று புகழப்பட்டவரும், கடைசியில் இரங்கூனில் விஷமுண்டு இறந்தவருமான, நரசிம்ம சுவாமி என்பவர், இறந்த விதத்தைப்பற்றியும், அவருடைய கடைசி ஆசையைப்பற்றியும் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

அவர் இறக்குந்தருவாயில் கடைசி ஆசையாக, தன்னுடைய உடம்பை 24 மணி நேரம் சும்மா வைத்திருக்கவேண்டுமென்றும், தன்னுடைய உடம்பைப் புதைத்த இடத்தில் புத்தர்கோயில் ஒன்று கட்டவேண்டுமென்றும் கூறினாராம். அதற்கிணங்கி அவரை ஊர்வலமாக எடுத்துக்கொண்டு சென்று புதைத்தார்களாம்.

இனி, அவருடைய சகோதரர் வந்து பணவசூல் செய்து இறந்துபோன "ஹடயோகியின்" அவாவைப் பூர்த்தி செய்யப்போகின்றாராம்.

யோகிகளின் ஏமாற்றுந் தன்மைக்கும், இந்துக்களின் மூடத்தன்மைக்கும் இதைவிட வேறு உதாரணம் வேண்டுவதில்லையென்றே நாம் அபிப்பிராயப்படுகின்றோம்.

ஜாலவேடிக்கைபோல ஏதோ சாதுரியத்தினால் விஷந்தின்று மாண்ட ஒரு மனிதருக்குக்கோயில் எதற்காக என்று கேட்கின்றோம். உண்மையிலேயே இவர் சுயநலங்கருதாத—உலக நன்மையை விரும்புகின்ற ஒரு யோகியாயிருந்தால் ஏன் தன்னுடைய புதைகுழியின்மேல் ஒரு கோயில் கட்டவேண்டுமென்று ஆசைப்படவேண்டும்? பிற்காலத்தில் தன்னை ஒரு மகானென்று நினைத்துக்கொண்டு மூடமக்கள் தன்னுடைய புகழைப்பேசிக்கொண்டிருக்கவேண்டுமென்னும் பேராசையன்றே?

நம்முடைய மக்களும் மதவேஷம்போட்டவர்களையும் ஜாலவேடிக்கைக்காரர்களையும், மகான்களென்றும், யோகிகளென்றும், மகாத்மாக்களென்றும் நம்பியே மோசம் போய்க்கொண்டேவருகின்றார்கள். நமது மக்களின் இத்தகைய மூடத்தனத்தினால் தான் இன்று நமதுநாட்டில் எண்ணற்றகோயில்களும் சமாதிகளும் ஏற்பட்டுள்ளன. இந்தக்கோயில்களுக்கும் புதைகுழிகளுக்கும் நமது மக்கள் அழுகின்றபொருளுக்கு அளவேயில்லை, இந்நிலையில் இப்படி ஒரு புதுக்கோயில் கட்டவும் முயற்சி செய்யவேண்டுமா?

ஆகவே பர்மாவில் உள்ள இந்தியர்கள் இந்தப்பயனற்ற காரியத்திற்காக ஏழைமக்களிடம் பொருளைச்சேகரித்து புதைகுழியின் மேல் கோயில்கட்டி அதன்மூலம் மக்களுக்கு மூடத்தனத்தை வளர்க்க வேண்டாம் என எச்சரிக்கின்றோம்.

சேலம் ஜில்லா சுயமரியாதை மகாநாடு

ஷ மகாநாடு சேலம் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதைச் சங்கத்தினருகில் அமைக்கப்பட்டுள்ள தியாகராயர்பந்தலில் 23—24—4—32-ல் நடைபெறும். மகாநாட்டிற்குச் சென்னை தோழர் எம். சிங்காரவேலு அவர்கள் பி. ஏ. பி. எல். தலைமை வகிப்பார்.

புதுவை அமைச்சர் தோழர் எ. வீ. முத்தையா அவர்கள் திறந்து வைப்பார்.

சிவகங்கைதோழர்.எஸ்.இராமநாதன்அவர்கள் இயக்கத்தலைவர்தோழர் ஈ. வெ. ராமசாமிஅவர்கள்படத்தைத்

அன்னிய பாஷ அன்னியசாமான் இவைகளை ஒழிக்க தோன்றிய பிர பலஸ்தர்களில் முக்கியமானவர்க ளின் பெயரை கீழே எடுத்துக்காட்டு கிறேன். இவர்கள் யார்? என்று சற்று யோசித்துப் பாருங்கள்.

ஸர், சி. பி. ராமசாமி ஐயர் ஸர். சிவசாமி ஐயர் வி. கிருஷ்ணசாமி ஐயர் டி. ஆர். வெங்கட்டராம சாஸ் திரி ஏ. ரெங்கசாமி ஐயங்கார்(ஹிந்து மித்திரன் ஆசிரியர்)வி. வி. சீனிவாச ஐயங்கார், ராமதாஸ் பந்துலு, டாக் டர் ராமராவ் டி. சி. கீனிவாச ஐயங் கார் கே. ஆர்- வெங்கட்டராம ஐயர் சுப்பிரமணியபட் வி. எல். சாஸ்திரி, ஹரிஹர சர்மா, சாமிநாத ஐயர், சிவ ராவ், சுப்பராய ஐயர், ராமசாமி ஐயங் கார்.

ஃஃ ஃஃ

இன்னும் தங்கள் பெயரை வெளி யிடாமல் பணம் கொடுக்கும் பார்ப்ப னர்களும் சிறை சென்ற பார்ப்பனர் களுமான எஸ். சீனிவாச ஐயங்கார் டி. எஸ். ராஜன், ராஜகோபாலாச் சாரி, ராமதாஸ் பந்துலு, பாஷியும், போன்ற பிரமுகர்களுமாவார்கள். இவர்களெல்லாம் என்ன சொல்லுகி றார்கள் இங்கிலீஷ் பாஷை கூடாது, இங்கிலீஷ் சாமான்கள் கூடாது என் கிறார்கள்.

ஃஃ ஃஃ

கையொப்பதார்களில் எஞ்சியவர் களைப்பற்றி எதுவும் கூற ஆசைபட வில்லை. ஆனால் எதற்கு ஆசைபட்டு அவர்கள் கையொப்பம் இட்டிருக்க லாம்! என்பதை வாசகர்களே சிந்தி யுங்கள். ஹிந்தி என்றால் என்ன? அது சமஸ்கிருதபாஷையின் ஞாபகம் அல்லது பிரிவு இப்பாஷைக்கும் நம க்கும் என்ன சம்பந்தம். இது அகில இந்திய பாஷையாக இருக்கமுடி யாது என்று எட்டுக்கோடி முஸ்லீம் கள் கூறுகிறார்கள். நமது தலைவர் களும் தனித்தனி கூறியிருக்கிறார் கள். தோழர்கள் சிங்காரவேலு, ராக வன், எஸ். குருசாமி, கைவல்யம், சிதம்பரனார், கே. வி. அழகர்சாமி இவர்கள் எண்ணற்ற கட்டுரை எழுதி விட்டார்கள். இன்னும் பகிரங்கப் படுத்தி வருகிறார்கள். அதை மீண் டும் கூறவேண்டியதில்லை. பிரபல தேசிய பத்திரிகையான மாடன்ரிவி யுவும், ஹிந்தி பொது பாஷையாக இருக்கமுடியாது என்று பலமுறை எழுதி இருக்கிறது. என்றால் நம் மில் சிலர் அதுபொது பாஷையாக வரவேண்டும் அதற்கு பணம் கொடுங் கள் என்று சிபார்சு செய்வது ஞாயம் மானதாகாது. இதுவரையில் இப் பனிரண்டு வருடங்களாய் 4 லட்சம் மக்கள் ஹிந்தி கற்றதாக சொல்லப்

இந்திய சாமான் பிரசாரமா?
பார்ப்பன பிரசாரமா?

மயிலை பார்ப்பனர்களின் புதிய வேஷம்.

(சென்னை ஸ்ரீமதி எ. சுந்தரி எழுதுவது)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

படுகிறதே இதில் இக்கையொப்ப காரர்கள் 50 பெயர்கள் சேர்ந்தவர் கள் அல்லவே? இவர்களில் 3, 4 பெ யர்கள் தவிர மற்றவர்களுக்கு ஹிந்தி எழுத்து எத்தனை என்பதும்கூட தெரியாதே. இந்திய நாட்டுக்குமட்டு மல்ல. உலகபாஷையாகக்கூட இன்று இருப்பது எது? இங்கிலீஷா? ஹிந் தியா?

ஃஃ ஃஃ

கெல்லாக்உடன் படிக்கையும், சர் வதேச மகாநாடும், ஜினிவா ஒப்பந த மும் லண்டன் வட்டமேஜை மகா நாடும், இந்தியசட்டசபை மாகாண சட்டசபை இவைகளிலும் மற்றும் மனிதனுக்கு அவசியம் வேண்டிய சகல இடத்திலும் இன்று பேசப் படும், எழுதப்படும் பாஷை இங்கி லீஷா, ஹிந்தியா? நமக்கு ஒரு பாஷை வேண்டுமானால் அது இங்கி லீஷாகத்தான் இருக்கவேண்டும்? இருக்கவும் முடியும். பிரிட்டிஷ் சர் க்கார் இங்குஇருக்கும்வரை, யூனியன் ஜாக் கொடி பறக்கும்வரையில் பார்ப் பனர்கள் தங்கள் பழய பஞ்சாங்க த்தை கையில் எடுத்து கெங்கைக் குப்போகும்வரையில், மேல் நாடு களுடன் அரசியல் சம்பந்தமாகவும், தொழில் சம்பந்தமாகவும், நாம் கூட் டுறவு வைக்க ஆசைப்படும்வரையில், கல்விசம்பந்தமும், கலைசம்பந்தமும், இங்கிலீஷ்தான் இருக்கமுடியுமே தவிர வேறு ஹிந்தியோ, உருதோ, பொதுபாஷையாக இருக்க முடி யாது என்பதை எவரும் மறுப்பதற்கி ல்லை. என் பார்ப்பான் ஹிந்தி என் கிறான், என் பார்ப்பனர்கள் இப்பொ ழுது மட்டும் நம்மை கையெழுத்து கேட்கிறான் என்பதை சிறிதும் நினை த்துப்பார்த்து ஐயங்கார் கேட்டார். அம்மங்கார் கேட்டார், கவுன்சில் வாசலில் இதில் ஓர்கையெழுத்து போடு என்றார்கள் அதற்காக போட் டேன் என்று பெரியமனிதர்கள் கை யெழுத்து போட்டுவிடுவது பொறுப் பற்ற செய்கையேயாகும். இன்று ஹிந்தியையும், இந்தியசாமானையும், பரப்ப ஏன் பார்ப்பான் கிளம்பி இருக்கிறான் என்பதை சிறிது சிந் தித்தால் இன்று தமிழ்நாட்டில் உண் டாயிருக்கும் பார்ப்பனீய சாவு நிலை மையை போக்கவும், சுயமரி யாதை வெள்ளம் புரண்டோடும் உணர் ச்சியை தடுத்து வேறுவழியில் செ லுத்தவுமே இதை செய்கிறார்கள் என்பது புலனாகும். மீண்டும் கூறு கிறோம், ஹிந்திக்கோ, இந்திய சா மான் என்பதற்கோ, சிபார்சு செய்தால் அல்லது பணம் கொடுத்தால் அல்லது பிரசாரத்து க்கு துணை செய்தால் அது பெரிய சமூக துரோகமாவதுடன் தங்கள் எதிர்கால முற்போக் கான வாழ்க்கைக்கு தாங்களே நெரு ப்பு வைத்துகொண்ட செய்கையு மாகுமென்பதை மட்டும் த மது மதிப் பிற்குரிய பார்ப்பனரல்லாதார்களுக்கு ஞாபக மூட்டுவதுடன் மட்டும் நிற்கிறோம்.

இனி இங்கிலீஷ்சாரரையும்—இங் கிலீஷ் பாஷைகளையும் இங்கிலீஷ் சாமான்களையும் பகிஷ்கரிக்க புறப் பட்டிருக்கும் ஐயர்-ஐயங்கார்-சாஸ் திரி-சர்மா-ராவ் இவர்களை ஒன்று கேட்கிறோம். முதலில் மற்ற பகிஷ் காரங்கள் இருககட்டும். இங்கிலீஷ்கா ரருக்கும் உங்களுக்குமுள்ள தொடர்பை இங்கிலீஷ்காரருக்கும் உங்கள் மாட மாளிகைக்குமுள்ள தொடர்பை, இங் கிலீஷ்சர்க்கார் காரியாலயங்களுக்கும் உங்கள் இரும்புப் பெட்டிக்குமுள்ள தொடர்புகளை அருத்துவிடத் தயா ராக இருக்கிறீர்களா? என்று பகிரங்க மாகக் கேட்கிறோம். இரண்டொரு வர் ஆம் நான் இருக்கிறேன் ! என்று வெளிவந்தால் அவர்களைக் கேட்கி றோம். இதற்கு உங்கள் வீட்டில் சம் மதித்து விட்டார்களா? அன்றி அறு த்துவிட்டார்களா? என்றும் கேட்கி றோம்.

பார்ப்பனரல்லாதாரே உஷார்.

புதிதாகத் தோன்றிய இரண்டு சங் கங்களிலும் முக்கிய மெம்பர்களாக உள்ள பார்ப்பனரல்லாதார் இவர் களை எடுத்துக்கொண்டு சிறிது ஆரா யுங்கள்.

அப்பொழுது உண்மை புலனாகும்.

அங்கத்தினர்களில் பார்ப்பனரல் லாதார்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் எல்லாம் யார்? அத்தனை பேரும்-பரம்பரையாகப் பணக்காரர் கள். ஜமீன்தார்கள், மிட்டாதார்கள், படித்தவர்கள் இவர்கள் இன்று தங்க ளின் குடும்ப பழைய பண நிலைமை யானது செலவிட்டவர்களாகவும், குறைந்து வரும் செல்வம் படைத்த வர்களாகவும், சர்க்காரில் ஏந்த உத் தியோகமும் யேற்று ஓர் 1000 ரூ பாய் கூட வாங்கி அரியாதவர்களாக வும், ஆனால் இச் சர்க்கார் நடக்கும் வருடத்தில் பத்தாயிரக்கணக்காய் வரி கொடுப்பவர்களாகவும் இருப்ப தைப் பார்ப்பீர்கள். அடுத்தாற்போல் பார்ப்பன மெம்பர்களைப் பாருங்கள். பெரும்பாலும் பார்ப்பனர்கள் புதுப் பணக்காரர்களாகவும், பஞ்சாங்கக்கார பார்ப்பனர்களின் பிள்ளைகளாகவும், நேற்றும், இன்றும் வட சர்க்கார் கமிட்டிகளிலும் உத்தியோகங்களி லும் லட்சக்கணக்காய்ப் பணம் பெ ற்று கொழுத்தவர்களாகவும், தங்கள் யோக்கியதைக்கு மேல்பட்ட நிலை மைக்கு வந்தவர்களாகவும் காண்பார் கள். இவ்விரு கூட்டத்தின் தாரதம் மியத்தைப் பார்த்தாலே நம்மவர்க ளின் ஏமாந்த சோணகிரித் தன்மை யும் பார்ப்பனர்களின் அயோக்கியத் தன்மையும் நன்கு புலனாகும். உத்தி யோகத்தின் பேரால் வக்கீலின் பே ரால், சர்க்கார்ப் பணத்தை கெஜாரு வில் வாங்கி, வாங்கி அலுத்துப்போ னபார்ப்பனர்கள் போக இக் கூட் டத்திற்கு முக்கியஸ்தர்களான மூவ ரை உங்களுக்கு அறிமுகப்படுத்தி இதை முடிக்கிறேன். கனம் சி. பி. ராமசாமி அய்யர் இன்று வைசிராய் லார்டுவில்லிங்டன் பிரபுவுக்கு உத் தமத் துணைவராக விளங்குகிறார். இந்திய சமஸ்தான மன்னர்கள் மகா நாட்டுக் கூட்டத்திற்கு தலைமை வகி க்கிறார். தமிழ்நாட்டில் ஓர் சாதாரண பார்ப்பன குமாரரான அவர் இந்திய நாட்டு ராஜாக்கள் மகாநாட்டுக்குத் தலைமை வகிப்பது என்றால் அது எதைக்காட்டுகிறது. எதனால் அப்ப தவி கிட்டியது? நமது மாகாணப் பார்ப்பனரல்லாத தலைவர்களுள் உள்ள சண்டை, முட்டாள்தனம் இவைகளாலும், ஒரு கட்சியார் தங்க ளில் சிலர் நன்மைக்காக சி. பி. யின் போக்குக்கு இடம் ஒழித்துக்கொடு த்தது ஏமாந்ததனமா? அல்லது அவ ருக்கு ஹிந்தியில் உள்ள தீமை, இந்திய சாமான்களில் உள்ள காதல், இங்கிலீஷ்காரர்களிடமுள்ள வெறு ப்பு இவைகளினாலுமா? என்று கேட் கிறோம். அடுத்தபடி மகாகனம் சீனு வாச சாஸ்திரியாரை எடுத்துக்கொள் ளுங்கள் அவரே லண்டனில் சொன் னார்—நான் ஒரு தம்பிடிகூட வரி கட்டுவதில்லை. ஒரு அடி மண் என க்கு சொந்தமாக கிடையாது என் றார். அவர் ஹிந்தி படித்ததாலும், இங்கிலீஷ் காரனையும் சாமான்களை யும் பாஷையையும், வெருத்ததினா லுமா? அவருக்கு மகோன்னதப் பத விகளும், பட்டங்களும் கிடைத்தது, அடுத்தது நமது ஹிந்து ஆசிரியர்:- ஏ. ரெங்கசாமி அய்யங்கார் இவரை உங்களுக்கு நன்கு தெரியும். இம் மூவர்கள் ஐயர்-ஐயங்கார், சாஸ்திரி இம்மூன்று பிரிவு பார்ப்பனர்களே இன்று சுதேசி சங்கத்திலும் ஹிந்தி சங்கத்திலும் அதிகமிருக்கிறார்கள். இவர்களில் சொந்தக்காரர்கள் அத் தனை பேறுமே இன்று மாகாண சர்க் காரிலும், இந்திய சர்க்காரிலும் ஐக் கியமாகாண பெரிய உத்தியோகம் அத்தனைகளையும்கைப்பற்றி வாழ்கிறு ர்கள். இதைகளெல்லாம் நமது கை யொப்பமிட்ட அல்லாதார்களுக்குத் தெரியாதா? இனியாகிலும் சுயநலம்

திறந்துவைப்பார். அத்துடன் மாதர் மகாநாடும் நடைபெறும். அதற்கு முறையே தலைவராக திருமதி எஸ். நீலாவதி அம்மையாரையும், திறப்பா ளராக திருமதி எ. அன்னபூரணி அம்மையாரையும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறதென மகாநாட்டின் கா ரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

கருதியோ, அல்லது பார்ப்பனரல்லாதாருக்குள் ஒருவரை யொருவர் வீழ்த்தவேண்டும் என்ற எண்ணங் கொண்டோ அல்லது செய்கையின் பிரதிபலன் எதுவரை எழைப் பார்ப்பனரல்லாதாரை வாதிக்கிறது என்பதை சிந்திக்காமலே, இத்தகைய செய்கைகளில் தலையிடாமல் இருக்குமாறு கேட்டுக்கொள்வதுடன் இந்திய சாமான்ஹிந்து பிரசாரமென்ற பெயரால் எவர் வந்தபோதிலும்உஷாராய் நடந்துகொள்ளும்படி வேண்டுகிறேன்.

[9-ம் பக்கத்தொடர்ச்சி]

ய்யப்பட்டிருந்தபடி வேறொரு கூட்டமும் நடைபெறவேயில்லை. பிரதிநிதிகளை அதிகமாகக்கொண்ட வேறொரு கூட்டம் கூட்டவேண்டுமென்றிருந்த எண்ணத்தையே திரு. ராஜா விட்டுவிட்டார் என்று நன்கு விளங்கிற்று.

உடன்படிக்கைக்கு உடந்தையானவர்.

ராஜா—மூஞ்சே உடன்படிக்கைக்கு உடந்தையாயிருந்து அதனை நிறைவேற்றிக்கொடுத்தவர் மூவர். அவர்கள் திரு. கவாய், திரு. ஜாதவ், திரு. ராஜா முதலானவர்.

தலைவர்கள் சூழ்ச்சி.

தலைவர்களுடைய அபிப்பிராயங்கள் எவ்வளவு மாறுபாடுகளை அடைந்து கொண்டேவந்திருக்கின்றன வென்பது (நடந்த கடிதப்போக்குவரத்திலிருந்து)நன்குவிளங்கும். அவர்கள்உண்மையிலேயே அபிப்பிராயங்களை மாற்றிக்கொண்டார்களா வென்பதுசந்தேகமாகவே இருக்கிறது. இவ்வளவு பெரிய மாறுபாடு கொண்ட அபிப்பிராயங்களை அவர்கள் அடைந்து வருவதற்கு அவர்கள் என்ன காரணத்தைச் சொல்லக் கூடும்? இவை நாணய உலகத்தை திருப்தி செய்ய முடியுமா? திரு ராஜா வெகு காலமாக தனித்தொகுதியையே ஆதரித்து வந்திருக்கின்றார்.

அப்படியிருக்க அவர் தான் வாக்குரிமைக் கமிட்டிக்கு தனித்த முறையில் அனுப்பிய யாதாஸ்தில் கூட்டுத் தொகுதியைப் பற்றியோ, தனித் தொகுதியைப் பற்றியோ, ஒன்றும் சொல்லாமல் மௌனமாயிருந்து விட்டது கவனிக்கத் தக்கது. அவர் உடன்படிக்கையில்கையெழுத்திடுவதற்கு பத்து அல்லது பனிரண்டு நாட்களுக்கு முன்புதான் அவர் தன் யாதாஸ்தை அப்பியிருக்கிறார். திரு. ராஜாவைப்போலவே திரு. கவாயும் தான் அகில இந்திய தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கத்தின் சார்பாக அனுப்பிய யாதாஸ்தில் தேர்தல் தொகுதி விஷயமாக வேணுமென்றே மௌனஞ் சாதித்து விட்டதாகத் தாமே ஒப்புக் கொண்டிருக்கிறார். கூட்டுத் தொகுதியில் தங்களுக்குள்ள புதிய நம்பிக்கையையும் தீர்மானத்தையும் அவர்கள் நல்ல சந்தர்ப்பத்திலும் என பகிரங்கப் படுத்திக் கொள்ளவில்லை யென்று யாரும் கேட்கலாம்.

சமதர்மம்.

'சமதர்மம்':— ரங்கூனிலிருந்து திரு. ஆர். ராஜகோபால் அவர்களை ஆசிரியராகக்கொண்ட 'சமதர்மம்' என்னும் மாசிகையின் முதல் இதழ் வரப்பெற்றோம். இதில் நவீனமும், முற்போக்கும், சீர்திருத்தமும் கொண்ட தீண்டாமை, சமதர்மம் முதலியன பற்றிய பல கட்டுரைகள் காணப்படுகின்றன. இதன் ஆசிரியர் ஆரம்பித்திருப்பதினின்று நமது இயக்கக் கொள்கைகளை பெரும்பாலும் வற்புறுத்தப்பட்டிருக்கின்றமைகண்டு மகிழ்கிறோம். ஜாதியாலும், சமயத்தாலும், பிறப்பாலும், செல்வத்தாலும் உயர்வுதாழ்வுகள் தோன்றி மக்களை மாக்களாக்கி, அடிமையாக்கி, அல்லலுற்று வருவதைத்தடுக்க, போக்க,மக்களிடம்சமதர்ம உணர்ச்சியைதோன்ற வேண்டியதவசியமே. அத்தகையதோர் உணர்ச்சியை உண்டாக்குவதிலும், வளர்ப்பதிலும் "சமதர்மம்" சமதர்ம நிறை கொண்டு தொண்டாற்ற முயலுமென்ற நம்பிக்கையோடு இதனை முழுமனதுடன் வரவேற்கின்றோம்.

தனிப்பிரதி 0—1—6

கிடைக்குமிடம்:—

மானேஜர்

"சமதர்மம்"

230-30 வது வீதி, இரங்கூன்.

தீண்டாமையைப்பற்றிய அநுபவங்கள்.

இப்பெயர்கொண்ட புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். இஃது திருநெல்வேலிஜில்லாமேலப்பாளையம் திரு. மா: பெ. க. அழகர்சாமி அவர்களால் எழுதப்பட்டதாகும் இதில் தீண்டாமை என்ற அர்த்த மற்ற சொல் உண்டான காலமும், விதமும், அதனால் ஏற்படும்கஷ்ட நஷ்டங்களும் அதை விலக்க வேண்டிய அவசியமும் பற்றி தெளிவாய் விளக்கப் பட்டிருக்கிறது.

இதன் விலை அணா. 0—2—0.

இத்தகைய விவகாரங்கள் எழுந்தமைக்கும், அவை சம்பந்தமாக தனிப்பட்ட ஹோதாவில் எழுதப்பட்ட கடிதங்கள் வெளியிடப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டமைக்கும் விசனிக்கிறேன். (கடிதங்கள் அவசியமாயின் பிரசுரிக்கப்படும். பர்)

இத்தகையவாதத்தைஇழுத்துஇந்தக்கடிதப் போக்குவரத்துவிஷயங்களை வெளியிடச்செய்த குற்றம் என் எதிரிகளுடையது தான் ஆகையால் அவர்களே இவ்விஷயத்திற்கு உத்தரவாதமாகவேண்டும்.

இந்தியாவில் 512 விதவை மணங்கள்.

ஒரு மாதத்தில் நடை பெற்றன.

ஆனல் சென்னையில் நாலு தான்.

1032-ம் வருஷ ஜனவரி மாதத்தில் இந்தியா முழுதுமுள்ள அனேக இடங்களில் 512 விதவை மறுமணங்கள் நடை பெற்றிருப்பதாக லாகூரிலுள்ள வி. வி. எஸ். சபாவுக்குத் தெரிய வந்திருக்கின்றது.

அவைகள் கீழ் கண்ட மாகாணவாரியாக பிரிக்கப் பட்டிருக்கின்றன.

பஞ்சாப் வடமேற்கு எல்லைப்புற மாகாணங்கள், சிந்து	138
ஐக்கிய மாகாணங்களும் மத்திய மாகாணங்களும்	102
பிஹார், ஒரிசா, அல்லாம்	68
பம்பாய்	31
ராஜபுதனம்	38
சென்னை	4

டாக்டர் அம்பேத்காருக்கு ஆதரவு.

3—4—32-ல் திருநெல்வேலி ஜில்லா மேலப்பாளையம் கனேஷ்புரம் எலிமெண்டரி பாடசாலையில் தாழ்த்தப்பட்டவர்களின் கூட்டமொன்று மா. பெ, க. கங்கத்தான் அவர்கள் தலைமையில் கூடியது. கூட்டம் ஏராளமாயிருந்தது. திருவாளர்கள் ஆ. அருணாசலம், மா. பெ. க. அழகர் சாமி, த. லெக்ஷிமணன், பி. எஸ். முத்தையா, சுடலைமுத்து உபாத்தியாயர் ஆகியவர்கள் பொதுத தொகுதியின் மூலம் தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றமடைவரெனக் கருதுவது வீண் ஏமாற்றமென்றும், தனித்தொகுதியின் மூலமே நம் சமூகத்தார் முன்னேற்றமடையலாமென்றும், பிறவும் தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்துக்கான பல வழிகளையும் வெகு தெளிவாக எடுத்துக் கூறினர்கள். முடிவில் அடியில் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. பொதுத் தொகுதியை விரும்பும் திரு. எம். சி. ராஜாவை கண்டிப்பதுடன் எம். சி. ராஜாவைத் தாழ்த்தப்பட்டவர்களின் தலைவரென ஒப்புத்கொள்ள முடியாதென இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

2. திரு. டாக்டர் அம்பேத்கார் அவர்களை தாழ்த்தப்பட்டவர்களின் தலைவரென்றும் தனித் தொகுதியை வற்புறுத்தி வட்டமேஜை மகாநாட்டு வாக்குரிமைக் கமிட்டியின் முன்சாட்சியம் கூறவும் இக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

3. மேற்கூறிய விஷயத்தை தாமதமின்றி வட்டமேஜை மகாநாட்டு வாக்குரிமைக் கமிட்டித் தலைவர் அவர்களுக்கு தந்திமூலம் சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கிறது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

சாரதா சட்டத்திற்கு புதிய ஆபத்து.

ஹைக்கோர்ட்டு தீர்ப்பு.

வசந்த குமாரதாஸ் என்பவர் 11-வயதுக்கு கீழ்ப்பட்ட தமது மகளுக்கு சாரதா சட்டத்திற்கு விரோதமாக விவாகம் செய்ய ஏற்பாடுசெய்திருந்தார். இதை அறிந்த அச்சிறுமியின் தாய்மாமனை பாரிசால் வக்கீல் ஒருவர் அந்த விவாகத்தை நிறுத்த தடையுத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று மனுதாக்கல் செய்தார். அதற்கு இணங்க தடையுத்தரவு பிறந்தது.

விவாகம் நடத்தக்கூடாதென்று தடையுத்தரவு பிறப்பித்திருந்தபோதிலும் விவாகம் நடந்தேறியது, அந்த உத்தரவை மீறி விவாகத்தை நடத்தியதற்காக மணப்பெண்ணின் தந்தையான வசந்தகுமாரதாஸை சிவில் ஜெயிலுக்கு அனுப்ப பேக்கர்கஞ்ச் ஜில்லா நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

ஜில்லா நீதிபதி உத்தரவை ரத்து செய்யவேண்டுமென்று ஹைக்கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தனர். பார்லிமெண்டில் 1780-ம் வருஷம் நிறைவேறிய கிழக்கு இந்திய கம்பெனி சட்டமும், 1797-ம் வருஷம் நிறைவேறிய கிழக்கு இந்திய கம்பெனி சட்டமும் இன்னும் ரத்தாகாமலிருப்பதால், இந்து மதத்தவரான தந்தையொருவர் தனது மகளை விவாகஞ்செய்து கொடுப்பதற்கு இருக்கும் அதிகாரத்தையும், உரிமையையும் மறுக்கவே முடியாதென்று, ஹைக்கோர்ட்டுக்கு விளக்கிக்கூறினர். இந்த அப்பீல விசாரணை செய்த நீதிபதி டி. என். மித்ராவும், நீதிபதி எஸ். கே. கோஷும் பேக்கர்கஞ்ச் ஜில்லா நீதிபதி உத்தரவை ரத்து செய்தார்கள். 'தமிழ்நாடு'

முதல் மகாநாடு.

திருச்சிறுப்பள்ளி ஜில்லா தீண்டப்படாத கிறிஸ்தவர் மகாநாடு 13—4—32-ந் தேதி நடைபெறும். மகாநாட்டிற்கு திரு. எம். தேவிதாசன பி.ஏ.பி.எல். எம். எல். சி. தலைமை வகிப்பார். திரு. சாமி சகஜானந்தம் எம். எல். சி. திறந்துவைப்பார்.

மகாநாட்டிற்குப் பல பிரமுகர்கள் வருவார்களென மகாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவர் திரு. எ. ஆரோக்கியசாமி எழுதுகிறார்.

கோவை சுயமரியாதைச் சங்கம்.

ஷை சங்கத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 3—4—32-ந் தேதி நடைபெற்றது. அதுபோது அங்கத்தினர்கள் பலர் விஜயம் செய்திருந்தனர். பல தீர்மானங்கள் நிறைவேறிய பின் கூட்டம் கலைந்ததை ஒரு நிருபர் எழுதுகிறார்.

(8ம் பக்கத்தொடர்ச்சி)

கழிதலும் புதியன புகுதலும் காலமாறுபாட்டினால் என்பது புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது. நடைமுறையில் அப் பழமொழி அமுலில் நம் நாட்டில் பெரும்பான்மை காணேம். பிற நாட்டிற்கும் நம் நாட்டுப் பழமொழிகள் பூர்ணமாய் அமைகின்றன. காதலிருவர் கருத்தொருமித்து வாழ்வதே குடும்ப இன்பம்" என்பது. நம் நாட்டுக் கவி இதைப் பிரத்தியட்சமாய் பிற தேசங்களிலே பார்க்கலாம். நம் தேசத்தில் காதலிருவர்களில் மனைவிபேயாடுவாள் கோவில்களில். புருஷன் பேய் என்பது ஒன்று இல்லவே இல்லை. மனதில் பெய்து கொள்வது பேய்—தொழிற்பெயர் நிரிந்தது என இலக்கணங் கூற்கொண்டிருப்பான். குழந்தைக்கு சுரம் என்றால் புருஷன் மாந்திரீகன் வீடுநோக்கி ஓடுவான் மனைவி வைத்தியனை அழைத்து வாருங்கள் என்று தலையில் அடித்துக்கொள்வாள். புருஷன் ஆஜானுபாகு என்றால் மனைவி பூங்கொடியாய் இருப்பாள். புருஷன் கல்விக் கடல் என்றால் மனைவி புஸ்தகத்திலுள்ள பக்கங்களைக் கிழித்துக் கற்பூரம், பற்பொடி மடிப்பாள். இன்னும் பல—ஆகவே கருத்தொருமித்த காதலர்கள் நீண்டநாள் மனமொத்து இல்லறம் நடத்துவது நம் நாட்டில் வால் நட்சத்திரம் தோன்றுவது போல எப்பொழுதோ எங்கோ அபூர்வமாய் அகப்படுகிறார்கள்.

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

றப்பட்டது. எல்லா மலையாளி யுவர்களும் சுயமரியாதை இயக்கத்தின் நுண்ணிய கொள்கைகளை யெல்லாம் தன்றுகவும், ஹாஸ்யமாகவும் பேசினர்கள். கனிந்த மொழியும்,கவினுறு தோற்றமும், கூறிய அறிவும், நேரிய உடையுமுடையஅன்பர்களான குஞ்சிராமன், குமாரன், வேலாயி முதலியோர் ஈழுவசமுதாயத்தைச் சேர்ந்தவர்களென்றும், இவர்கள் தெருவில் நடக்கவும், ஆலயத்திற்குள்செல்லவும் அனுமதிக்கப்படாத மதத்தையும் அரசாட்சியையும் நினைந்துநினைந்துகண்ணீர் பொங்கிற்று. ஆ! இக் கொடுமைகளை யொழிக்க இதுவரை நம் நாட்டிலொரு பகவத்சிங்கும் தோன்றவில்லையே என்ற எக்கமுடனிருந்த என் நிலை என்றும் என் வாழ்நாளில் மறத்தற்குரியதன்று. நம் இயக்க முன்னேற்றத்திற்காக இலங்கையில் அரும்பாடுபட்டுவரும் தோழர்களான குஞ்சிராமன் பி. ஏ. குமரன், எஸ். ஆர். முத்தையா, கனகசபைஅருமைநாயகம், பரமசிவம்,ஆறுமுகம்,விஸ்வநாதன், ஒ.கே.முஹியிதீன்,அளகேஸ், சதாசிவம், முத்துசாமி (ஹட்டன்) முதலிய அன்பர்களின் ஊக்கமும் எமக்குச் செய்த உபசாரமும் என்றும் யான் மறக்கத் தக்கனவல்ல. இந்தியர் சுயமரியாதைச் சங்கம் ஆரம்பித்து ஓராண்டு முடியப் போகிறது. அதன் நிறைவு விழாவும் அகில இந்திய சுயமரியாதை மஹாநாடு ஒன்று தோர்களான ஈ. வெ. இராமசுவாமி, இராமநாதன் இவர்கள் தலைமையில் நடத்தவேண்டும். அவர்கள் சமீபத்தில் வரவிடில் இந்தியாவிலிருந்து தக்க கனவான்களை அழைத்து இரு கூட்டங்களும் செம்மைபெற நடத்தவேண்டுமென்றும் பலரும் விரும்புகின்றார்கள். ஐரோப்பாவில் பிரயாணஞ் செய்துகொண்டிருக்கும் நம் தோழர்கள் சமீபத்தில் இங்கு வரமுடியாதென்று தெரிவதால் வேறு தக்கோர்கள் தலைமையில் மகாநாட்டை நடத்த அன்பர்கள் தளர்வுறு ஊக்கத்துடன் வேண்டும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வார்களென நம்புகிறேன். இலங்கையில் யாண்டும் நாளடைவில் நம்மியக்க அன்பர்களின் தொகை பெருகிக் கொண்டேவருகிறது. இவ்வமயம் மகாநாடும் நடைபெற்றால் தக்கோர் பலர் ஆதரவும் ஏற்படும் என்பதையும் உணர்ந்து இலங்கையின் நாட்டுப்புறங்களிலும், யாழ்ப்பாணத்திலுள்ள சுயமரியாதை இயக்க அன்பர்களும், கொழும்பிலுள்ள தோழர்களும் கொழும்பு இந்தியர் சுயமரியாதைச் சங்கத்துடன் ஒத்துழைத்து ஒரு சரியான வரவேற்புக் கழகமொன்று ஏற்படுத்தி இயற்கையிலேயே தன் மதிப்புத் தாண்டவமாடும் இலங்கையில் எங்கும் சுயமரியாதை ஜோதி நிலவச்செய்வார்களாக.

யான் கொழும்பில் கிறிஸ்தவர்கள் நிறைந்த கூட்டங்கள் சிலவற்றில் பேசிய அனுபவத்திலிருந்து பல கிறிஸ்தவ அன்பர்கள் சுயமரியாதை இயக்கம் இந்துக்களுக்காகவே தோன்றிய ஓர் இயக்கமென்றும், அது ஹிந்துமதத்தையே கண்டிக்கிறதென்றும், கிறிஸ்தவ மதத்தைப் போற்றுகிறதென்றும் கிறிஸ்து மதம் பரிசுத்தமான மதம் என்றும் அதை எவரும் குறை கூற முடியாதென்றும் கனவு காண்கின்றனர் என்பதையும் அறிகின்றேன். எனவே நம்மியக்கத்தைச் சேர்ந்த அன்பர்களான பல கிறிஸ்துவாகளின் விருப்பப்படி கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றித் தொடர்ச்சியாக இனிப் பல கட்டுரைகள் வரையத் தவறேன் என்றும் சுயமரியாதை இயக்கம் மக்கள் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருக்கும் மதமோ, வேதமோ, கடவுளோ, புராணங்களோ, அரசாங்கமோ, பழக்க வழக்கங்களோ எல்லாவற்றையும் நிர்மூலமாக்கவே தோன்றி இருக்கிறது என்று பல முறையும் கூறப்பட்டு வருவதை இப்பொழுதும் கிறிஸ்தவத்தோழர்களுக்கு ஞாபகமூட்டுகின்றேன்.

அங்கு நானிருந்தபொழுது, மிஸ்ர போஜன பிரசரண சங்கத்தார், அருந்ததியார் மகாசபை, சண்டி மருத்துவர்சங்கம், ஹட்டன் சுயமரியாதை சங்கம் முதலிய பல சங்கத்தினர் அழைப்பை ஏற்று சொற்பொழிவாற்ற முடியாமற் போனதற்கு மிக வருந்துகின்றேன். அவர்களழைப்பிற்கு நன்றி செலுத்துவதுடன் இன்னும் இலங்கை செல்ல நேர்ந்தால் அவர்கள் எண்ணத்தைப் பூர்த்தி செய்யத் தவறமாட்டேன்.

(தொடரும்,)

நாகையில் சுயமரியாதைத் திருமணம்.

3—4—32 பகல் 11 மணிக்கு நாகைக்கடுத்த அந்தணர்ப் பேட்டையில் தோழர் வி. சாமிநாதன் அவர்களுக்கும், தோழர் திலகவதியார் அவர்களுக்கும் சுயமரியாதைக் கொள்கைப்படி புரோகித மொழிந்த சீர் திருத்த திருமணம் நடந்தேறியது அது போது தோழர் அ, பொன்னம் பலனர் அவர்கள் நீண்டதோர் சொற் பொழிவாற்றினர். திருமணத்தின் போது சீர்திருத்தக் கொள்கையில் ஆர்வமுள்ள தோழர்கள் பலர் வந்திருந்தனர் மணமக்களுக்கு நாகை சுயமரியாதைச் சங்கத்தாரால் ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. அதன் பின் ஓர் சமபந்தி போஜனம் நடைபெற்றது.

மாலை 5-மணிக்கு நாகை வெளிப் பாளையம் கோர்ட்டிற்கு எதிர்த்த மைதானத்தில் தோழர் டி. பி. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடை பெற்றது. தோழர் பொன்னம்பலனர் அவர்களுக்கு நாகை தேச பக்த சமாஜத்தாராலும் நாகை சுயமரியாதைச் சங்கத்தாராலும் உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப் பட்டன. தோழர் பொன்னம்பலனர் அவர்கள் பிறகு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தவர்களுக்கு தனது மகிழ்ச்சியைத் தெரிவித்து விட்டு சுயமரியாதை இயக்கம் சொல்லுவது என்ன என்பது பற்றி சுமார் 3 மணி நேரம் பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இனிது முடிந்தது.

திண்டுக்கல்
கிறிஸ்துவர் மகாநாடு.

ஷ மகாநாடு தஞ்சை தாலூகா திருக்காட்டுப்பள்ளியில் 2—4—32ந் தேதி திரு. ஞானப்பிரகாசம் பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மகாநாட்டிற்குப் பல பிரபலஸ்தர்கள் வந்திருந்தார்கள்.

மகாநாட்டை திருமதி எம். மரகதவல்லி அம்மையார் திறந்துவைத்தார். பின்வரவேற்புக்கழகத்தலைவர் திரு. பிச்சைமுத்து அவர்கள் தமது வரவேற்புப்பிரசங்கத்தைப்படித்தார்.

தலைவர் தமது முகவுரைப்பிரசங்கத்தைப்படித்தார். பலஅன்பர்கள் சொற்பொழிவாற்றினர்கள், பலதீர்மானங்கள் நிறைவேறியது, தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

சென்னை சர்வகலாசாலை செனட்.

சென்னை சர்வகலாசாலை செனட்டிற்கு சேலம் நகர சபை பிரதிநிதியாக திரு. எஸ். ஏ. அய்யாசாமிஅவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கெந்தகமே—ஜீந்தயுகம்.

டாக்டர் T. K. வெங்கிடாஜலம் அவர்களால் அனுபவித்து கைகண்ட கெந்தக ரசாயனம்.

(மாத்திரை ரூபமாய், வெள்ளிக்கவசம் பூண்டது)

கெந்தியின் அருவருப்பான வாசனையையும், காரமான காரலின் தூர்குணத்தையும், மற்ற சேரும் சரக்குகளிலுள்ள குற்றங்களையும் நீக்கி, அனுபவமுறைப்படி தயாரித்தது. ஆண், பெண், பாலியர், விருத்தர்களுக்கும் மேன்மையுற்றது.

வெட்டைவியாதிகள், 21 விதகிரந்திகள், கண்டமாலை, சூலை, அரையாப்பு, மர்மஸ்தான கொருக்கு, இரணம், புத்துவணைகள், தொண்டைத்தூரு, அண்டப்புத்து, பௌத்திரம், சூதகவாய்வு, உதிரவாய்வு,கூயம், குன்மம், 16-ம் ஜன்னி, 13-ம் பக்கவிலா, வாய்வு பிடிப்புகள், பல்புத்து, பல் கிறந்தியும், துவேசமாம், மலச்சிக்கல் அல்லது போக்கு உண்டாகி ஜனிக்கும் வியாதிகளையும், பிரசவ காலங்களில் கட்டிய இடுப்புகட்டு இளம் பிள்ளை வாதங்களையும் சொர்ப்பன உணர்ச்சி இல்லாத, தூரித ஸ்கலித, முதலிய வியாதிகளையும் 21 தினத்தில் பூரணமாய் கண்டித்து, தாது என்னும் நரம்புகளுக்கு சுத்த இரத்தத்தை ஊட்டி முருக்கேற்றும் வல்லமையுடைய தோழன் உந்தி குளிர (கர்ப்ப இரணங்களை ஆற்றக்கூடிய) கோஷாயி கெந்தக ரசாயனத்தை உபயோகியுங்கள்.

3 வாரம் (21 நாள்) உபயோகிக்கும் கெந்தக ரசாயனம் ரூபாய் 6—0—0 உபயோகிக்கும் விதம் மருந்துடன் பாக்கிங் தபால் செலவு வேறு. மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 7—12—0 அனுப்பி வைக்கவும்.

டாக்டர் B. A. எதிராஜ், (கால்ராபைரி)
கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

காதல் உலகம்.

World of Love.

(திருமதி எஸ். நீலாவதி)

வேற்றுமையே உருக் கொண்ட, வஞ்சக மே உருக்கொண்ட பார்ப்பன சமூகத்து நமது சுயமரியாதை வீரர் சுப்பிரமணிய பாரதியார் "நத்தை வயிற்றில் முத்து" என்பது போல் தப்பிப் பிறந்தவராகும். அவர் தோன்றியது கொழுத்த வைதீகப் பார்ப்பன மதத்திலே யெனினும், வாழ்க்கையில் மற்ற வகைகளில் ஒம்பற்ற ஓர் சமரச வாதியாய், சீர்திருத்த வீராய், பகுத்தறிவுக்களஞ்சியமாய், அறிவிற்சிறந்த அண்ணலாய், பெண்நலம் பேணும் பெரியோராய் விளங்கி வந்தார். இது காலே சுயமரியாதை இயக்கம் வற்புறுத்தும் கொள்கைகளே அக்காலத்து நமதறிஞர் அறைந்து போந்ததும் பெண் சமூகத்தை ஆண் சமூகம் ஆக்கி வைத்திருக்கும் கோலங்கள் யாவற்றையும், நமது பாரதியார் எடுத்துக்கூறியிருப்பது ஒவ்வொரு ஆணும், பெண்ணும் ஊன்றிகவனிக்க வேண்டிய தொன்றும். இதுகாலே சுயமரியாதை இயக்கம் பெண்கள் எழுச்சி இவ்வளவு தீவிரமாய் உண்டாகி வருகையில் அப்பெரியார் இருந்து இதில் கலந்து கொள்ளவில்லையே, அப் பெரியாரைக் காணுதற்கில்லையே! என்பதை நினைக்கநெஞ்சம் சிறிது சஞ்சலப்படவே செய்கின்றது. என் செய்வது, கிற்கபெண்ணடிமை கொள்வதில் நமது நாடு ஒன்றே பேர்பெற்றதாகும். இந்த நூற்றாண்டிலேயே இவ்வாயிரத்து தொளாயிரத்து முப்பத்தி இரண்டாவது ஆண்டிலேயே, பெண்களின் உரிமைக்கு உலைவைக்கப்படுகின்ற தென்றால், அப்புறம் வேறென்ன கூறுவது? பெண்களுக்கான ஒவ்வொரு கட்டமும் உறுப்பட வழியில்லாது பாழாய் தானே போய் கொண்டு வருகிறது. ஆ! பெண் சமூகமே விடுதலே யடைவது என்றே? இது இத்துடன் நிற்கட்டும். சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றித் தென்னாடு நன்கறியுமெனவே துணிந்து கூறலாம். அவரது கவிதன் கருத்துக்கள் ஒவ்வொன்றும் பொன்னே போல் போற்றற்குரியதாம். அவர் காதலைப்பற்றி வெகுவாகக் கூறியுள்ளார். சுயமரியாதை இயக்கம காதல் மணத்தைக் கைக் கொள்ளும்படி இளைஞரேறுகளிடம் இடி முழக்கம் செய்கின்றது. அதன்படி சில மணங்களும் நடந்தேறி வருகின்றன. இது காலே நம் நாட்டில் "காதல்" என்னும் வார்த்தையானது மோசமான வார்த்தை யென சிலர் அபிபபிராயப் படுகின்றனர். உண்மையில் காதல் என்பது அன்பு முடிவில் பாடைகட்டி அதைக்கொன்றுபுளிக்கவே வழிதேடுகின்றனர். "காத" லென்னும் பயிரைத்தழைத் தோங்கச்செய்து "இன்ப" மென்னுமகநிர்களே இனிது பெருதுகுறிப் பிட்டபயிரை மாய்க்கச்செய்து, மக்களடிமைத்தனத்தை வளர்த்துவருகின்றர்கள். அடிமை மனத்தில், அடிமைத் தனத்தில் ஊறியிருக்கும் தம்பதிகள் வயற்றில் உதிக்கும்குழவிகள் சுதந்தர வேட்கையோடு மிளிர்வார்களென நம்புதற்குஇடமுண்டா? மணமென்பது நம்நாட்டில் அடிமைத் தனத்திலும், வர்த்தகத்தன்மையிலும, வியாபார முறையிலும், இருந்துவருவதானது எவ்வளவுகொடுமையானது? எவ்வளவு தூரம் வருந்தத்தக்கது? காதலே, அன்பான உள்ளத் தைபாடைகட்டிக் கொல்லுகின்றார், எனபாரதியார் கூறியதில் குற்ற முண்டோ? "மணம்" என்பதுயாருக்காக. எதற்காக. செய்யப்படுவ தென்பதை நம்நாட்டுப் பெற்றோர்கள். உணர்வதே யில்லே. பணத்திற் காக, நிலத்திற்காக, நகைகளுக்காக, சாதிக்காக, சொந்தத்திற்காக, நிறத்திற்காக, பட்டத்திற்காக, மணமுடிக்கும் பெற்றோர் களைத்தான் நம்நாட்டில் காணமுடியும் "நாடகத்திற் காவியத்திற் காதலென்றால், நாட்டினர் தாம் வியப்பெய்தினன்றோ மென்பர்" என்னும் பொன்மொழியில் எள்ளளவும் தவறில்லே! தவறில்லே!! பொதுவாக, பாரதியார்நம் நாட்டுமக்களின் உள்ளக் கிடக்கையை, உணர்ச்சியை உள்ளதுள்ளவாறு ஓதியிருப்பது பாராட்டற்பாலதாகும். சினிமாக்களில் காணும்போது காதலர்கள் மாற்றார் கையில்சிக்கி அவதிப்படுவதைக் கண்டு துக்கப்படுவதும். சுதாகாயகி காயகனேப்பிரிந்து எதிரியினிடம் அகப்பட்டுத் தத்தளித்துப்பின் மீண்டும்சுதாகாயகனால், அக்காதகன் தண்டிக்கப்படும்போது ஆங்கு வீற்றிருக்கும் நமதுவீரப்புலிகள். "போடு போடு" 'குத்து குத்து' சாவு சாவு. என்றுபுரியும் ஆர்ப்பாட்டத்திற்கோர் எல்லையில்லே. முடிவில் காதல்மண, மணமக்கள். உளம்ஒன்று பட்ட மணமக்கள் இன்பங்கடலாடி, இல்லற வாழ்வை இனிதுநடாத்த மலர்மாலே சூடுங்காலையில் யாவரும் சேர்ந்து "ஜே" போட்டு. கரகோஷம் செய்து மணமக்களே வாழ்த்தி மகிழ்கின்றனர். இவர் தம்வீரத்தையும், உணர்ச்சியையும் கண்டதிந்தே பாரதியார் பளிச்சென வெளிச்சமாகும் படிபாடியுள்ளார். வெளியில் காட்டும்வீரம், உணர்ச்சி, தன்னளவில் வந்துவிடின் நமது தேசம்எவ்வளவு செழிப்புடன் விளங்கும்? காதல் மணம் கொலே செய்யப்படுவதால், தான், மக்களிடையே இன்னல்பலவும், அடிமைத்தனமும், விபசாரமும் உண்டாகுகின்ற தென்பது வேடிக்கைப்பேச்சாகுமோ?

"நாடகத்திற்காவியத்திற்
காதலென்றால்
நாட்டினர் தாம்வியப்பெய்தி
நன்றுமென்பர்
ஊடகத்தே வீட்டினுள்ளே
கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றாலு
றுமுகின்றார்
பாடைகட்டி அதைக்கொல்ல
வழிசெய்கின்றார்
பாரினிலே காதலெனும்
பயிரை மாய்க்க
மூடரெல்லாம் பொறுமை
யினால் வித்திகள் செய்தி
முறைதவறியிடரெய்திக்
கெடுக்கின்றாரே"

பார்த்தீர்களா! கவியை! ஆ என்ன அழகு, எவ்வளவு உண்மை! எத்தகையப் பிரத்தியட்சப் பிரமாணம். பாரதியார் கூறுவதில் தவறேதேனு முண்டா? எட்டிலி ருப்பதையும், எதிரில் நடப்பதையும் கண்டு இன்பமடைகின்றனர். ஆனால், இதேசெய்தி தம்மருகில், தம் இல்லில், தம்நாட்டில்நடக்க முயற்சி செய்கின்றார்களில்லே, நடத்தி வைத்திருக்கின்றார்களில்லே. பாரதியார் கூறுவதுபோல் உருட்டல், மிரட்டல் மிகச்செய்து

செனேட் தேர்தல்.

சமீபத்தில் நடைபெற்ற சேனேட் அங்கத்தினர்கள் தேர்தலில் கோவை ஜில்லாபோர்டு உதவி தலைவர் திரு. எஸ். என். பொன்னையா அவர்கள கோவை ஜில்லா பிரதிநிதியாகவும், விருதுநகர்நகர சபைத் தலைவர் திரு. வி. வி. ராமசாமி அவர்கள் ராமனாதபுரம் ஜில்லாப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. வரதராஜலு நன்கொடை.

திரு. வரதராஜலு அவர்கள் தனது ஜனன ஊராகிய ராசீபுரம் வாசக சாலேக்கு நன்கொடையாக ரூ. 1500 கொடுத்துளார். ஷை தொகையானது இச் சங்க அபிவிருத்தியின் பொருட்டு சிலவிடப்படுமென்றும் தெரிகிறது.

லால்குடி தாலூகா 4-வது சுயமரியாதை மகாநாடு.

5—4—32ம் தேதி மாலே 5 மணிக்கு சிறுதையூர், திரு. ஆ. பூமிநாதன் அவர்கள் இல்லத்தில் பெருவளநல்லூர்த்தோழர் பி. பி. கே. பிரசன்ன வெங்கடாஜலம் அவர்களின் கீழ் ஷை மகாநாட்டு வரவேற்புக்கமிட்டிக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது.

(1) லால்குடி தாலூகா 4-வது சுயமரியாதை மகாநாட்டை மே மாதம் 2வது வாரத்தில் நடத்துவதென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(2) மகாநாட்டுத்தலைவராக திரு. டபிள்யூ. பி. எ. சௌந்திரபாண்டியம் எம். எல். சி. அவர்களையும் மகாநாட்டுத் திறப்பாளராக இந்திராணி பாலசுப்பிரமணியம் அம்மையார் அவர்களையும் கேட்டுக்கொள்ளவேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(3) மகாநாட்டு வரவேற்புத்தலைவராக அம்பில் உயர்திரு செல்லப்பா அவர்களையும், மகாநாட்டுக்காரியதரிசிகளாக, பிரசன்ன வெங்கடாஜலமவர்களையும், பூவாளூர் அ. பரமசிவம் அவர்களையும், பொக்கிஷதாராக உயர்திரு. தி. ஆ. பூமிநாதம் அவர்களையும் தேர்ந்தெடுக்கிறது.

(4) மகாநாட்டு வேலைகளைதுரிதமாகஆரம்பிக்கும்படியும்மகாநாட்டை சிறப்பாக நடத்த ஏறபாடு செய்யும்படியும், காரியதரிசிகளை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

காரியதரிசிகள்
பி. பி. கே. பிரசன்னவெங்கடாஜலம்
ஏ. பரமசிவம்.

கிழக்குருவின் லீலா விநோதம்!

ஒரு ருசிகரமானவழக்கு.

ரெவரன்ட்ஹரோல்ட்டேவிட்ஸன் என்ற விசாரணைகுருவின்மீதுகொண்டுவரப்பட்ட (லண்டன்)பெண் சோர வழக்கு விசாரணையில் பலசாக்ஷிகள் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். இரண்டாம்நாள் விசாரணையிலும் மூன்றும் நாள்விசாரணையிலும் சுமார் 17 வயதுள்ள பார்பாரா ஹாரிஸ் என்ற பருவவதி விசாரிக்கப்பட்டாள் அவள்கூறிய சாக்ஷியத்தின் சுருக்கம் பின்வருமாறு:—

"எதிரிஎன்னை வசப்படுத்த சென்ற 18 மாதகாலமாகப்பிரயத்தனம் செய்தும் நான் அவருக்குஇடங்கொடுக்காமல் காலங்கழித்துவந்தேன். எதிரிஎனக்கு வேலைவாங்கித்தருவதாக வாக்களித்தது மன்றி அதற்கான முயற்சிகளையும் எடுத்துக்கொண்டார். அவருடையமனைவிக்கள் குடும்பத்தாரிடம் என்னைஅறிமுகம்செய்துவைத்தார். நான்அவருடைய விடுதியில் சுமார் 10 தினங்கள்வரை இருந்து வந்தேன். ஆனால் நான் அவருடைய வீட்டுவேலைகளைச் செய்ய மறுத்துவிட்டேன். எதிரி தாராளசிந்தை யுடையவர். அன்னியர்கள் ஏதாவது தேவையென்று வந்துகேட்டால் அவர்களுக்குஉதவி செய்யும் தர்ம சிந்தையுடையவர். பிறருக்கு உதவிசெய்வதையேதமது நித்திய கர்மமாகக் கொண்டவரென நான்கூற முடியாது. என்னைச்சில சமயங்களில் எதிரி தம்மார்புறத் தழுவி முத்தமிடும்வழக்கமும் உண்டு

இளமங்கையர் பலரோடு உறவாடும் ரகசியத்தைப்பற்றி நான்நார் விச்பிஷப்புக்கு ஒருகடிதம் எழுதியிருக்கிறேன். மிஸ்டர் டேவிட்ஸன்முதன்முதலாக என்னைச்சந்தித்தபோது அவர்ஒரு விசாரணை குருவெனஎனக்குத்தெரியாது. அவர்ஒருசாதாரண மனிதரெனவே சிலமாதங்களாகக் கருதினேன். எதிரியைப்பற்றி இன்னும் அநேகரகசியங்கள் எனக்குத்தெரியும்."

இந்தவழக்கில் சம்பந்தப்பட்ட விசாரணை குருவுக்கு இப்போது 60 வயதாகிறது. இவர்மீதுகொண்டுவரப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் பின்வருமாறு:—

(1) ரோஹி எல்லிஸ், பார்ப்பார ஹாரிஸ் என்றஇரு பெண்களுடன் சோரம் செய்தார். இவ்விருபெண்களையும் தமது வீட்டுவேலைக்காரிகளைப் போல் நடத்திவந்தார்.

(2) லியான்ஸ் நகரத்திலுள்ளஒரு நாதியிடம் ஒழுங்கீனமாக வார்த்தையாடி அவனைத்தம் கருத்துக்கிணங்கச்செய்ய எத்தனித்தார்.

(3) புளூம்ஸ் பரியிலுள்ள ஒரு விடுதியில் பகிரங்கமாக ஒருபெண்ணைத்தழுவினர்.

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

தாகும். இதுதான் உண்மையான காட்சி (Fact) மற்றபடி நானே சம்பாத்தியம் செய்தேன், நானே சொந்தக்காரன், நானே செலவழிப்பேன், என்று சொல்வதெல்லாம் அகங்காரப்பேச்சு. தனவந்தருடைய சொத்து தங்களுக்கே உரித்து என்று எண்ணுவதும் பிசகே. எப்படிஎன்னில் நடைமுறையில் இந்த சொத்தின் பேரில் பொதுப்பிரயோசனத்திற்கு பலவிதவரிகளைப்போட்டு, பலபேருக்கு உதவும்படி அரசாங்கத்தால் வசூலிக்கப்படுகிறது. வருமானவரி (Income Tax) கஷ்டப்படாலாபவரி (Taxon Unearned income) சாவுவரி (Death-Duties) முதலின் பேரில் வரி (Capital Levy) முதலியவரிகள் மூலமாக தனி உடைமையை உடைத்தெறிந்து வருகின்றார்கள். ஆனால் சமதர்மவாதிகள் வாதமென்னவெனில் இவ்விதமாக வரிகளைப்போட்டு வருமானம் செய்வதைவிட நேரே ஒரேகாலத்தில் எல்லாவித முக்கியமான முதலை (Capital) பொதுவுடமையாக்கிக் கொள்ளக்கூடாதா? என்கிறார்கள்? இன்னொரு சமுதாயக்கட்சியார் முதலை பரிமுதல் (Confiscate) செய்வதைவிட ரூபாயில் 15 அணா வரியாக முதலில் இருந்து வசூலித்துக்கொள்ளலாம். என்கின்றார்கள். இவ்வித அபிப்பிராயங்கள் உலக முழுமையுமே பரவி வருகின்றன. எந்த அபிப்பிராயம் காரியாம்சத்திற்கு உதவுமோ அது அந்தந்த அவசரத்தைப்பொறுத்தது. நாம் சொல்லவேண்டியது என்னவெனில் 'நான் சம்பாதித்தேன்' என்று சொல்வதெல்லாம் வியர்த்தவார்த்தை என்றும் நடைமுறையில் அதை அனுஷ்டிக்க முடியாதென்பதே.

'நான் சம்பாதித்தேன்' என்ற பிடிவாதம் (Dogma) அனுபவத்தில் பலபேர் சொத்தாகப்பாவிக்கப்பட்டு வருவதைக்கண்டோம். 'என் இஷ்டம்போல் செலவழிப்பேன்' என்பதும் ஆணவப்பேசசென்பதை விளக்குவாம். எந்த சொத்தை எடுத்துக்கொண்டாலும் அது பல்லாயிரவர் உதவியால் உண்டாக்கப்பட்டதாக ஏற்படுகிறது. உலக சொத்துகள் (World wealth) இரண்டு வகைத்து. செயப்படுபொருள் ஒன்று, செய்த பொருள் மற்றொன்று. செயப்படுபொருளாவன நிலம், நீர், காடு, மலை, இரும்பு முதலியன. செய்த பொருள் தான்யம், வீடு, வாசல்முதலியன முதல் பொருள் இயற்கையாக இருந்து வருகின்றன. இரண்டாவது பொருள் கைகளால் செய்யப்படுகின்றன. இயற்கையாயுள்ளபொருள்கள் மனிதன் உலகில்தோன்றுவதற்கு முந்தியே இருந்துவருகின்றன. இவ்வகை சொத்துக்கள் யாவருக்கும் சொந்தம். இந்தப்பொதுச்சொத்தை சிலரே கைக்கொண்டபடியால் இயற்கைப்பொருள்களில் முக்கியமாகிய நிலமும், நீரும் காடு, மலை, வனந்திரங்களும், நிலர்வயமேதங்கநேரிட்டது, இதன் நிமித்தம் அவைகளைக்கொண்டு செய்த பொருள்களாகிய தான்யம், வீடு, வாசல், கப்பல், ரெயில் முதலியவைகளும் சிலரிடமே சொந்தமாக்கப்பட்டுவிட்டன. எதார்த்தத்தில் இயற்கைப்பொருளும் செயற்கைபொருளும் உலகப் பொருள்யாவும் பலர் உபயோகத்திற்கே உண்டாயினவேயோழிய ஒருவனே அவைகளைப்கைப்பற்றி அவனும் அவன் சந்ததியாருமே அனுபவிப்பது நீதியுமல்ல; நெறிமுறையுமல்ல; தர்மமுமல்ல; எவ்விதஞாயமுமல்ல. ஆதலின் பலருக்கு வினியோகிக்க வேண்டிய பொருள்கள் பலவற்றையும் சிலரே கையாண்டு வருவதும் அதர்மம். அது, சமதர்மமாகா. பலர் உழைப்பால் அடையும்லாபத்தை அந்த பலரும் அனுபவிக்கும்படி செய்வதுதான் சமதர்மம். ஆனால் உலகில் என்ன நடைபெறுகின்றதெனில் பலர் உழைக்கவும், சிலரே அதன்பயனைக்கைக்கொள்ளவுமாய்விட்டது. இவ்விதம் பலநூற்றாண்டுகளாக பலர் உழைப்பின் பயனை சிலரும் அவர்கள் சந்ததியாருமே அனுபவித்து வருகின்றார்கள். இந்தப்பழக்க வழக்கத்தால் நேரிடும் கெடுதிகளில் சிலவற்றை சற்று கவனிப்போம்.

(1) வியபிசாரம் செய்வதையே தமது தொழிலாகக் கொண்ட அநேக பெண்களின் உறவைநாடி அவர்களோடு சென்ற ஐந்துவருஷமாகக் கூடிக்குலாவி இருந்தார்.

(வீர கேசரி.)

திருச்சி ஜில்லா பிராமணரல்லாதார் மகாநாடு.

திருச்சி ஜில்லா பிராமணரல்லாதார் மகாநாடு இம்மாதம் கடைசி வாரத்திலாகிலும், அல்லதுமே மாதம் முதல் வாரத்திலேனும் திருச்சியில் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஷே மகாநாட்டிற்கு சர்-ஏ. பி. பாத்ரோ தலைவராகவும், மீனம் பள்ளி ஜமீன்தார் வரவேற்புக் கழகத் தலைவராகவும். திவான்பகதூர் சி. எஸ். ரத்னசாபதி முதலியார் அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைப்பவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஷே மகாநாட்டை யொட்டி இளைஞர் மகாநாடும், மாதர் மகாநாடும் நடத்த முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. ஷண்முகம்.

சமீபத்தில் கூடப்போகும் ஒட்டாவா மகாநாட்டிற்கு இந்தியப் பிரதிநிதிகளில் ஒருவராகத் திரு. ஆர். கே. ஷணமுகம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

திருப்பூர் டி. மு. கோர்ட்டில்

1931-ஷ O S No 1007

பல்லடம் தாலூக்கா நெருப்பரிச்சல் கிராமம் மஜரா பொம்மனையக்கன் பாளையத்திலிருக்கும் பாட்டய கவுண்டன் பெண்ஜாதி, பொன்னம்மாள்—வாதி.

பல்லடம் தாலூக்கா செஞ்சேரிபிரிவிலிருக்கும் உருமு நாயக்கன் பெண்ஜாதி—வள்ளியம்மாள் 5-ம் பிரதிவாதி.

ஷை 5-ம் பிரதிவாதிக்கு

ஷை நெம்பரில் 1-ம் பிரதிவாதி ஐயப்ப கவுண்டன் வாதிக்கு நெருப்பரிச்சல் கிராமத்திய சொத்துக்களின் பேரில் எழுதிக் கொடுத்திருக்கும் அடமானப் பத்திரத்தை ரூ 200—0—0-க்கு தாவா செய்து விசாரணை வாய்தா 18—4—32.ல் ஏற்பட்டிருக்கிறது. நீர் பின் அடமானதாரியாக இருப்பதால் ஷை தேதியில் உங்கள் எதிர்வாதத்தைத் தெரிவித்துக்கொள்ளவேண்டியது. இல்லாதபட்சத்தில் ஒரு கட்சியாகத் தீர்மானிக்கப்படும் என்பதைத் தெரிவிக்கலாயிற்று.

(Sd) N. கோபாலராவ்,

வாதி வக்கீல்.

திருப்பூர், 5—4—32.

சுயமரியாதை தத்துவம்

இயக்கப்பிரமுகர்கள்.

திருவாளர்கள், 1. ஈ. வெ ராமசாமி, 2. W. P. A. சௌந்திரபாண்டியம், 3. ஆர். கே. ஷண்முகம், 4. எஸ். ராமநாதன் 5. கைவல்யசாமியார், 6. ஈ. வெ. ரா. நாகம்மாள், 7. இந்திராணி பாலசுப்பிரமணியம். 8. சிவகாமி, சிதம்பரனார், 9. குருசாமி குஞ்சிதம், 10. நீலாவதிராம சுப்பிரமணியம் 11. சுலோசனா பொன்னம்பலனார், 12. சிவானந்தம், 13. அருணகிரிசுந்தரி, ஆகியவர்களின் போட்டோ படங்கள் $6\frac{1}{2}$ X $4\frac{3}{4}$ சைஸ்படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. $8\frac{1}{2}$ X $6\frac{1}{2}$ 1-க்கு 1—0—0. மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு 100க்கு 6—4—0 வீதம்கமிஷன் கழித்துக்கொடுக்கப்படும்.

தனிகாப்பி வேண்டியவர்கள் விலைக்குமேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். விலாசம்:—

பாலு & Co.,

No. 3 ஒப்பணக்காரத்தெரு,

ரோடு,

(4ம் பக்கத்தொடர்ச்சி)

கொள்ளும் நிலைமையில் இருப்பது யாவரும் நன்குணர்ந்ததே. அப்படியிருப்பினும் அமெரிக்காவின் அரசாங்கம் எந்த மதத்தைக் கைப்பற்றி வருகின்றது? எந்த மதத்தைப் பிரசாரம் செய்து வருகின்றது? அவ்வாறு அது ஏதேனும் செய்ய முன் வந்துள்ளதா? ஒருக்காலும் இல்லை. அது பற்றி அமெரிக்க வரசு தன் முக்கிய கடன்களுள் ஒன்றைச் செய்யவில்லையென்றும் அதனால் அது சிறந்த அரசு அல்ல என்றும் கூற முடியுமா? மற்றும் தற்காலத்திய இத்தாலி தேசத்தை எடுத்துக் கொள்ளுவோம் அங்கு தனியாட்சி புரியும் 'இல்டியூஸ்' எனும் முசோலினி (Mussolini) என்பவர் எந்த மதத்தைப் பரப்பி வருதலில் நாட்டமுடையவராயிருக்கின்றார். போப்புக்கும், (Pope) தனக்கும் இருந்த நெடுநாட் சண்டையாகிய ஒருவாறு 1929ம் ஆண்டில் சமாதானம் செய்து கொண்ட போதிலும் இப்பொழுது சிலநாட்டுகளுக்கு முன்வந்த செம்தியின்படி முசோலினி என்னும்வீரர் தன்குடிகளுக்கும்மதத்திற்கும்இருக்கும் சம்பந்தம்தனது ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் குறைக்கக் கூடும் எனவஞ்சி போப்பின் மதப் பிரசாரக்கூட்டங்களை யடக்கி வருவதுடன், தன் குடிகளை மதத்தின் ஆதிக்கத்திற்குக் கட்டுப்படாமல் அதினின்றும் வேறுபட்ட தனது அதிகாரத்துக்குக் கட்டுப்படும் படி செய்து வருகின்றார். ஆகையால் இத்தாலிய அரசாங்கம் இழுக்குடையதென இயம்பற்பாற்றதோ? ஒருக்காலும்இல்லை. உண்மைஎன்னவெனின் அரசாங்கத்தின் உயரிய உண்மையான கடன் மதப் பிரசாரமன்று, லௌகீகத் தன்மையதே யாகும். ஆகவே கிளாட்ஸ்டன் அபிப்பிராயத்தையும் நாம் ஒப்புக் கொள்ளவேமுடியாது.

மதங்களுக்கும், மன்னருக்கும் இயல்பாக ஒருவிதத் தொடர்பும் இல்லையென நாம் இது வரை கண்டோம். அத்தகைய தொடர்பு உண்டு என்னும் அபிப்பிராயம் கொண்டவர்களது கூற்றை யாராய்ந்து மறுத்தோம். ஆனால் உலகச் சரித்திரத்தை நாம் உற்று நோக்குவோமேல் இது வரைக்கும் ஏறக்குறைய ஒவ்வொரு மன்னனும் தன் தேசத்தில் தான் அனுஷ்டித்து வந்த மதத்தைப் பரப்பிக் கொண்டு தான் வந்திருக்கின்றான். மன்னன் இல்லையேல் மதமும் இல்லை என்ற நிலையில் இருந்து வந்திருக்கின்றது. இது காரணம் பற்றித்தான் போலும் திருவள்ளுவர் "அந்தனர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றதுமன்னவன்கோல்"
எனக்கூறியுள்ளார்.

கிறிஸ்துவமதம் உண்டாக்கப் பட்டுச்சில நாள்பரவவொண்ணாதபடி தடுக்கப்பட்டு வந்தும் பின்னர்ஐரோப்பாவிற்பெரும் பகுதியிற்பரவியதற்குக்காரணம் ரோமன் சக்ரவர்த்திகள் அம்மதத்தைக் கைப்பற்றியதேயாகும். ஷார்ளமேன் என்னும் பரிசுத்த சக்ரவர்த்தியும் ஏனையபரிசுத்த ரோமன் சக்ரவர்த்திகளும் (Holy Roman Emperors) ஆதரவளித்ததால் ரோமன்கத்தோலிய மதம் ஐரோப்பாவில் பரவலதுவாயிற்று. மகாஉலூதர் (Luther) என்பவர்ஆக்கிய மறுப்புமதம் (Protestantism) பிராடஸ்டான்டிஸம் என்பது பரவியதற்குக்காரணம் ரோமன் சக்ரவர்த்திக்கு எதிரிடையாக நின்ற பலசிற்றரசர்கள் தமதுமுழு ஆதரவையளித்ததேயாகும்.

இங்கிலாந்திலும் இதேவிதம்தான். எட்டாவது ஹென்ரி இல்லையேல் பிராடஸ்டண்டுமதம் இங்கிலாந்தில் ஒருநாளும் தலையெடுக்கமுடிந்திருக்காதுஎன்பது திண்ணம். அவர்பின் ஒவ்வொரு மன்னனும் அரசியும்தன்தன்மதத்தைப் பரப்ப முயன்றுவந்தும். எலிசபெத் (Elizabeth) மகாராணியின் காலத்தால் ஸ்திரமாக பிராடஸ்டண்டு மதம் நிறுவப்பட்டதன்னியில் அம்மதத்தைக்காப்பாற்றுதலும் வளர்த்தலும் ஆங்கில அரசாங்கத்தின் கடமைஎன்றுஏற்படுத்தப்பட்டதால்தான் அதுஇன்னும் அங்குநீடித்தும் தலைசிறந்தும் வரஎதுவாகின்றது. இவ்வாறேதான் ஐரோப்பாவிலுள்ள எல்லாத்தேசங்களிலும். ஸ்பெயின், போர்ச்சுகல் முதலியதேசங்கள் ரோமன் கத்தோலிய மதத்தைப் பின்பற்றிவரின் அதற்குக் காரணம் அத்தேசத்து மன்னர்கள் அம்மதத்தினராய் இருந்துவந்ததும் அன்றி அதைப்பரப்பியும் வந்ததேயாகும். டென்மார்க்கு, ஸ்வீடன், ஜர்மனிமுதலிய தேசங்கள் பிராடஸ்டண்டு மதத்தைப்பின் பற்றக்காரணமும் அத்தேசத்களின்மன்னரே.

உலகத்திலும் இந்தியாவிலும்முகமதியமதம் பரவியதற்குக்காரணம் மன்னர்களே. இவ்வொரு விஷயத்தைச்சற்றுகவனித்தால் ஒருமதம்பரவ ஒருமன்னன் எவ்வளவு அவசியம் என்பது நன்குவிளங்கும். அதாவது பொதுவாக கிறிஸ்துவமதத்தையனுசரிக்கும் ஐரோப்பியர் உலகத்தில் எல்லாத்தேசங்களிலும் ஆதிக்கம்சொலுத்திவருவதால் கிறிஸ்துவமதம் உலகத்தில் எல்லா விடங்களிலும் பரவியிருக்கிறது. ஆனால் முகமதிய மதம்மட்டும் எகிப்பது தேசம், துருக்கிதேசம், அரேபியர், பெர்ஷியாஆப்கனிதான், இந்தியாமுதலிய இடங்களில் மட்டும் இருந்து ஏனைய இடங்களில் இல்லாமல் இருக்கக் காரணம்என்ன? அது ஏனைய நாட்டுமன்னர் அதையனுஷ்டிக்காததும் இத்தேசங்களில் மட்டும்ஆண்டுவந்தமன்னர் அதைக்கையாண்டுவந்ததுமேயல்லவா? ஆகஇந்தியாவில் முகமதியமதம் பரவக்காரணம்அரேபியாவிலிருந்து வந்ததுருக்கிமன்னர்களும்மற்றமெளலாயமன்னர்களுமே.

நம்இந்துமத மன்னர் ஆண்டுவந்தபோதும் இவ்வாறேதான். பௌத்தமதம் இந்தியாவில் பரவக்காரணம் அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர் முதலிய வேந்தர்களே. அதேமதம்சீனதேசத்திலும் ஜப்பான்தேசத்திலும் இலங்கையிலும் பரவக்காரணம்அவ்வக்காலங்களில் அவ்வத்தேசங்களை யாண்டுவந்த மன்னன் அம்மதத்தைப் பரப்பமுன்வந்ததேயாகும். நம்தமிழ் நாட்டில், சைவம் பரவச்சுந்தரபாண்டியர் போன்றவரெயன்றி ஏனைய சேர. சோழ. பாண்டிய மன்னர்களே காரணம். பல்லவ அரசர்கள் பலரால் தான்சமணம் பரவியது. இங்கு வைணவமும் அத்தகைய வேந்தின்ஆதரவால்தான் நிலைபெற்றது? குலசேகரன்போன்றமன்னர் அதைப்பரப்பினர்.

இதைத்தான் நாம் சரித்திரவாயிலாகக்காண்கிறோம். ஆனால் நம்மைப் பொறுத்தமட்டில் நாம் இதற்காக மகிழ்வு அடையும் நிலையில் இல்லாமல்இருப்பதுமன்னியில் அதற்காக நாம்மிகவும் வருந்துகின்றோம். எனெனில் அவ்வாறு 'உலகத்தில் உளள பலமதங்களையும் ஒவ்வொரு தேசத்தின் மன்னரும் பரப்பிவந்ததனால் ஒருசில நன்மைகள் உண்டு என்றாலும் அதனால் மதங்களுக்கும் அவைகளின் உண்மைக்கும், மனித சமூகத்திற்கும், அதன்முன்னேற்றத்திற்கும் விளைந்துள்ள தீமைகளும், நஷ்டங்களும் எண்ணிறந்தன. எவ்வாறு இத்தகைய தீமைகள் விளைந்துள்ளன வென்பதைக் கீழேயாராய்வோம். ஆகவேநாம் இதுவரையும் கண்டுவந்த தன்முடிவு என்னவென்றால், ஒருஅரசாங்கம் ஒருமதத்தைப் பரப்பவேண்டும் என்னும் கொள்கை, அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஒவ்வாதிருப்பதென்பதும்; அவ்வாறு ஒவ்வாது இருத்தலால் அம்மதப்பிரசாரம்ஒரு முக்கியமான அரசின்கடன்களுள் ஒன்றுஅல்ல வென்பதும்; இதுஇவ்வாறுஇருப்பினும் உலகத்திலே நாம்கண்டு வருவது என்னெனின்ஒவ்வொரு மதமும் பரவக்காரணமாயிருப்பது ஒருமன்னனே என்பதும்ஆகும். இதுசம்பந்தமாக சதே, கிளாட்ஸ்டன் முதலிய வர்களது கொள்கையை யாராய்ந்ததில், அவ்வாறு ஒருஅரசாங்கம் ஒவ்வொருமதத்தையனுஷ்டிப்பதாலும், அவ்வாறு அனுஷ்டித்தமதத்தைத்தன் குடிகளிடம்பரப்புவதாலும் ஒருவிதநன்மையும் விளையஇடமில்லை யென்றும் நன்குதெளிந்தோம். ஆகஇனிப்பின் வரும் கட்டுரையில் அவ்விதசம்பந்தம்அரசாங்கத்திற்கும் மதத்திற்கும் இருந்துவந்ததால் விளைந்துள்ள தீமைகள் பலஎன்றுகாட்டுவோமாகில், அரசாங்கம் எம்மதத்தையும் நினையாமற் கூடத்தன் வேலையைச் செய்துதன் கடனேயாற்றிச்செல்வதே அரசாங்கம், மதம், மக்கள் யாவருக்கும்நன்மையைப் பயக்கும்பாற்றது என்னும் உண்மையை நிலைநிறுத்திய வராவோம் என்று நினைக்கின்றோம்.

(தொடரும்)

மதுரை சமபந்தி போஜனம்.

20-2-32ஞாயற்றுக்கிழமைபகல் 1 மணிக்கு ஷெசங்க ஆதரவில் தோழர் எஸ். ஜி. தஸ்தகீர்அவர்கள்பங்களாவில் ஒரு சமபந்தி போஜனம் நடைபெற்றது. அதுசமயம் ஜாதி மதபேதமின்றி சகலரும் சுமார் 300 பெயர்கள் ஆதிதிராவிட சகோதரர்களால் பரிமாரப்பட்ட அருசுவை உணவை உட்கொண்டார்கள். சாப்பாடு வெகுநேர்த்தியாக தயார்செய்யப்பட்டிருந்தது. சாப்பாடு முடிந்தும் தோழர் எ. பி. முகம்மதுசுல்தான் எம். ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் ஒருகூட்டம் நடந்தது அதுசமயம் டாக்டர் எஸ். ஜி. தஸ்தகீர்அவர்களும், எஸ். வி. தொந்தி எ. கோவிந்தசாமி, எஸ். ரெங்கசாமி, எஸ். வி. பி. என். எஸ். தங்கமணி முதலியபிரபலஸ்தர்கள்,சங்கக்கொள்கைகளைப்பற்றியும் இனியும் இதேமாதிரி சமபந்தி போஜனத்தையும், கலப்புமணம், விதவாவிவாகம் முதலியவைகள் சங்கத்தார் செய்துவைக்கஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும், சமத்துவகொள்கைகளைப் பரப்ப ஒருசமத்துவ ஹோட்டல் திருவேண்டிய அவசியத்தைப்பற்றியும் பேசிமுடித்தார்கள். தகவர்முடிவுரைக்குப்பின் காரியதரிசி ஏ. என். வெங்கிடசாமி அவர்களால் சமபந்தி போஜனம் நடத்தஇடம தந்துஉதவிய எஸ். ஜி. தஸ்தகீர் அவர்களுக்கும்ஷிஇடத்தை சுகாதாரத்துடன் வைக்கஏற்பாடு செய்த நகரசபை தலைவர் எஸ். பொன்னுசாமி அவர்களுக்கும் தலைமைவகித்த ஏ. பி. முகம்மது சுல்தான் அவர்களுக்கும் வந்தேமாதரம் கூறகூட்டம் இனிதுமுடிந்தது எனஒருநிருபர் எழுதுகிறார்.

நாகர்கோவில் சுயமரியாதை இளைஞர் சங்கம்.

19-3-32 தேதி யன்று மாலை 6-மணிக்கு சுயமரியாதை இளைஞர் சங்கத்தின் இரண்டாவது பிரசாரக் கூட்டம் தோழர் சி. எஸ். வேலாயுதம் பி. ஏ., அவர்கள் தலைமையின் கீழ் கோட்டாற்றில் வைத்து நடைபெற்றது. காரியதரிசி நிகழ்ச்சிக்குறிப்பு வாசித்த பின்னர் தலைவர் பல அறிய விஷயங்களைப்பற்றிப் பேசியபின்னர் தோழர்கள் ஆர். மாடசாமி, எஸ். பூதலிங்கம், திரு. கிருஷ்ணபெருமாள் முதலியோர் பேசினர். தலைவர் முடிவுரையாகப்பேசும்போது நாகர்கோவிலில் சுயமரியாதை இளைஞர் சங்கத்தின் சார்பாக ஒரு சமபந்தி போஜனம் வைக்கவேண்டுமென்றும் சந்தா 4-அணைவைத்து வசூலிக்கவேண்டுமென்றும் கூற காரியதரிசியின் நன்றிகூறலோடு கூட்டம் 6-மணிக்கு முடிவுற்றது என காரியதரிசி எஸ். கிருஷ்ணன் தெரிவிக்கின்றார்.

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

அங்கீகரிக்காத கடவுளுக்கு ஜனனுய கத்துவம் தெரியுமென்று சொல்லுவது எப்படி?

நாகரீக உலகத்திலுள்ள ஜனனுய கத்துவங்களிலெல்லாம் ரஷியாவின் ஜனனுயகத்துவத்தை விசேடமாகச் சொல்லுகிறார்கள். அந்த ரஷியாவை ஆண்டுவருவது "ஸ்ற்றூலியன்" என்னும் பெயரையுடைய வண்ணுனும். நமது கடவுள்களில் பெரிய கடவுளான மீனுட்சிசுந்தரேஸ்பரர் சந்நதிக்கு வெளிப் பக்கம் ஒரு வண்ணுர் போனதற்கே கடவுள் தீட்டுப் பட்டுவிட்டதென்று தீட்டைப் பரிசுத்தம் செய்ய வண்ணரிடம் பத்தரை ரூபாய் வாங்கப்பட்டதென்றுல் நமது கடவுளுக்கு ஜனனுயகத்துவம் தெரியுமா? நாகரீக உலகத்தில் பொதுக் கடவுளின் ஜனனுயகத்துவத்திற்கு வண்ணுனே முதன்மை பெற்றிருக்கிறுர். நமது கடவுள் சந்நதிக்கு வண்ணுர் வந்தால் கடவுள் தீட்டுப் பட்டுவிடுகிறது. இந்த நமது கடவுளுக்கு இப்பொழுதுள்ள ஜனனுயகத்துவம் தெரியாது என்பதற்கு இதைவிட சாட்சி என்னவேண்டும்?

எனப்பா தம்பி நீ சொன்னது நியாயத்திற்கு ஒத்திருந்தாலும் நமது கடவுளுக்கு ஜனனுயகத்துவம் தெரியாதென்றும், சம்மதமல்லவென்றும் சொல்லுவது சரியல்ல. எப்படியெனில் நமது கடவுள் பல ஜாதியில் பிறந்தார். ஜாதி பாராமல் பல பெண்களை மணந்தார், ஞானசம்பந்தருக்கு அம்பாள் பால்கொடுத்தது போலவே பரமேஸ்பரன் பன்றிக்குட்டிக்கும் பால்கொடுத்தார். கரிக்குருவிக்குக் கடாட்சித்தார். நாரைக்கு முத்தி கொடுத்தார். மலைஜாதிப் பெண்ணை மணந்துகொண்டார். மகனுக்கு வேடன் வீட்டில் பெண்ணெடுத்தார். பள்ளன் வீட்டிற்கு பந்துவானுர். சங்கராச்சாரிக்குப் பறையனுக வந்து ஞானம் உபதேசித்தார். அவர் மைத்னரான இன்னெரு கடவுளோ ராஜா வீட்டில் ராமராகப் பிறந்தார். குலம் கோத்திரமில்லாமல் யாரோ பெற்று மண்ணில் போட்டுவிட்டுப் போன பெண்ணை மணந்துகொண்டார். வேடனை குகன், குரங்கான சுக்கிரீவன் ராட்சதனை விபூஷணன் இவர்களைத் தம்பியாக அங்கீகரித்துக் கட்டித் தழுவிக்கொண்டார். சடாயு வென்னும் பட்சியைத் தகப்பனுகக் கொண்டு கொள்ளியும் வைத்தார். பின் இடையன் வீட்டில் பிறந்தார். ஆணும் பெண்ணும் அழுலுக்கு அருகதையானென்றுர். பின் பௌத்தராகவந்தார். ஜாதியில்லை எல்லாரும் சமம் வேதவேள்வியின் புரட்டெல்லாம் வெட்டவெளியாக்கினர். பின் ராமானுஜமாக வந்தார். பார்ப்பானுக்கும், பறையனுக்கும் மோட்சவாசல் ஒன்றேயென்றும் அது எல்லாருக்கும் திறக்கப்பட்டிருக்கிறதென்றும் சொன்னர். இப்பேர்ப்பட்ட நமது தெய்வங்களுக்கு ஜனனுயகத்துவம் தெரியாதென்று எப்படிச் சொல்லலாம்.

என் அன்பான அண்ணு! தாங்கள் சோன்ன அந்தச் சாமிகளெல்லாம் கோவிலுக்கு வெளியிலுமுள்ள சுவாமிகளல்லவா? எட்டிலும் ஏமாற்றவும் ஏற்பட்ட சுவாமிகள்தானே? கோவிலுக்குள் உள்ள சுவாமிகள் பார்ப்பார ஜாதியாகவல்லவா இருக்கிறது. சுவாமிகள் வெளியில் போய்வந்தால் தீட்டுப்பட்டுவிட்டதாக பிராயச்சித்த முண்டே. பார்ப்பாருக்குச் சோறும் தெட்சணையும் கொடுத்தால்தான் சுவாமி சுத்தியாகிறதே, நந்தன் அக்கினியில் குளித்துப் பார்ப்பார ஜாதியாக வந்ததுபோல சுவாமி கோவிலை விட்டு வெளியில்போய் பள்ளனுலும் பறையனுலும் காடைக் கருக்குருவி கௌதாரியாலும் கோவிலுக்குள் வருகையில் பிராயச்சித்தம் செய்துகொண்டு பார்ப்பார ஜாதியாக வல்லவா ஆகிவிடுகிறது. அந்தசுவாமி என்ன சுவாமி அண்ணு, இதை நாளைச்சொல்லுங்கள் இன்று நேரமாகிவிட்டது.

சமதர்ம சங்கம் கொன்னூர்.

சென்னை, கொன்னூர் மேலேயம் பதி சமதர்ம சங்கப்பொதுக் கூட்டம் 28—2—32 ஞாயிரன்று கைவல்ய கலாசாலேயில் நடைபெற்றது. ராபர்ட் அக்கிராசனம் வகித்தார். 21—2—32ல் கூடிய சப் கமிட்டியின் தீர்மானப்படி சங்க அங்கத்தலைவர்களை அவரவர்களின் அபிப்பிராயப்படியும், பொது அபிப்பிராயத்தின் படியும் தலைவர்கள் ஏக மனதாகத்தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதுபோது திரு. டி. ஜ. தியாகராஜ் அவர்கள் 'சங்கம்' என்பதைப்பற்றியும் அதின் ஒழுங்கு முறைகளைப்பற்றியும் அறிய கருத்துக்களுடன் சுருக்கவுரை ஆற்றியபின் தலைவர் உயர்திரு ஆர் டி. ஜயாக்கண்ணு அவர்களால் மக்களின் முன்னேற்றத்தைக் குறித்து மற்ற நாடுகளெல்லாம் நாகரீக முன்னணியில் நின்றதற்கு வாலிபர்களின் நன் முயற்சியே காரணமாயிருக்கின்றபடியால் நாகரீக உலகமாகிய இவ்விருபதாம் நூற்றுண்டிலே சுதந்திரம் சுயமரியாதை பெற்று முன்னடைய வேண்டுமாலுல் வாலிபர்களின் முயற்சியே அவசியமாயிருக்கிறதென்ற கருத்தோடு சொற்பொழிவாற்றியபின்; இன்று தேர்ந்தெடுத்துள்ள சங்கத் தலைவர்கள் துரிதத்தில் கூடப்போகும் பகிரங்கக் கூட்டத்தில் ஆமோதிகப்படல்வேண்டுமென்ற தீர்மானத்துடன் கூட்டம் கலேந்ததென ஒரு நிருபர் எழுதுகிறுர்.

மலையாளம் சில்க்.

2½ வீதி 5-நீளம்பட்டு 1க்கு ரூ. 1-8-0
ஷிகம்பிக்கரை டஜன் 1க்கு ரூ. 15.
3-வீதி8-நீளடவேஷ்டி 1க்குரூ. 3-8-0

S. K. R. வீவிங் பாக்டரி,
கோட்டார் திருவிதாங்கூர்.

வீசாணம்

ஆதிதிராவிடவாலிப இரண்டாவது மகாநாடு.

ஷை. மகாநாடு 13-3-32ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலே 3-30 மணிக்கு நாமக்கல் தாலூக்கா வீசாணம் ஆதிதிராவிடத்தெருவில் சேலம் ல்லா கல்வி அதிகாரி கனம் டி. பி. கிருஷ்ணசாமி எம். ஏ., பி. எல்., அவர்களின் தலேமையில் நடை பெற்றது. அது சமயம் பல பிரபலஸ்தர்கள் வந்திருந்தார்கள். சங்கக்காரிய தரிசி அவர்களால் மகாநாட்டின் தலேவருக்கு ஒருவரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. தலேவர் முகவுரையாக சில விஷயங்கள் பேசிய பின் பல அன்பர்கள் பேசினர்கள். பின் தலேவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் கலேந்ததென ஒரு நிருபர் எழுதுகிறுர்.

உங்கள்
கண்ணேயும்
காதையும்
கவனித்துக் கொள்ளுங்கள்
பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை அபாயத்தை இல்லாமல் சகப்படுத்தப்படும் நிலைமை எவ்வாறு திருப்பாமை நான்கு வரைகளில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லே. காதுரைச்சல், தலேவலி இருந்தாலும் அக்கரையில்லே. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். தூணத்திற்கு உத்திரவாதம்.

விடரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St Calcutta,

பெற்றோர்களே!
கவனியுங்கள்.

உங்கள் குழந்தைகளுக்குகுலேக் கட்டி வயிற்றுக்கட்டி என்ற அபாயத்தினின்று நிச்சயமாய் குணப்படுத்தும் கைகண்ட மருந்து தெரியுமா? பிரசுத்தி பெற்ற விஜய நகரம் டாக்டர் ஜம்மி வியாசராவ் அவர்களிடமும்
(விஜயநகரம் B. N. Ry.)
M. கல்யாணசுந்திரம்,
74 பட்டமங்கல தெரு மாயவரம்.
ஏஜண்டு & ஆர்கனைசர் என்ற இடத்திலும் கிடைக்கும்.
தமிழ் நாடெங்கும் ஏஜண்டு தேவை. ஆர்கனைசருக்கு உடனே எழுதவும்.

"செவிடு"

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது "சமத் எண்ணெயே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலே ரூபாய் 1—4—0.

1 பாட்டில் டிராப்பர் உள்ளட விலே ரூபாய் 1—8—0.

3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இலும். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons,
Pilibhit R. K. Ry., U. P.

LEPROSY, LEUCODERMA, PATCHES SYPHILITIC ERUPTIONS, ECZEMA, etc.

No Matter Hereditary or self-acquired. No risk of injection. Cured absolutely. For particulars please write with detailed descriptions of the disease in English.

Post Box No. 11418,
Calcutta

"சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம்கட்டுரைகளும் தொடர்ச்சியாக வருகின்றன.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர்:
சுவாமி சிவதேசிகர்,
"சன்மார்க்கன்" பழனி.

போருள் செய்வகையும்
அனுபந்தமும்
விலே ரூபாய் ஒன்று

வியாபார சம்மந்தமான பல ரகசியங்களே உடையது வியாபாரத்தில் அனுபவம் இல்லாதவர்கள்கூட ஷை புஸ்தகத்தின் ஆதரவைக்கொண்டு அதிக பணம் சம்பாதிக்கலாம். ஷை அனுபந்தத்தில் புக்கிப்பிங் ஒற்றை பதிவு (Single entry) இரட்டை பதிவு (Double entry) என்னும் இரண்டு பாகங்களும் அடங்கியிருக்கின்றன. வியாபாரிகளுக்கும் கம்பெனி உத்தியோகஸ்தர்களுக்கும் மாணுக்கர்களுக்கும் மிகவும் பிரயோஜனமானது.

பு. கோபால் கெட்டியார்,
123 ஈஸ்வரன் தர்ம ராஜா
கோவில் வீதி, புதுச்சேரி.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
3.	சுதந்திரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
4.	பகுத்தறிவேவிடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ...	0—6—0
5.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
6.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
7.	சென்னை லொக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—0
8.	மோட்டார்க்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ...	2—0—0
	ஈ. வெ. ராமசாமியின் போட்டோபடம் ...	0—8—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாமிகளின் அடிமைகள் ...	0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,

ஈரோடு.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

"தமிழன்"

மலாய் நாட்டு சுயமரியாதை

தமிழ் தினசரி.

உள்நாடு மாத சந்தா $ 1, 00.

வெளிநாடு ,, இந்தியா $ 1, 50,

ஆசிரியர்:—சுவாமி அர்புதானந்தா.

விலாசம்:—மானேஜர் "தமிழன்"

10, ஜெல்ப்ரோட், ஈப்போ.

"சண்டமாருதம்"

சுயமரியாதைத் தமிழ் தினப்பதிப்பு.

அனேக தந்தி செய்திகள்
அச்சமற்றகண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
நுகிகரமான குறிப்புகள்
தேனின் இனிய "திரட்டுப்பால்"
நகைச்சுவை மிக்க நாவல்கள்
மெய்கூச்செறிக்கும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டநிக்கு"

முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விபரம்.

உள்நாடு மாத சந்தா	ரூ. 1—4—0
தனிப்பிரதி ...	ரூ. 0—0—9
வெளிநாடு வருட சந்தா	ரூ. 18—0—0
ஆறுமாதம் ...	ரூ. 10—0—0

மானேஜர்
"சண்டமாருதம்"
திருச்சிராப்பள்ளி.

Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணை. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணை. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணை. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணை. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணை. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறாம் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணை. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணை. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணை. 0—2—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணை. 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணை 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணை 0—3—0

பங்களும் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணை 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும் நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணை 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன விலை அணை 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணை 0 2—0

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ். ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீதாராமையா வும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணை 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.